11th March 1955]

(2) DEMAND XXII—HARIJAN UPLIFT

THE HON. SRI B. PARAMESWARAN :—" Mr. Speaker, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,09,36,600 under Demand XXII—Harijan Uplift.' "

MR. SPEAKER :—" Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,09,36,600 under Demand XXII—Harijan Uplift.'

" This being an important Demand, I am allotting six hours for discussion. No other Demand has been allotted such a long time. Barring this Demand, I think the Demand under Education has been allotted the highest time for discussion, namely, four hours. As all Members irrespective of the parties to which they belong and without any distinction of caste or creed have requested me to allot a longer period, I have allowed six hours for debate under this Demand. The Hon. Minister will reply to the debate at 6 p.m. Each hon. Member will be given 10 minutes to speak."

SRI M. KALYANASUNDARAM :—" Mr. Speaker, I move—

'That the allotment of Rs. 1,09,36,600 under Demand XXII—Harijan Uplift be reduced by Rs. 100.'

" நான் இந்த வெட்டுப் பிரேரணையைக் கொடுத்துப் பேச நிற்பதின் நோக்கம் என்னவென்றால் மந்திரி அவர்கள் கோரக்கூடிய தொகையைக் குறைக்கவேண்டும் என்பதற்காக அல்ல. இன்னும் அவர்கள் அதிகமாக இந்த மான்யத்திற்குப் பணம் கேட்கவில்லையே என்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான் இந்த வெட்டுப் பிரேரணையை நான் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

" நிதி ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய சில அம்சங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த மான்யக் கோரிக்கைக்கு 'Harijan Uplift' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பது சரிதானா என்பது ஆச்சரியமாக இருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் 'ஹரிஜன முன்னேற்றத்திற்காக இருக்கக் கூடிய கோரிக்கை' என்பதுபோல் தெரிகிறது. மந்திரி அவர்கள் நிதி கேட்க முன் வரும்போது எந்த நோக்கத்தோடு கேட்கப்பட்டதோ அந்த நோக்கத் திற்காகவே அது செலவிடப்படவேண்டும். ஆனால், இதில் ரூ. 1,09,36,600 என்று பெரும் தொகை காட்டப்பட்டிருந்தாலுங்கூட அதில் சேர்க்கப்பட்டி ருக்கக்கூடிய இனங்கள் ஹரிஜன முன்னேற்றத்திற்காக மட்டும் பிரத்தியேக மாக இல்லாத பல அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

" கள்ளர், குறவர் முன்னேற்றம், சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய அஜீஸ் நகரப் பராமரிப்பு, பிற்பட்ட இனத்தவர்களுடைய முன்னேற்றத் திற்காக ஒதுக்கக்கூடிய தொகை இவைகளெல்லாம் சேர்க்கப்பட்டு 'ஹரி ஜன முன்னேற்ற மான்யம்' என்று கோரப்படுகிறது. இவையெல்லாவற் றையும் இந்த மான்யத்தில் சேர்த்திருப்பது முதல் தவறு. யார் யாருக்கு எவ்வளவு நன்மை செய்யப்படுகிறது என்று புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் வைத்து ஹரிஜனங்களும் பிற்பட்ட இனத்தவர்களும் ஒருவரை ஒருவர் தப்பாக புரிந்துக்கொண்டு சண்டை போடுக்கொள்ளக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

[Sri M. Kalyanasundaram] [11th March 1955

"ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், பிற்பட்ட இனத்தவர்களுக்குப் போதுமான தொகை ஒதுக்கப்படவில்லையென்றும் புகார்கள் அடிக்கடி கேள்வி நேரத்தின்போது வருவதைப் பார்க்கிறோம்.

"இரண்டும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருப்பதினால் பிற்பட்ட இனத்தவர்களுக்காக என்ன வருகிறது, ஹரிஜனங்களுக்காக என்ன செய்துகொண்டிருக்கிறதென்பதைப்பற்றி தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு முடியாதபடி இருக்கிறது. ஹரிஜனங்களுக்காக ரூ. 1,09,36,600 ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும், சென்ற வருஷங்களில் ஒதுக்கிய தொகையோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வருஷம் ஒதுக்கியது அதிகம் என்றும் சொல்லிக் கொள்வதற்கு ஒருவேளை பிரயோஜனப்படுமேயொழிய, நன்றாக ஆராய்ந்துப் பார்த்தால் அத்தகைய நிலைமை இல்லையென்பதைப் புரிந்துகொள்ளலாம்.

"ஹரிஜன முன்னேற்றத்திற்காகச் செலவிடப்படும் தொகையைப்பார்த்தால் ஹரிஜன முன்னேற்ற இலாகாவினுடைய கொள்கையைப் புரிந்து கொள்ளலாம். சர்க்காரிலே நடத்தப்படும் ஹாஸ்டலுக்கு ஆகும் செலவு ரூ. 3,10,700. தனி நபர்கள் ஹாஸ்டலுக்கு, ஹரிஜன மாணவர்கள் செலவு செய்ததற்கு ஈடாக ஒதுக்கப்பட்டிக்கும் தொகை ரூ. 10,48,400. ஹரிஜனச் சேரிகளுக்குப் போவதற்கு பாதைகள், மயானம் போன்றவைகளுக்கும், கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 2,52,200. ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கியது ரூ. 3,64,300. ஹரிஜனக் குழந்தைகளுக்கு துணி முதலியன வாங்கிக் கொடுப்பதற்கு ஒதுக்கியது ரூ. 13,600. ரூபாய் 1,09,36,600 தொகையில் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக மட்டும் செலவழிக்கப்பட உத்தேசிக்கும் தொகை ரூ. 19,75,000 தான் மேற்சொன்ன இனங்களில் ஹரிஜனங்களுக்காக பிரத்தியேகமாக செலவு செய்யக்கூடிய தொகை மேற்குறிப்பிட்டபடி இருக்க 'ஹரிஜன முன்னேற்றத்திற்காக செலவு செய்யப்படும் மான்யம்' என்று ஏன் பெயர் வைக்கவேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"மற்ற இனங்களில் செலவு செய்யக்கூடிய தொகையைப் பார்த்தால் 'ஹரிஜனங்களுக்கு மட்டும் பிரத்தியேகமாக' என்று எங்கிருந்து வருகிறது? ஹரிஜனக் குழந்தைகளின் கல்விக்காக 21 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. 21 லட்ச ரூபாய் என்பது கல்விக்காக மட்டுமல்ல. கட்டிடச் செலவும் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதர பள்ளிக்கூடங்களில் வாசிக்கக்கூடிய ஹரிஜன மாணவர்களுக்கு கொடுக்கக் கூடிய ஸ்காலர்ஷிப்பும் சேர்க்கப்பட்டு 21 லட்ச ரூபாய் என்ற பெரும் தொகை காட்டப்பட்டிருக்கிறது.

"புதிய கொள்கையொன்றை நிதி மந்திரி அவர்கள் பிரகடனம் செய்திருக்கிறார்கள். அதாவது எல்லா ஏழை மாணவர்களுக்கும் கல்வி இலவசமாக ஏழாம் வகுப்பு வரையில் கொடுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறபோது, இந்தத் தொகையை பிரத்தியேகமாக ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு என்று சேர்ப்பதில் அர்த்தம் இல்லை. அந்தத் தொகை ஹரிஜன முன்னேற்றத்திற்கு ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறது. ஹரிஜன முன்னேற்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 19 லட்சம் 75 ஆயிரத்துக்கு மேல் காலணாகூட கிடையாது. இவ்வளவு பெரிய மான்யக் கோரிக்கையிலிருந்து ஹரிஜனங்களுக்காகச் செலவிடப்படுவது 19 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்தான் என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"ஹரிஜனக் குழந்தைகளின் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 21 லட்ச ரூபாயைச் சேர்த்தாலுங்கூட 40 லட்சத்திற்குமேல் இல்லை. மொத்த மான்யக் கோரிக்கையில் ஹரிஜன முன்னேற்றத்திற்காகப் போகக்கூடியது மொத்தத்தில் பாதிக்கு குறைவாகத்தான் என்பதையும் சபையினர் கவனிக்கவேண்டும்.

"சர்க்கார் சொல்லக்கூடிய பல திட்டங்களில் என்ன முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

11th March 1955] [Sri M. Kalyanasundaram]

ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் கொள்கை முக்கியமான கொள்கையாக கையாளப்பட்டு வந்திருக்கிறது. 1920-ம் வருஷத்திலிருந்து இந்தக் கொள்கை சர்க்காரால் கையாளப்பட்டு வந்திருக்கிறது. 1920-லிருந்து கடந்த வருஷம் வரை எத்தனை ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு நிலம் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் 39,592 பேர்களுக்குத்தான் கிட்டதட்ட 35 வருஷ காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருஷமொன்றுக்கு ஆயிரம் மனைக்கட்டுகள்தான் கொடுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

"விசேஷ நிலைமையை எடுத்துக் கொள்வோம். ஹரிஜனங்கள் அதிகமாக வசிக்கக்கூடிய ஜில்லாக்களில் ஒன்றாகிய கோயமுத்தூர் ஜில்லாவில் 35 வருஷ காலத்தில் சர்க்கார் மனைக்கட்டுகள் ஒதுக்கியிருப்பது 76 ஹரிஜனங்களுக்குத்தான். மதுரை ஜில்லாவில் 220 மனைக்கட்டுகளும், இராமனாதபுரம் ஜில்லாவில்—அதுவும் பின்தங்கிய ஜில்லாதான்—64 மனைக்கட்டுகளும், சேலம் ஜில்லாவில் 390 மனைக்கட்டுகளும், மலையாள ஜில்லாவில் சென்ற 35 வருஷ காலத்தில் ஒரே ஒரு மனைக்கட்டும், திருநெல்வேலி ஜில்லாவில் 603 மனைக்கட்டுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புள்ளிவிவரங்களை நான் கற்பனை பண்ணிச் சொல்லவில்லை. சர்க்கார் நம் முன்னால் வைத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களிலிருந்துதான் நான் எடுத்துச் சொல்லுகிறேன் என்பதை சபையினர் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"35 வருஷ காலத்தில் ஹரிஜன முன்னேற்ற விஷயமாக நம் ராஜ்யத்தில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது—வீடு கட்டிக் கொடுக்கும் முக்கியமான பிரச்னையில்—என்று கனம் மந்திரி அவர்கள் சிந்தனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதற்கு ரூ. 3,64,000 இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதற்கு பணம் எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்று பார்த்தால், அந்தப் பணம் ஹரிஜனங்களுக்குப் போவது இல்லை. ஹரிஜனச் சேரியைச் சுற்றி நஞ்சையாக இருந்து வீடு கட்டக்கூடிய மனைக்கட்டுகளின் மதிப்பு உயர்ந்திருப்பதால் 3 லட்சத்து 64 ஆயிரம் ரூபாயில் பெரும் பகுதி அதற்காகப் போய்விடுகிறது. அவ்வளவு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் எத்தனை வீட்டு மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் மிகக் குறைவாகத்தான் இருக்குமென்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமாக சர்க்கார் கையாளக் 11-20 a.m.
கூடிய சில கொள்கைகளைப்பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன். ஹரிஜனங்களுக்கு மனதார நன்மை செய்வதற்கு வேண்டி சில அபிவிருத்தியை செய்யவேண்டுமென்பதற்கு செய்யக்கூடிய மனிதாபிமான தர்ம காரியமாக இதைக் கருதக்கூடாது. நமக்கு ஒரு கடமை இருக்கிறது. ஹரிஜனங்கள் நம்முடைய நாட்டிலே பிறந்த நம்முடைய சகோதரர்கள். ராஜ்யத்தின் ஜனத்தொகையில் ஆறிலொரு பங்கு இருக்கிறார்கள். 3 கோடி 5 லட்ச ஜனத்தொகையில் 58 லட்சத்திற்குமேல் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்று அமுக்கப்படுகிறார்கள். ஹரிஜனங்கள் என்று பெயரை மாற்றுவதுமட்டும் போதாது. பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேறிவருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம், அதனால் என்னென்ன வசதிகள் ஏற்பட்டு, ஹரிஜனங்கள் முன்பு இருந்த நிலைமையை விட அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது? அவர்களில் எத்தனை பேர் படித்துப் பட்டம் பெற்றவர்கள், இஞ்ஜினீயர்களாக இருப்பவர்கள், டாக்டர்களாக இருப்பவர்கள், வக்கீல்களாக இருப்பவர்கள் என்பதற்கும், விவசாயத்துக்காக ஹரிஜனங்களுக்கு எவ்வளவு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் சர்க்கார் புள்ளிவிவரங்கள் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் சென்ற 35 வருஷ காலமாக எவ்வளவு ஹரிஜனங்கள் உயர்த்தப்பட்டிருக்கிறார்கள், அப்படி உயர்ந்த ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு அரசாங்கத்திடம் புள்ளி விவரம் இருக்கிறதா என்றால் அதுதான் கிடையாது. அவர்கள் முன்னேற்றம் அடைந்தது

[Sri M. Kalyanasundaram] [11th March 1955

உண்மையானால், எந்த அளவுக்கு அவர்களின் இடையூறுகளைக் களைந்திருக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்தைப்பற்றி அழகான புஸ்தகத்தை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

"இன்னும் இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய கிராமாந்திர பள்ளிகளில் ஹரிஜனங்களுக்கு ஸ்லேட், புஸ்தகங்கள் கொடுக்கிறார்கள். ஹெட் மாஸ்டர் 50 பேர்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்தால், ஹரிஜன் வெல்பேர் ஆபீசர் ஐந்து குழந்தைகளுக்குத்தான் கொடுக்க அனுமதி அளிக்கிறார்கள். அவர்களுக்கு புஸ்தகம், ஸ்லேட் வசதி அளிக்கப்படுவதாக சொல்லப்பட்டிருந்தும் சரியானபடி வழங்கப்படுவதில்லை என அறிகிறேன். பகல் உணவு வசதி அளிக்கப்பட்டிருந்தும் மற்ற வசதிகள் இல்லாததால் குழந்தைகள் பள்ளிக்கு வருவதில்லை.

"ஹரிஜனங்கள் பெருவாரியாக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று பேசுகிறார்களே தவிர, அவர்கள் எந்த விதமான சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலான ஹரிஜனங்கள் இன்னும் நிலப் பிரபுக்களுக்கு அடிமைகளாகவே இருக்கிறார்கள். ஒரு சிலர்தான் ஹரிஜனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளினால் பயன் அடைகிறார்கள். விவசாயிகளாக இருக்கக்கூடிய ஹரிஜனங்களில் எவ்வளவு பேருக்கு நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் புள்ளிவிவரங்கள் கொடுக்க முடியுமா? உயர்ந்த ஜாதியில் இருப்பவர்களில் எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? நிலப் பிரபுக்களில் எத்தனை பேர்களுக்கு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது? ஹரிஜனங்களில் எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் வராளமான நிலங்கள் நிலப்பிரபுக்கள் கையில்தான் இருக்கிறது. சாதாரணமாக ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவனுக்கு ஒரு ஏக்கர் நிலம்கூட கிடையாது. பரம்பரையாக அவர்களின் குடும்பம் பூராவும் உழைத்துக்கொண்டுதான் வருகிறார்கள். சாதாரணமாக மலபாரையும், தஞ்சாவூர் ஜில்லாவையும் எடுத்துக்கொண்டால் ஆடுமாடுகள், நிலங்கள், சொத்துக்களைப் பங்கு போடுவதுபோல் ஹரிஜனத் தொழிலாளர்களையும் பங்கு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே ஹரிஜனங்கள் அடிமையாக இருக்கிறார்கள். இந்த நிலையில் இவர்கள் வாழும்போது புஸ்தகத்தில் மாத்திரம் பிரமாதமாக அச்சடித்திருக்கிறார்கள்.

"கிராமங்களிலே வாழும் ஹரிஜனங்களுடைய நிலைமை இவ்வாறு என்றால் நகரத்திலே இருப்பவர்களின் நிலைமை எப்படி இருக்கப்போகிறது? அங்கேயும் மோசமாகத்தான் இருக்கிறது. ஹரிஜனங்கள் வாழும் சேரிகளை எடுத்துக்கொண்டால் நான்கு விதமாக பிரிக்கலாம். சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய சேரிகள், ரெவின்யூ புறம்போக்கில் இருக்கக்கூடிய சேரிகள், முனிசிபாலிடிகளில் இருக்கக்கூடிய சேரிகள், கோயில்களைச் சேர்ந்த சேரிகள் என்று பிரிக்கலாம். நகரங்களில் அவர்கள் வாழும் சேரிகள் பெரும்பாலும் பெரிய பணக்காரர்கள் கையில் இருக்கிறது. அந்த மனைக்கட்டுகள் அதிகமான விலை போவதினால், அதை விற்று பெரும் லாபம் அடையவேண்டி அங்கு வாழும் ஹரிஜனங்களை வெளியேற்றுவதற்காக முயற்சித்து வருகிறார்கள். அவர்கள் தற்போது இருக்கும் நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டு, அவர்களுக்கு வேறு இடத்தில் மனைக்கட்டுகள் அளிப்பதில் பிரயோஜனமில்லை. அவர்கள் இருக்கும் நிலம் சர்க்கார் ரெவின்யூ புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, கோவில்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும்சரி, முனிசிபாலிடியைச் சேர்ந்த நிலமாக இருந்தாலும்சரி அந்த இடத்தில் இருந்து ஹரிஜனங்களை வெளியேற்றாமல் அவர்கள் இருந்த மனைக்கட்டுகளை அவர்களுக்குச் சொந்தமாகச் செய்துகொடுக்கவேண்டும். அவர்களுக்கு வேறு எந்தவிதமான இடம் கொடுத்தாலும் பிரயோஜனம் இல்லை. அவர்கள் வாழும் சேரிகள் எந்த இடமாக இருந்தாலும்சரி அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தக்கூடாது. அந்த இடத்திலேயே மனைக்கட்டுகளை அளிக்கவேண்டும்.

11th March 1955] [Sri M. Kalyanasundaram]

"மேலும் ஹரிஜனங்களுக்கு இருக்கக்கூடிய பல நிலைமைகளைப்பற்றி நாம் சட்டமியற்றி இருக்கிறோம். சபையில் இரண்டு முக்கியமான சட்டங்கள் இருக்கிறது. ஒன்று ஆலயத்தில் பிரவேசிக்கலாம் என்பது. இன்னொன்று பொது இடங்களில் உள்ள கிணறுகளிலிருந்து ஜலம் எடுப்பது, மற்றும் தோட்டங்களில் வசிப்பது, பொது இடங்களில் அவர்கள் பிரவேசிப்பதற்கு உரிமை உண்டு—என்பதற்கு சட்டங்கள் இயற்றியிருக்கிறார்கள். தீண்டாமை என்பது அரசியல் சட்டத்தின்படி குற்றம் என்றிருக்கிறது. அப்படி இருந்தாலும் பல கிராமங்களில் இருக்கிற நிலைமை என்னவென்று பார்க்க வேண்டும். எப்படி இங்கு வெள்ளையன் ஆண்டபோது ஹரிஜனங்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கு மிடையே சண்டை, இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சண்டை தகராறு என்று வெள்ளையர்கள் தூண்டிவிட்டார்களோ அதேபோல இப்போது நிலப்பிரபுக்கள் ஜாதி இந்துக்களுக்கும், ஹரிஜனங்களுக்குமிடையெ துவேஷத்தை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு சமயத்தில் ஹரிஜனங்களுக்கு நிலத்தை குத்தகைக்கு விடுவது, இன்னொரு சமயத்தில் அதே நிலத்தை ஜாதி இந்துக்களுக்கு விடுவது என்று ஏற்படுத்திக்கொண்டு, ஒன்றுக்கொன்று போட்டி போடும் போது குத்தகையை குறைப்பது என்கிற வசதியை பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள் நிலப் பிரபுக்கள். அவர்கள் கையில் நிலம் இருப்பதாலும் குத்தகைக்கு விடக்கூடிய உரிமை அவர்கள் கையில் இருப்பதாலும், ஹரிஜனங்களுக்கும், ஜாதி ஹிந்துக்களுக்கும் இடையே இருக்கும் போட்டி தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும். இரண்டு பேரும் வாழவேண்டியவர்கள்தான். ஆகையால் இவர்கள் இரண்டு பேருக்கும் இருக்கும் போட்டியை என்றைக்கு நாம் திட்டம் கொண்டு வந்து, நியாய குத்தகை நிர்ணயித்து, நிலத்திற்கு வரையரை கொடுத்து அதிகமாக இருக்கும் நிலம் ஹரிஜனங்களுக்கு உரிமை என்று சட்டம் இயற்றுகிறோமோ அன்றைக்குத்தான் ஹரிஜனங்கள் சுயமரியாதையுடன் வாழமுடியும் என்பதை சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதோடுகூட அப்படிச் செய்தால்மட்டும் பிரச்னை தீர்ந்துவிடும் என்று கருதக்கூடாது என்பதையும் கூற விரும்புகிறேன். ஜாதி ஹிந்துக்கள் என்று சொல்லப்படுபவர்கள் பொருளாதாரத் துறையில் ஹரிஜனங்களைவிட மோசமான நிலைமையில் இருப்பவர்கள் கூட ஹரிஜனங்களிடத்தில் ஜாதி துவேஷத்தை காட்டுவதைப் பார்க்கிறோம். ஆகையால் இதில் ஜாதி இந்துக்களுக்கு பெரும் பொறுப்பிருக்கிறது. ஹரிஜனங்களிடத்தில் மற்ற ஜாதி ஹிந்துக்கள், முத்திராயர், கள்ளர்கள் என்று இருக்கக்கூடியவர்கள்கூட துவேஷத்தை காட்டுகிறார்கள். பல கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும் மற்ற இனத்தவர்களுக்கும் சண்டை ஏற்படுகிறது. சேரியில் போய் துவம்சம் செய்கிறார்கள். கிராம அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் என்ன செய்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் 7 வருஷத்திற்கு முன்னால் சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஹரிஜன வெல்பேர் கமிட்டி செய்த பரிசீலனையில் சொல்லப்பட்டிருக்கிற விஷயத்தை சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 11-30 a.m.

'Unfortunately for us, the present village headmen are apathetic in this matter. Some of the witnesses we have examined expressed the feeling that it was the village headman that stood in the way of reform. The police who come next to village headmen in the exercise of authority are also indifferent.'

"இப்படி கிராம அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் தங்கள் அதிகாரத்தை ஹரிஜனங்களை பாதுகாக்க உபயோகப்படுத்தாமல் ஹரிஜனங்களுக்கு இடையூறுகத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். துவேஷத்தை குறைப்பதற்கு உதவியாக இல்லாமல், துவேஷத்தை வளர்க்கத்தான் இருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். நான் இந்த நிலைமை நீடிக்கக்கூடாது என்பதைத்தான் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஜாதி ஹிந்துக்கள் மீது துவேஷமாக சொல்லுவதாக நினைக்கக்கூடாது. கிராமங்களில் இப்படிப்பட்ட உறவு இருப்பது தேசத்திற்கு பெருத்த அவமானமாகும். இதை ஒழிக்க சட்டம் போட்டால் மட்டும் போதாது. அதிகாரிகளும் அதிகாரத்தை நம்பியிருந்தால் போதாது என்பதை எடுத்துக்காட்டித்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். பொது மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமென அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் என்று சொல்லும்போது, நமது சபையில் இருப்பவர்களுள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் ஆனாலும் சரி அவர்களுக்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது.

[Sri M. Kalyanasundaram] [11th March 1955

மேற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கும் பெரும் கடமை இருக்கிறது. ஹரிஜனங்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் இருக்கக்கூடிய துவேஷத்தை நீக்கி ஒற்றுமை ஏற்படுத்துபவர்கள் நமக்கு சமமாக வாழ உரிமையுடையவர்கள் என்று சொல்ல, தீண்டாமை மற்ற கட்டுப்பாடுகள் இருக்கிறதே அதை தகர்த்து ஹரிஜனங்கள் சுயமரியாதையுடன் வாழ நாம் பொறுப்பு எடுத்துக்கொண்டால்தான் முடியும் என்பதை கவனத்திற்கு கொண்டு வந்து, சபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் அதற்கு உதாரணமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—"Cut Motion moved—

'That the allotment of Rs. 1,09,36,600 under Demand XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

*SRI. A. GOVINDASWAMI NAYAGAR :—"சபாநாயகர் அவர்களே, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து பேசும்போது நான் கொடுத்து இருக்கிற வெட்டுப் பிரேரணையை வலியுறுத்திப் பேச ஆசைப்படுகிறேன்.

"ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றம், பிற்பட்ட இன மக்கள் முன்னேற்றம், மடாலய இலாகா போன்றவைகளை கனம் அமைச்சர் ஸ்ரீ பரமேஸ்வரன் அவர்கையில் ஒப்படைத்ததற்காக முதல் அமைச்சர் கனம் ஸ்ரீ காமராஜரை பாராட்டுகிறேன். பொருளாதாரத் துறையில் தாழ்ந்திருக்கிற ஆதிதிராவிட மக்களுடைய முன்னேற்றத்தையும், அவர்களுக்கு அடுத்தபடியாக இருக்கிற பிற்பட்ட இனமக்களின் முன்னேற்றத்தையும, பிற்பட்ட இனத்தவரின் கையில் ஒப்படைத்து இருப்பது, இந்த மக்களின் நலனை பாதுகாக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து, ஆவன செய்வார்கள் என்ற நல்ல நம்பிக்கையோடு ஒப்படைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது போலவே மதத்தின் பெயரால் ஆதிதிராவிட மக்கள் மிகவும் கேவலபடுத்தப்படுகிறார்கள். அது போக்கப் படவேண்டும் என்ற காரணத்திற்காக மடாலய இலாகாவையும் அவர்கள் கையில் ஒப்படைத்து இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். பொருளாதார துறையிலும் மதத் துறையிலும் தாழ்ந்த நிலையில் இருக்கிற மக்களை நல்ல நிலைக்கு உயர்த்தவேண்டியது அமைச்சர் பரமேஸ்வரன் அவர்கள் கடமை என்பதை ஞாபகபடுத்தும் முறையில் சொல்லுகிறேன். இந்த மந்திரி சபையில் கூட, பிற்பட்ட இனத்தை சேர்ந்த மூன்று மந்திரிகளும், ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த ஒரு மந்திரியும் இருக்கிறார்கள். ஆகையால் இங்கு வாதாட போதுமான பலமிருக்கிறது. சட்ட சபையில், ஆதிதிராவிட மக்களையும், பிற்பட்ட இனத்தவரையும் சேர்த்தால், போதுமான பலம் இருக்கிறது. ஆகையால் இந்த மக்களுடைய நலனுக்காக கனம் மந்திரி அவாகள் பாடுபடவேண்டும் என்பதை வலுயுறுத்தி சொல்ல ஆசைப்படுகிறேன். இது ஜாதிப் பிரச்னை அல்ல, பெருவாரியான மக்களுடைய பிரச்னை, தேசியப் பிரச்னையாகும். மெஜாரிட்டி சமூகத்தினர் இது வரையிலும்—பொருளாதார துறையில் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், மதத் துறையில் இழிவுபடுத்தப் படுகிறார்கள் என்பதற்காக, ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றம் என்று அதற்காக ஒரு இலாகாவை வைத்து, பணத்தையும் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த பிரச்னை பாதிக்கு மேற்பட்ட ஜனத் தொகை உள்ள மக்களின் பிரச்னையாக இருப்பதால், ஒதுக்கியிருக்கிற தொகை போதாது என்பதை தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். 1 கோடி 9 லட்சம் ரூபாய் போதாது, அதை 5 கோடி ரூபாயாக்கி, ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றத்திற்கு 3 கோடி ரூபாயும், பிற்பட்ட இன மக்கள் முன்னேற்றத்திற்கு 2 கோடி ரூபாயும் ஒதுக்க வேண்டுமென்று மந்திரி அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்போதுதான் உள்ளபடியே அவர்களுக்கு ஓர் அளவு முன்னேற்றம் ஏற்படவாவது வசதி செய்ய முடியும். தமிழ் நாட்டின் மொத்த ஜனத் தொகை 3½ கோடியில், ஆதித்திராவிடர்கள் 58 லட்சம் இருக்கிறார்கள். பிற்பட்ட இனத்தவர்கள் 2 கோடி இருக்கிறார்கள். அந்த பிற்பட்ட இனத்தில் 1 கோடி வன்னியர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பெருவாரியான ஜனத் தொகையுள்ள மக்களின் நிலைமை எந்த அளவுக்கு பாதி

11th March 1955] [Sri A. Govindaswami Nayagar]

க்கப்பட்டிருக்கிறது என்பதெல்லாம், இன்றைய அரசியல் நிலைமையை எடுத்துக் கொண்டால், உத்தியோகஸ்தர்களை எடுத்துக்கொண்டால் நன்றாக விளங்கும். பிற்பட்ட இன கமிஷன் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்ததும் அதில் கண்டிருக்கிற விஷயங்களை கவனித்து ஆவன செய்யவேண்டும் என்பதைத்தான் இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். பிற்பட்ட வகுப்பினரில் ஏதோ சிலருக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடாது. ஸ்காலர்ஷிப்பை அதிகரிக்க வேண்டும். எல்லா பிற்பட்ட மக்களுக்கும் ஸ்காலர்ஷிப் கிடைக்கும்படியான அளவுக்கு வசதி செய்து தரவேண்டும். பிற்பட்ட இனத்தை சேர்ந்தவர்கள் ஸ்காலர்ஷிப் வேண்டுமானால் சாதியைச் சேர்ந்த சர்டிபிகேட் வருடா வருடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பள்ளிகளில் சேரும் போது, மாணவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர், கள்ளரா, படையாச்சியா, தேவரா என்று எழுதி வைத்து விட்டுத்தான் சேருகிறார்கள். பிறகு அடிக்கடி எதற்காக ஸர்டிபிகேட் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.' மேலும் மாணவனுடைய பெற்றோர் அந்தஸ்து சொத்து விவரம் கொடுக்க, தாசில்தார் ஸர்டிபிகேட் வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது அவ்வளவு சுலபமான காரியமல்ல. தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் எப்படி தாசில்தாரைப் காண முடியும், கெஜட் உத்தியோகஸ்தர்களை அணுக முடியும். இவற்றை தவிர உபகாரச் சம்பளம் கொடுக்கிற Form காலம் கடந்து கிடைக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் கூட Form கிடைப்பதில்லை. சில சமயங்களில் செல்வாக்கு உள்ளவர்களுக்குதான் கிடைக்கிறது. இந்த கஷ்டங்களைப் போக்க, கிராம மணியக்காரர் சர்டிபிகேட் கொடுத்தால் போதும், முனிசிபல் கௌன்சிலர், ஜில்லா போர்டு மெம்பர் அல்லது சட்ட சபை உறுப்பினர் கொடுத்தால் போதும் என்று மாற்றி அமைக்கவேண்டுமென்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

"பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று, 'பாரிஸ்டர்', 'டாக்டர்' போன்ற பெரிய படிப்புகள் படிப்பதற்கும், மேலும் தொழில் நுணுக்கங்களைத் தெரிந்துகொள்வதற்கும் வேண்டிய பணத்தை அரசாங்கம் ஒதுக்க வேண்டும். பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களும், ஆதித்திராவிடர்களும் மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க வசதி செய்து கொடுத்தால் தான், அந்த சமுதாயம் முன்னேற வழி செய்ததாகும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். 11-40 a.m.

"இப்பொழுது 'சர்வீஸ் கமிஷன்' போர்டில் ஒரு முதலியாரும், ஒரு கிருஸ்தவரும், ஒரு முஸ்லீமும் இருக்கிறார்கள். அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முற்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரையும், பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரையும், ஆதித்திராவிட இனத்தைச் சேர்ந்த ஒருவரையும் நியமிக்க வேண்டும்.

"இப்பொழுது உத்தியோக நியமனங்களிலே, ஆதிதிராவிடருக்கு 15 பெர்சண்டும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 பெர்சண்டும், பாக்கி 60 பெர்சண்ட் மற்ற தகுதி ('மெரிட்') உள்ளவர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்பு விஷயத்தில் தாழ்ந்திருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் தள்ளப்பட்டு வருகிறார்கள். ஆதிதிராவிடருக்கு 15 பெர்சண்ட் என்று இருப்பதை 25 பெர்சண்ட்டாகவும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 பெர்சண்ட்டாக என்று இருப்பதை 50 பெர்சண்டாகவும் மாற்றி அமைக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். இந்த மாதிரி விகிதத்தை ஒரு பத்தாண்டுகளுக்காவது கடைப்பிடித்தால், ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்படும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

"நமது அரசாங்கம் 'communal' G.O. வை ஒழித்து விட்டார்கள். ஜாதிமதசார்பற்ற சர்க்கார் என்று சொல்லி கொண்டு, சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ முத்தையா முதலியார் அவர்களால் கொண்டு வரப்பட்ட சமூகவாரி பிரதிநிதித்தவத் திட்டத்தை, பிற்பட்ட வகுப்பினருக்கும், ஆதிதிராவிடருக்கும் நன்மையளித்து வந்த ஒரு அருமையானத் திட்டத்தை, ஒழித்து விட்டார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லாமல் இருப்பதற்கில்லை.

[Sri A. Govindaswami Nayagar] [11th March 1955

"வன்னியர்கள் ஒரு கோடி மக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கோடி மக்களின் பிரதிநிதிகளாக 31 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். 31 அங்கத்தினர்கள் இருந்தும்கூட வன்னியமக்களின் உரிமை சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை. நியாயமான உரிமைகள் கூட எங்களுக்கு வழங்கப்படுவதில்லை. வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு ஜில்லா கலெக்டரோ அல்லது ஹைகோர்ட் ஜட்ஜோ கிடையாது. ஜில்லா ஜட்ஜே யில்லை என்றால், பிறகு எப்படி ஹைகோர்ட் ஜட்ஜ் இருக்க முடியும்? நான் ஏதோ ஒரு குறிப்பிட்ட ஜாதியைப் பற்றி பேசுவதாக நினைக்கக்கூடாது. எல்லாத் துறைகளிலும் வன்னியர்கள் பின் தங்கியிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவே இதையெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது.

"தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களிலே உள்ள வன்னியர்களின் குழந்தைகளுக்கு எல்லா "ஸ்டேஜ்களிலும்" இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்போவதாக ஜில்லா போர்டு எலக்ஷனுக்கு முன்னால் அறிவிக்கப்பட்டது. வன்னியர்கள் இதை உண்மையென்று நம்பி தேர்தலில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தார்கள். நேற்றைய தினம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்குத்தான் இந்த சலுகை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால் ஒரு சிலர் தான் இருப்பார்கள். ஆகவே, எல்லா வன்னியர்களுக்கும் இந்தச் சலுகையை யளிக்கப்படுவதுடன் மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். முக்கியமாக, வட ஆற்காடு ஜில்லாவிற்கும் விஸ்தரிக்க வேண்டும். வன்னியர்கள் இல்லாத பகுதியே கிடையாது. பின்தங்கி யிருக்கும் அவர்களது பொருளாதார நிலைமையை அனுசரித்து அவர்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும். 2–8–54-ல் சர்க்கார் ஜி. ஓ நெ. 1081 உத்திரவு போட்டிருக்கிறார்கள். நன்றாகப் படித்துத் தான் அரசாங்கத்திலிருக்கும் காரியதரிசிகள் உத்தரவு போடுகிறார்கள். மந்திரி அவர்களும் பரிசீலனை செய்த பிறகு தான் உத்திரவு வெளியாகிறது. உத்திரவு clear ஆகத்தானிருக்கிறது. அப்படியிருக்கும்போது, மந்திரி அவர்கள் குதர்க்கமாக மனதில் எதையோ நினைத்துக் கொண்டு குற்ற பரம்பரை ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் இந்த சலுகையளிக்கப்படும் என்று சொல்லுவது, தேர்தல் தான் முடிந்து விட்டதே, இனிமேல் என்ன! என்று தட்டிக் கழிப்பதாகயிருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஒரே ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தான் இந்த குற்ற பரம்பரையைச் ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஆகவே, மற்ற மக்களின் கதி என்ன ஆகுமென்று கேட்கிறேன். கச்சிராயர், மழுவராயர், தென்னவராயர், அஞ்சாத சிங்கத்தார், புலிக்குத்தியார், பூபதி நாயக்கர், நாயகர், கண்டர், கவுண்டர், படையாட்சி முதலிய பட்டங்கள் உள்ளவர்களும் வன்னியர்கள் தான். இவர்கள் தனித்தனி ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. இவர்களை தனித்தனி ஜாதி யென்று பிரித்து, ஜனத் தொகை எண்ணிக்கை தெரியாத அளவுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. கொடுத்த சலுகையை திருப்பி எடுக்காமல், எல்லா ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜாதி வித்தியாசமில்லாமல் இப்பொழுது ஏழை மாணவர்களுக்கு மூன்றாவது பாரம் வரையில் சம்பளச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜாதி, மதம் ஒழிய வேண்டு என்று சொல்லும்பொழுது, வன்னிய ஜாதிக்காகத் தனிப்பட்ட சலுகைகள் காட்ட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. ஆனால் ஜாதி மத அடிப்படையில் சலுகைகள் கொடுக்கப்படும்பொழுது, பிற்பட்ட இனத்தவருக்கு உபகாரச் சம்பளம், சம்பளமில்லாமல் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். வன்னியர்களுக்கு சட்டக் கல்லூரி, வைத்திய கல்லூரி உள்பட எல்லாக் கல்லூரிகளிலும், மற்றும் பல தொழில்களுக்குப் படிப்பதற்காக பல வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு "ரெசிடென்ஷியல்" ஸ்காலர்ஷிப் கேட்டால், 'Non-residential scholarship' கொடுக்கிறார்கள். டைரக்டரை கேட்டால் பணமில்லை என்று சொல்லுகிறார். ஆகவே, அதிகத் தொகை ஒதுக்க வேண்டு மென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுடைய சமூகத்தைச் சேர்ந்த

11th March 1955] [Sri A. Govindaswami Nayagar]

ஆதித்திராவிடர்களின் நலத்தைக் கருதி ஆவன செய்ய வேண்டுமென்றும், அதற்காக மந்திரி சபையில் போராட வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த உபகாரச் சம்பளங்கள் காலம் கடந்து கொடுக்கப்படுகின்றன. ஏழு அல்லது எட்டு மாதங்கள் கடந்து தான் சம்பந்தப்பட்ட மாணவனுக்கு உபகாரச் சம்பளம் கிடைத்ததா இல்லையா என்று தகவல் தெரிகிறது. அப்பொழுது கிடைக்க வில்லை என்று சொன்னால், சில மாணவர்கள் வீட்டிற்கு திரும்பும் நிலைமை ஏற்படுகிறது. கடனை வாங்கிக்கொண்டு, அறைகுறையாகப் படித்துத் திரும்ப வேண்டியதாயிருக்கிறது. காலங் கடத்தாமல், இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்குள் கொடுத்துவிட்டால், யாருக்கு scholarship கிடைத்தது, யாருக்கு கிடைக்க வில்லை என்று தெரியும். இதற்காக Harijans Welfare Department-ஐ விஸ்தரிக்க வேண்டும்.

"இப்பொழுது ராஜ்ய அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் உபகாரச் சம்பளம் கொடுக்கிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுத்தால், ராஜ்ய அரசாங்கம் நிராகரித்து விடுகிறது. ஏக காலத்தில் முடிவுகள் தெரிவிக்கப் படுவதில்லை. முதலில் ராஜ்ய அரசாங்கத்தால் உபகாரச் சம்பளம் கொடுக்கப் பட்ட மாணவர்களின் ஜாப்தாவைச் பிரசுரித்தால் இங்கு கிடைக்காதவர்களுக்கு பிறகு மத்திய அரசாங்கத்தில் முயற்சி செய்து வாங்கிக் கொள்ள சௌகர்யமாயிருக்கும்.

"உத்தியோகத் துறையிலும் பிற்பட்ட இனத்தவர் முன்னேறுவதற்கு வசதிகள் செய்யவேண்டும். சமீபத்தில் நியமனம் செய்த 7 டெபுடி கலெக்டர் வேலைக்கு சென்னையிலுள்ளவர்களையே தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஜில்லாக்களிலிருந்து ஒருவரையும் தெரிந்தெடுக்க வில்லை. அதிலும் பெரிய இடத்து மாணவர்களைத் தான் எடுத்திருக்கிறார்கள். அப்படியானால், எங்களைத் தேர்ந்தெடுத்த பிற்பட்ட மக்களின் நிலைமை என்ன என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன்.

"ஆதித்திராவிடர்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் ஒதுக்கியிருக்கும் தொகை மிகவும் குறைவாக யிருக்கிறது. இந்த தொகை கடலில் கரைத்த பெருங்காயம் போல் இருக்கிறது. அதை இன்னும் உயர்த்தவேண்டும்.

"சில சமயங்களிலே பிற்பட்ட வகுப்பினருக்கும், ஆதித்திராவிடர்களுக்கும் சண்டை ஏற்படுகிறது என்று எனது நண்பர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். சண்டைபோடும்படி அவர்களைத் தூண்ட வேண்டாம் என்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஆதித் திராவிடர்களுக்கும் பிற்பட்ட இனத்தவருக்கும் இடையே ஒற்றுமை நிலவி வருகிறது. அந்த ஒற்றுமையை குலைக்கும் அளவுக்குப் பேச வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முற்பட்ட இனத்தவர்கள் சண்டை மூட்டிவிட்டால் ஒழிய, ஆதித் திராவிடர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் சண்டை வராது. சட்டசபையிலே பேசி, வீணாக அவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்த வேண்டாம் என்ற நல்லெண்ணத்துடன் கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திலே கனம் அங்கத்தினர்கள் திரு. சகஜாநந்தாவுக்கும் திரு. அரங்கநாதனுக்கும் ஒரு சின்ன சண்டை ஏற்பட்டது. அது எவ்வளவு தூரம் வெளியே யுள்ளவர்களைப் பாதித்திருக்கிறது என்பது திரு. கல்யாணசுந்தரத்திற்கு தெரியாததில்லை. ஆதித்திராவிடர்கள் வாய்க்காலில் இருந்தால், பிற்பட்ட வகுப்பினர் வரப்பிலிருப்பார்கள். அவர்கள் முன்னாலிருந்தால், இவர்கள் பின்னாலிருப்பார்கள். முற்போக்கு அங்கத்தினர், ஒரே குடும்பத்திற்குள் சண்டையை உண்டாக்கவேண்டாமென்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். ஒற்றுமை வளர வேண்டும். ஜாதி வித்தியாசம் ஒழியவேண்டும். ஆதித்திராவிடர்களுக்கும் எங்களுக்கும் சண்டை மூட்டுவதாயிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தோல்வி தான் ஏற்படும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"இன்னுமொரு விஷயம். சில உத்தியோகங்களுக்கு ஆதித் திராவிடர்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, முற்பட்ட இனத்தவர்

[Sri A. Govindaswami Nayagar] [11th March 1955

அந்த உத்தியோகங்களை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆதித்திராவிடர்கள் கிடைக்கவில்லை யென்றால் பிற்பட்ட இனத்தவருக்கு கொடுக்க வேண்டும்."

SRI M. KALYANASUNDARAM :—"On a point of personal explanation, Sir. எப்பொழுதுமே நிதானமாக விஷயங்களைப் பேசக்கூடிய திறமைவாய்ந்த ஸ்ரீ கோவிந்தசாமி நாயக்கர் அவர்கள் நான் சொல்லியதைத் தவறாகப் புரிந்து கொண்டார்களோ, என்னமோ தெரியவில்லை. அவர் நினைப்பது முற்றிலும் தவறு. அவர் அபிப்பிராயத்தைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறேன். நான் சொல்லுவதைத்தான் அவரும் சொல்லுகிறார். ஹரிஜன விவசாயிகளின் நிர்க்கதியைப் பயன்படுத்திக்கொண்டு, மேல் ஜாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள் தான் தூண்டிவிடுகிறார்கள். அப்படி இருக்கும்பொழுது நான் தூண்டிவிட முயற்சிக்கிறேன் என்ற முடிவுக்கு எப்படி ஸ்ரீ கோவிந்தசாமி நாயகர் வந்தார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்."

SRI A. GOVINDASWAMI NAYAGAR :—"பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் ஆரம்பத்திலே சொல்லும்போது மிராசுதாரர்கள்தான் சண்டை மூட்டி விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது, பிற்பாடு ஆதிதிராவிடர்களுக்கும், பிற்பட்ட இனத்தவர்களுக்குமிடையிலேயே இப்பொழுது பகைமை இருந்து கொண்டு வருகிறது என்று சொன்னார்கள். இப்போது நண்பர் கலியாணசுந்தரம் இல்லை யென்று சொன்னாலும்கூட, நாளைய சர்க்கார் ரிக்கார்டில் பார்த்துக்கொண்டு, தன்னுடைய தவறை மாற்றிக்கொள்ளுவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவர்கள் இதிலெல்லாம் கொஞ்சம் நிதானமானவர்; விஷயம் தெரிந்தவர். அதோடு இந்த ஹரிஜன மான்ய வெட்டுப் பிரரேபணையை நான் தான் கொண்டு வருவதற்கு இருந்தேன். ஆனால் நண்பர் அவர்கள் தான், நீங்கள் கொண்டுவருவதைவிட ஒரு ஆதித்திராவிட அங்கத்தினரே இந்த வெட்டுப் பிரரேபணை கொண்டு வந்தால் நல்லதென்று கூறிவிட்டார்கள். அதிலிருந்து அவருடைய எண்ணத்தைப் புரிந்துகொள்ளலாம். ஆகவே, இன்றைய தினம் பிற்பட்ட வகுப்பினருக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் இடையே சண்டை சச்சரவுகளை உண்டாக்கவேண்டாமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

11–50 a.m. SRI A. VAIKUNTAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். ஹரிஜனங்களுக்காக ரூ. 1,09,36,600 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சென்ற வருஷத்தைக் காட்டிலும் ஜாஸ்தியாக இருக்கிறது என்பதைப் பார்த்து நான் மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். ஆனால் இதில் சில உட்பிரிவுகள் காணப்படுகிறது. அது என்னவென்றால் பிற்பட்ட சமூகத்தினருக்கும், ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், கிருஸ்துவர்களுக்கும் இதில் சேர்த்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்கள் என்று சொல்லி அதிலே ஒரு உட்பிரிவை ஏற்படுத்துவதோடு, அவர்களுக்கு தனியாகவே ஒதுக்கி, வேண்டிய சலுகைகளைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும். இப்படி உட்பிரிவுக் காட்டப்படுவது, பாரபட்சம் காட்டப்படுகிறது என்று சொல்லவில்லை. அப்படிக் கொடுப்பதற்காக வருத்தமும் படவில்லை. அவர்கள் எங்களைக் காட்டிலும் மிகவும் பிற்போக்கடைந்தவர்கள். கல்வியிலும், பொருளாதாரத்திலும், இன்னும் மற்ற விஷயங்களிலும் அவர்கள் ஏழ்மை நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கென்று பல லட்சங்கள் தனியாக ஒதுக்கிவிடவேண்டும். அப்படிப்பட்ட சலுகைகளைத் தரவேண்டுமே ஒழிய, ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து எடுத்து செலவழிக்கக்கூடாது. இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். காரணம் ஹரிஜனங்களும் மிகவும் பிற்பட்ட நிலையில் இன்றிருக்கிறார்கள்.

"இன்று ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் அவர்களுக்கு பள்ளிக்கூட வசதிக்காகவும், கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்காகவும், இன்னும் பள்ளிக்கூட மாணவர்களுக்கு சிலேட் புத்தகங்கள் வாங்

11th March 1955] [Sri A. Vaikuntam]

കിക്കൊടുക്കവും വസതികൾ ചെയ്തു കൊടുക്കപ്പെടുകിന്നതെ. ആണ്ടു അപ്പടി ചെയ്യുമ്പോതു, ചില ജില്ലാക്കളുക്കു ജാസ്തിയാകവും, ഇതര ചില ജില്ലാക്കളുക്കു ശൊമ്പക് കുറൈച്ചലാകവും ചെലവഴിക്കപ്പടുവതാകത് തെരിയവരുകിറതു. ഏറ്റകെനവേ തിരുനെൽവേലി, രാമനാതപുരം, മതുരൈ പോൻറ ജില്ലാക്കളുക്കു ശൊമ്പവും കുറൈച്ചലാക ചെലവഴിക്കപ്പട്ടു വരുകിറതു എൻറു ചൊല്ലപ്പട്ടു വരുകിറതു. ഇൻനും ലേപർ പള്ളിക്കൂടങ്കൾ, ഹാസ്ടൽകൾ പോൻറ ചലുകൈകൾ ചെയ്തു കൊടുപ്പതു ശൊമ്പവും കുറൈവാക ഇരുപ്പതാകത് തെരിയവരുകിറതു. മറ്റ ജില്ലാക്കളിൽ നൂറ്റുക്കു മേറ്പട്ട പള്ളിക്കൂട വസതികൾ ചെയ്തിരുക്കുമ്പോതു, ഇന്ത ജില്ലാക്കളിൽ മട്ടും 50-ക്കും കുറൈവാന ഒരു ചലുകൈ കൊടുക്കപ്പട്ടിരുപ്പതു ശൊമ്പവും വരുന്തത്തക്കതു. എൻപോൻറ ഏഴൈകൾ വാഴുമ്പടിയാന ഇടങ്കളുക്കു പാരപട്ചം ഇല്ലാമൽ, നിലൈമൈകളൈ നൻകു ആരായ്ന്തു എല്ലാ ജില്ലാക്കളുക്കും ചമ അന്തസ്താക ചലുകൈകളൈ നടത്തിക് കൊടുക്കവേണ്ടുമെൻറു അമൈച്ചർ അവർകളൈക് കേട്ടുക്കൊണ്ടു, എൻനുടൈയ വാർത്തൈകളൈ മുടിത്തുക് കൊള്ളുകിറേൻ.''

* SRI M. NARAYANAN NAMBIAR:—"മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഈ രാജ്യത്തു ഹരിജനോദ്ധാരണപ്രവർത്തനങ്ങൾ വളരെക്കാലമായി നടന്നുവരുന്നുണ്ട്. എങ്കിലും ഹരിജനോദ്ധാരണം പ്രതീക്ഷിച്ചിരുന്നപോലെ പുരോഗമിച്ചിട്ടില്ലെന്നു സമ്മതിക്കേണ്ടിയിരിക്കുന്നു. ക്ഷേത്രപ്രവേശനനിയമം പാസ്സാക്കിയിട്ടു കാലം കുറെകഴിഞ്ഞു. 11-55 a.m.
എങ്കിലും വളരെയധികം സ്വകാര്യക്ഷേത്രങ്ങൾ ഇന്നും ഹരിജനങ്ങൾക്കു തുറന്നുകൊടുത്തിട്ടില്ല. സാമൂഹ്യാവശതാപരിഹാരനിയമം നിലവിലുണ്ടെങ്കിലും ഹരിജനങ്ങളുടെ സാമൂഹ്യാവശതകൾ ഇന്നും പഴയപടി നിലകൊള്ളുന്നു. പട്ടണങ്ങളെ അപേക്ഷിച്ചു് ഗ്രാമപ്രദേശങ്ങളിലെ ഹരിജനങ്ങൾക്കാണു് കൂടുതൽ അവശതകളുള്ളതു്. ഇങ്ങനെ ഒരു നിയമം നിലവിലുണ്ടെന്നുതന്നെ ഗ്രാമപ്രദേശങ്ങളിലെ ഹരിജനങ്ങൾക്കു അറിവില്ല. അതുകൊണ്ടു് സാമൂഹ്യാവശതാപരിഹാരനിയമത്തെക്കുറിച്ചു് ജനങ്ങളുടെയിടയിൽ പ്രചരണം നടത്തേണ്ടതു് അത്യാവശ്യമാണു്. തെക്കേ മലബാറിലും വടക്കേ മലബാറിലും ഓരോ പ്രചാരകനെ അടുത്ത കാലത്തു നിയമിച്ചിട്ടുള്ളതായറിയുന്നു. എല്ലാ ജില്ലകളിലും അതുപോലെ പ്രചാരകനെ നിയമിക്കേണ്ടിയിരിക്കുന്നു. തെക്കൻ കർണ്ണാടകത്തെക്കുറിച്ചു് പറയുകയാണെങ്കിൽ, ഹരിജനങ്ങൾ ധാരാളമുള്ള ഒരു താലൂക്കാണു് കാസർകോട്ടു്. അവിടെ ഒരു പ്രചാരകനെ നിയമിക്കേണ്ടതു് അടിയന്തിരമായ ഒരാവശ്യമാണെന്നു് ഗവർമ്മെണ്ടിന്റെ ദൃഷ്ടിയിൽപെടുത്തികൊള്ളുന്നു.

"ഹരിജനങ്ങൾക്കു വീടു കെട്ടിക്കൊടുക്കുന്നതും വളരെ മുഖ്യമായ ഒരു പ്രശ്നമാണു്. പടിഞ്ഞാറൻ കടൽത്തീരത്തു താമസിക്കുന്ന ഹരിജനങ്ങൾക്കു മികവാറും സ്ഥിരമായി താമസിക്കാനുള്ള വീടുകൾ ഉണ്ടെന്നു കാണുന്നു. കിഴക്കൻ പ്രദേശങ്ങളിലാണു് ഹരിജനങ്ങൾ കൂടുതലുള്ളതു്. അവർക്കു യാതൊരുവിധമായ പാർപ്പിടസൌകര്യങ്ങളും ഇന്നേവരെ ഉണ്ടായിട്ടില്ല. കിഴക്കൻ പ്രദേശങ്ങളിലെ ഹരിജനങ്ങൾ ജന്മിമാരുടെ അടിമകളെപ്പോലെ പ്രവൃത്തിയെടുക്കുന്നവരാണു്. അവർ പരമ്പരയാ ജന്മിമാരുടെ അടിമകളാണു്. അവർക്കു പ്രവൃത്തിസ്വാതന്ത്ര്യമില്ല. പുനംകൃഷികൾ ചെയ്തുകൊണ്ടിരിയാണു് ജന്മിമാർ അവരെ അധികവും ഉപയോഗിക്കുന്നതു്. അവർക്കു സ്ഥിരമായ വാസസ്ഥലങ്ങളില്ല. ഓരോ കാലത്തും പുനം കൃഷിയിറക്കുന്ന സ്ഥലത്തു താല്ക്കാലികമായി ഒരു പുരയുണ്ടാക്കി അവിടെ താമസിക്കുകയാണു് പതിവു്. ഇന്നസ്ഥലത്തു കൃഷിയിറക്കണമെന്നു ജന്മി നിശ്ചയിക്കും. അവർ അവിടെ പോയ്ക്കൊള്ളണം ഈ ഹരിജനങ്ങൾക്കു സ്ഥിരമായി താമസിക്കാനുള്ള സ്ഥലവും തൊഴിൽസ്വാതന്ത്ര്യവും ഉണ്ടാക്കികൊടുക്കേണ്ടതു് വളരെ അത്യാവശ്യമാണു്. കാസർകോട്ടു് താലൂക്കിൽ പനത്തടി ഗ്രാമത്തിൽ ഹരിജനങ്ങൾക്കു ഒരു കോളനി സ്ഥാപിക്കുന്നതിനായി ഗവർമ്മേണ്ടു് 1,700-ൽപരം ഏക്കർ ഭൂമി നീക്കിവച്ചിട്ടുണ്ടു്. അവിടെ ഒരു കോളനി സ്ഥാപിക്കാൻ തീരുമാനിച്ചിട്ടുണ്ടെന്നു പറയുന്നു. സ്ഥലം സർവ്വേ ചെയ്യുന്നതിന്നു ഒരു ഉദ്യോഗസ്ഥനേയും നിയമിച്ചിട്ടുണ്ടു്. പക്ഷെ കോളനി സ്ഥാപിക്കുന്നതിനുള്ള നടപടികളൊന്നും പുരോഗമിച്ചുകാണുന്നില്ല. കോളനിക്കായി നീക്കിവച്ചിരിക്കുന്ന ഈ 1,700 ഏക്കർ സ്ഥലം മലകൾക്കിടയിൽ കിടക്കുന്ന വിശാലവും ഫലഭൂയിഷ്ഠവുമായ ഒരു പ്രദേശമാണു്. ഈ കോളനിയുടെ പണി വേഗത്തിൽ നടത്തി ഹരിജനങ്ങൾക്കു സ്വന്തമായി വീടുണ്ടാക്കികൊടുക്കുകയാണെങ്കിൽ അവർക്കു തൊഴിൽ സ്വാതന്ത്ര്യം കിട്ടും. അവരുടെ അടിമത്തം മാറും. അവരുടെ സാമ്പത്തികനിലയും അഭിവൃദ്ധിപ്പെടും. ഇന്നു അവർക്കു കിട്ടുന്ന കൂലി തുച്ഛമാണു്. കൂടുതൽ കൂലി കിട്ടുന്നി

[Sri M. Narayanan Nambiar] [11th March 1955

ടത്തുപോയി ഇഷ്ടമുള്ള തൊഴിൽ ചെയ്യാനുള്ള സ്വാതന്ത്ര്യം ഇന്നില്ല. സ്വന്തമായി വീടില്ലാത്തതാണ് ഈ അവശതകളുടേയും പാരതന്ത്ര്യത്തിന്റേയുമെല്ലാം പ്രധാന കാരണം. കിഴക്കൻ ഗ്രാമങ്ങളിൽ താമസിക്കുന്ന ഹരിജനങ്ങൾ അധികവും കൈത്തൊഴിലുകളിൽ ഏർപ്പെട്ടിരിക്കുന്നവരാണ്. പല കുടിൽവ്യവസായങ്ങളിലും അവർ നിപുണരാണ്. കുട്ടമെടയൽ, പായ നെയ്ത്ത് മുതലായ കൈത്തൊഴിലുകളിലാണ് അവർ ഏർപ്പെട്ടിരിക്കുന്നത്. ഈ കുടിൽവ്യവസായങ്ങൾ പ്രോത്സാഹനമില്ലാത്തതു നിമിത്തം ഇന്നു നശിച്ചുകിടക്കുകയാണ്. തന്മൂലം ഈ തൊഴിലിലേർപ്പെട്ടിരിക്കുന്ന ഹരിജനങ്ങളുടെ കാര്യം വലിയ കഷ്ടമായിത്തീർന്നിരിക്കുന്നു. ഈ കുടിൽവ്യവസായങ്ങളെ പ്രോത്സാഹിപ്പിക്കാനും അങ്ങനെ ഹരിജനങ്ങളുടെ സാമ്പത്തികനില മെച്ചപ്പെടുത്താനുള്ള ഒരു പദ്ധതി ഗവമ്മേണ്ട് ആരംഭിക്കണമെന്നു അഭ്യർത്ഥിച്ചുകൊള്ളുന്നു.

"ഹരിജനങ്ങൾക്കു പ്രത്യേകമായി ഇന്നു ഈ രാജ്യത്തു ഒട്ടധികം വിദ്യാലയങ്ങൾ ഏർപ്പെടുത്തിയിട്ടുണ്ട്. ഈ വിദ്യാലയങ്ങളെ സംബന്ധിച്ചിടത്തോളം ഒരു നയംമാറ്റം ആവശ്യമാണെന്നാണ് എന്റെ അഭിപ്രായം. അതു സാദ്ധ്യമല്ലേ എന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. എല്ലാ കുട്ടികൾക്കും പഠിക്കാവുന്ന പൊതുവിദ്യാലയങ്ങളുള്ളപ്പോൾ ഹരിജനങ്ങൾക്കു പ്രത്യേകം വിദ്യാലയങ്ങളുണ്ടാക്കി അവരെ മാററിനിറുത്തുന്നതു അഭിലഷണീയമാണോ എന്നു ആലോചിക്കേണ്ടിയിരിക്കുന്നു. ഹരിജൻ കുട്ടികളെ വേർതിരിച്ചു അകററിനിറുത്തുന്നതു ശരിയല്ലെന്നാണ് എന്റെ വിശ്വാസം. ചെറുകുട്ടികളായിരിക്കുമ്പോൾ മററു കുട്ടികളുമായി അടുത്തു വെരുമാറാനിടയായാൽ ജാതിചിന്ത അധികം ഉണ്ടാകാനിടയില്ല. മററു വിഭാഗങ്ങളിലെ കുട്ടികളുമായി ഇടപഴകി ഏകോദരസഹോദരങ്ങളെപ്പോലെ കഴിയുന്നതിനുള്ള ഒരു സന്ദർഭം ഹരിജൻ കുട്ടികൾക്കു ലഭിക്കണമെങ്കിൽ അവർക്കുവേണ്ടിയുള്ള പ്രത്യേക സ്കൂളുകൾ നിറുത്തൽചെയ്യണമെന്നാണ് എന്റെ അഭിപ്രായം. പൊതുവിദ്യാലയങ്ങളുള്ള ദിക്കുകളിൽ പ്രത്യേക ഹരിജൻ വിദ്യാലയങ്ങൾ ആവശ്യമാണോ എന്ന കാര്യം ഗവമ്മേണ്ട് കാര്യമായി ആലോചിക്കണമെന്നു എനിക്ക് അപേക്ഷയുണ്ട്. ഹരിജൻ സ്കൂളുകളിൽ കുട്ടികൾക്കു ചില പ്രത്യേക സൌജന്യങ്ങളെല്ലാം അനുവദിച്ചിട്ടുണ്ട്. ആ സൌജന്യങ്ങളെല്ലാം പൊതുസ്കൂളുകളിലും അനുവദിച്ചുകൊടുക്കാൻ വിഷമമില്ല. ഹരിജൻ കുട്ടികൾക്കു ഉച്ചക്കഞ്ഞിക്കും മററുമുള്ള ഏർപ്പാടുകൾക്കും പൊതുസ്കൂളുകളിലായാലും പ്രയാസമുണ്ടാകാൻ തരമില്ല.

"സാമ്പത്തികമായി ഹരിജനങ്ങൾക്കു വളരെയധികം വിഷമതകളും അവശതകളുമുണ്ട്. അവർക്കു സ്വത്തില്ല, കടം കിട്ടാനുള്ള യാതൊരു സൌകര്യവുമില്ല. സ്വത്തില്ലാത്തതുകൊണ്ട് അവർക്കു ആരും കടം കൊടുക്കുകയില്ല. കൃഷിക്കാർക്കാണെങ്കിൽ കൊള്ളപ്പലിശ കൊടുത്താലെങ്കിലും കടം കിട്ടും. ഹരിജനങ്ങൾക്കു കടം കിട്ടാനേ പ്രയാസം. കിട്ടുകയാണെങ്കിൽതന്നെ നാട്ടിലെങ്ങുമില്ലാത്ത പലിശ കൊടുക്കേണ്ടിവരും. ഹരിജനങ്ങളെ പരസ്പരസഹായപ്രസ്ഥാനത്തിൻ കീഴിൽ കൊണ്ടുവന്നോ മറെറാ അവർക്ക് ആവശ്യമുള്ള കടം കിട്ടാനും മററുവിധത്തിലുള്ള സാമ്പത്തികസഹായങ്ങൾ കിട്ടാനുമുള്ള ഒരു പദ്ധതി ഗവമ്മേണ്ട് ആസൂത്രണം ചെയ്യുന്നതു നന്നായിരിക്കും. പനത്തടി ഗ്രാമത്തിൽ ഒരു ഹരിജൻ വെൽഫെയർ സ്കൂൾ അനുവദിച്ചുകൊടുത്തിട്ടുണ്ട്. ഹരിജനങ്ങൾക്കു സാമ്പത്തികമായ സഹായം നൽകുന്നതിനായി ഒരു സഹകരണസംഘവുംകൂടി അവിടത്തേക്കു അനുവദിച്ചുകൊടുക്കേണ്ടതു ആവശ്യമാണ്.

"ഹരിജൻദിനം കൊണ്ടാടുന്ന സമ്പ്രദായത്തെപ്പററിക്കൂടി രണ്ടു വാക്കു പറഞ്ഞുകൊള്ളട്ടെ. എല്ലാ മാസവും 30-ാംതിയ്യതി ഹരിജൻദിനമായി കൊണ്ടാടുന്നുണ്ട്. ഹരിജൻദിനം കൊണ്ടാടുന്നതു ഞാൻ മനസ്സിലാക്കിയിടത്തോളം ഒരു തരം കടലാസ്സുയോഗങ്ങൾ മൂലമാണ്. ഗ്രാമത്തിലെ ഹരിജൻ വെൽഫെയർ ഡിപ്പാർട്ട്മെൻറ് ഉദ്യോഗസ്ഥന്മാരും റവന്യൂ ഉദ്യോഗസ്ഥന്മാരും ചേർന്നു ഗവമ്മേണ്ടിലേക്കു റിപ്പോർട്ട് അയയ്ക്കാൻ വേണ്ടിമാത്രം പേരിന്നു ഒരു യോഗം നടത്തിയെന്നു വരുത്തുകയല്ലാതെ ഹരിജനങ്ങൾക്കു അതുകൊണ്ട് എന്തെങ്കിലും പ്രയോജനമുണ്ടാകണമെന്നുള്ള ഉദ്ദേശത്തോടുകൂടി ഈ ദിനം ആചരിക്കപ്പെടുന്നതായി എനിക്കറിയാൻ കഴിഞ്ഞിട്ടില്ല. ഇക്കാര്യം ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽപ്പെടുമെന്നു ഞാൻ കരുതുന്നു.

"തെക്കൻ കർണ്ണാടകത്തിൽ ഒഴിഞ്ഞുകിടപ്പുള്ള സ്ഥലങ്ങൾ ധാരാളമുണ്ട്. ഭൂമി പതിച്ചു കിട്ടുന്നതിനുവേണ്ടി ഹരിജനങ്ങൾ ഹരജി അയച്ചാൽ വളരെക്കാലം കഴിഞ്ഞാലും ഒരു തീരുമാനമുണ്ടാവുകയില്ല. ഒമ്പതു കൊല്ലം മുമ്പു കൊടുത്ത ഹരജികൾ പോലും തീരുമാനിക്കാതെ കിടപ്പുള്ളതായി എനിക്കറിയാം. വളരെ ബുദ്ധിമുട്ടിയാണ്

11th March 1955] [Sri M. Narayanan Nambiar]

ഹരിജനങ്ങൾ ഒരു ഹരജി അയക്കുന്നതു്. ഹരജി അയച്ചുകഴിഞ്ഞാൽ അതിന്റെ പുറകെപോയി അന്വേഷിക്കാനുള്ള കഴിവു് അവർക്കില്ല. താലൂക്കാപ്പീസിലോ കലക്ടറാഫീസിലോ പോയി എന്തെങ്കിലും കാര്യം നേടാനുള്ള സാദ്ധ്യത ഹരിജനങ്ങൾക്കില്ല. അതുകൊണ്ടു് അവരുടെ കാര്യം ഒന്നും നടക്കുന്നില്ല. ഒരുക്കൻ കർണ്ണാടകത്തെ സംബന്ധിച്ചിടത്തോളം ഹരിജൻ വെൽഫെയർ ഡിപ്പാർട്ട്മെൻറിന്റെ പ്രവർത്തനം തീരെ തൃപ്തികരമല്ലെന്നാണു് എന്റെ അനുഭവം."

* SRI V. ARUMUGAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன். திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீவைகுண்டமாகிய எங்கள் தொகுதியில் ஹரிஜனங்கள் பெரும்பாலும் இருக்கின்றனர். அவர்களுக்கு சரியான முறையில் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுப்பதில்லை. கிணறுகள் வெட்டித் தருவதில்லை; சரியான ரோடு வசதிகள் செய்துகொடுப்பதில்லை. அவர்கள் பெரும்பாலும் வயல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். ஆகையால் அவர்களுக்குத் தேவையான உரம், குப்பை முதலிய சாமான்களை வெளியிலிருந்து வாங்கிக் கொண்டு வருவதற்கு சரியான பாதை வசதி கிடையாது. அதைக் கவனித்து ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று மகஜர் கொடுத்தால், ரெவின்யூ அதிகாரிகள் எல்லாம் 500 பேர்களுக்கு மேல் ஜனத்தொகை இருந்தால் கிணறு போன்றவைகள் வெட்டி, வசதி செய்துகொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். இதையெல்லாம் கவனித்து, அவர்களுக்கு சரியானபடி வசதிகள் செய்துதர கிணறுகள், ரோடுகள் முதலிய வசதிகள் செய்துகொடுக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். 12-05 p.m.

"அடுத்து, அவர்கள் வசிக்கக்கூடிய இடங்கள் சுகாதார முறைப்படி இல்லாமல் தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள்: வயல்களுக்கு மத்தியில் அவர்களுக்கு கிணறு வசதி செய்து கொடுக்காததனால், வயக்காட்டுக் கால்வாய்களில் போகக்கூடிய தண்ணீரைத்தான் அவர்கள் சாப்பிடுகிறார்கள். அதைச் சாப்பிடுவதால், பல தொத்து நோய்கள் வந்து, அவர்கள் வியாதியால் கஷ்டப்படுகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் காலரா வருகிறதென்றால், முதலில் ஹரிஜனங்கள் வசிக்கும்படியான சேரிகளில்தான் ஆரம்பமாகிறது. அதனால் பல மக்கள் இறந்து போகிறார்கள். ஆகையால் அந்த மக்களுக்கு கிணறு வசதி செய்து கொடுப்பது மிக மிக அவசியம். அதைக் கவனிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஹரிஜனங்கள், விவசாயிகள் ஆகியோர் தங்கள் மாடுகளை குளம், கால்வாய், குட்டைகளில் மேய்க்க வேண்டுமானால், சர்க்கார் அந்த குளம் கால்வாய், குட்டைகளை குத்தகைக்கு விட்டு விடுகின்றனர். அப்படி குத்தகைக்கு விடும் தொகையும் ஒரு சிறு தொகைதான். இவ்வாறு செய்வதால் அவர்களுடைய ஆடு மாடுகள் குளம் குட்டைகளுக்கு சென்று விட்டால், அதைப் பற்றிக்கொண்டு ஒரு சோடிக்கு ரூ. 5, ரூ. 6 என்று அபராதம் வசூல் செய்கிறார்கள். அதைப்பற்றி பலகாலமாக சர்க்காருக்கு ரிப்போர்ட் பண்ணியும், அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. தென்கரையிலிருந்து சர்க்காருக்கு உபப்பட்ட ஒரு ஓடை இரண்டு மைல் தூரத்திற்கு ஓடிக்கொண்டிருக்கிறது. இரண்டு பக்கமும் நஞ்சைகள். அதில் மாடுகளைக் கொண்டுபோய் குளிப்பாட்டினாலும், ரெவின்யூ அதிகாரிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகச் சொல்லி, ஆடு மாடுகளைப் பற்றிக் கொண்டு ரூ. 5, ரூ. 6 அபராதம் வசூலிக்கிறார்கள். அதுபற்றியும் பொதுமக்கள் ரெவின்யூ அதிகாரிகளிடம் 1952-ம் வருஷத்திலே ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கும் இதுவரை ஒன்றும் காணோம். அவர்களை விசாரித்தால் எங்களுக்கு ஒன்றும் தெரியாது, நாங்கள் சர்க்காருக்கு அனுப்பிவிட்டோம் என்று கூறுகிறார்கள். 1952-ம் ஆண்டு கொடுக்கப்பட்டு, இப்போது 1955-ம் ஆண்டும் நடக்கிறது. ஆனால் இதுவரை ஒன்றும் தெரியவில்லை. அந்த மகஜர் எல்லாம் பாதாள லோகத்திற்குத்தான் அனுப்பிவிட்டார்களோ? அல்லது ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாட்டிற்கு அனுப்பிவிட்டார்களோ? ஒன்றும் புரியவில்லை.

[Sri V. Arumugam] [11th March 1955

"ശ്രീവൈകുണ്ഠം, വേലൂർ, ആതിത്തനല്ലൂർ കാൽവായ് പോൻറ ഇടങ്ങളിൽ ഹരിജനങ്ങളിടത്തിലേ കാവൽ ഒരു ഏക്കരുക്കു 7 മരക്കാൽ; വീട്ടുക്കു 5 മരക്കാൽ എൻറു സൊല്ലി ഒരു വിത വീട്ടു വരി പരമ്പരയാക വസൂലിക്കപ്പട്ടു വരുകിറതു. അതൈ വെള്ളൈക്കാരൻ കാലത്തിൽ താൻ കൊടുത്തോം, ഇപ്പോതു സുതന്തിരം വന്തുവിട്ടപ്പിറകും കൊടുക്ക മുടിയാതു എൻറു സൊൻനാൽ, വയൽകളിൽ നെൽ അറുവടയാകും സമയങ്കളിൽ ഇരവിലേ ചെൻറു അറുത്തുക്കൊണ്ടു പോയ്വിടുകിറാർകൾ. അതൻ പേരിലും സർക്കാരുക്കു ഒരു മകജർ കൊടുത്തിരുന്തും, ഇൻറു വരൈയിലും അതുക്കു എൻന നടവടിക്കൈകൾ എടുത്താർകൾ എൻപതേ തെരിയവില്ലൈ. ഇവ്വുരിമൈ പരമ്പരയാക ഒരുവരിടം ഇരുന്തുകൊണ്ടു വരുകിറതു. അവർകളുക്കു കപ്പം കട്ടുവതുപോൽ ഇന്തക് കാവൽ വരിയൈക് കട്ടിക്കൊണ്ടു വരവേണ്ടും. അതൈക് കൊടുക്ക മുടിയാതു എൻറു സൊൻനാൽ പയമുറുത്തി വാങ്കിവിടുകിറാർകൾ. ഇതനാൽ പല കഷ്ടങ്കൾ ഏറ്പടുകിൻറതു. അതികാരികളിടം സൊൻനാലും കവനിപ്പതില്ലൈ. ഇതുക്കു അങ്കുള്ള അതികാരികളും, പോലീസാരുമേ ഉടന്തൈയാക ഇരുക്കിറാർകൾ. ആകവേ ഇതൈയെല്ലാം കവനിപ്പതുക്കു ഒരു സ്പെഷൽ അതികാരിയൈ നിയമിത്തു ഇന്ത കാവൽ കുത്തകൈയൈ ഉടനടിയാക രത്തു സെയ്വതുക്കു ഏറ്പാടു സെയ്യും പടിയാക സർക്കാരൈക് കേട്ടുക്കൊള്ളുകിറേൻ.

12-10 p.m. "അടുത്തപടിയാക ഹരിജനങ്കളുക്കു കിണറുകൾ മുതലിയവൈകൾ വെട്ടിക് കൊടുക്കവേണ്ടും എൻറു പ്രചാരം സെയ്കിറാർകൾ. അപ്പടി ഹരിജനങ്കളുക്കു സരിയാന മുറൈയിൽ സെയ്തുകൊടുപ്പതാക എനക്കുത് തെരിയവില്ലൈ. എങ്കൾ ഊരിൽ ഒരു ശിവൻ കോയിൽ ഇരുക്കിറതു. അതു സർക്കാർ സംബന്തപ്പട്ട കോവിൽ. കോവിൽകളൈ തിറന്തുവിട്ടു കോവിലിലുള്ള സ്വാമിയൈക് കുംപിടലാം എൻറു ചട്ടം സെയ്തുംകൂട അന്തക് കോവിലൈ ഹരിജനങ്കളുക്കുത് തിറന്തു വിടമാട്ടോമെൻറു സൊല്ലുകിറാർകൾ. ഇന്നും അന്തക് കോവിലൈ തിറന്തു വിടവില്ലൈ. ഹരിജനങ്കൾ കോവിലുക്കുപ് പോകവേണ്ടും എൻറു നിനൈത്താൽ അങ്കേ ഇരുക്കും ഒരു കൂട്ടത്താർ ഹരിജനങ്കൾ ഉള്ളേ വന്താൽ ഉടനേ കമ്പാലും കല്ലാലും അടിത്തുക് കൊൻറു വിടുകിറാർകൾ. ആകവേ അന്തക് കോവിലൈ തിറന്തു വിടുവതുക്കു സർക്കാർ ഒരു ഉത്തരവു പോട വേണ്ടും. ഹരിജനങ്കൾ സാമി കുംപിട വേണ്ടുമെൻറ ഉത്തരവൈ ഉടനേ ഇന്ത സർക്കാർ പോട വേണ്ടും എൻറു കേട്ടുക്കൊള്ളുകിറേൻ. ഇത്തുടൻ മുടിത്തുക്കൊള്ളുകിറേൻ."

MR. SPEAKER :—"കണം അങ്കത്തിനർ മേജൈയിൻ മേൽ തട്ടാമൽ പേചവേണ്ടും തട്ടിനാൽ അന്ത ചത്തമും കേട്ടും. ഇനിമേൽ പേചുങ്കൾ."

SRI V. ARUMUGAM :—"നാൻ മുടിത്തു വിട്ടേൻ."

SRI E. T. KUNHAN :—'മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, 1954-55 ലെ ബഡ്ജററിൽ ഹരിജനോദ്ധാരണത്തിനുവേണ്ടി 104 ലക്ഷം ഉറുപ്പിക വച്ചിരുന്നതു് 1955-56 ലെ ബഡ്ജററിൽ 109 ലക്ഷമായി വർദ്ധിപ്പിച്ചിട്ടുണ്ടു് എന്നു കാണുന്നു. ഇങ്ങനെ ബഡ്ജററിൽ കൂടുതൽ തുക നീക്കിവച്ചിട്ടുണ്ടെന്നു ഒരുവശത്തു പറയുമ്പോൾ മറെറാരു വശത്തു ഹരിജനങ്ങളുടെ സ്കോളർഷിപ്പിന്നും മററുള്ള ആവശ്യങ്ങൾ തള്ളിക്കൊണ്ടിരിക്കുന്നതാണു് നാം കാണുന്നതു്. കഴിഞ്ഞ കൊല്ലം സ്കോളർഷിപ്പിനുള്ള 5,000 അപേക്ഷകൾ തള്ളിയിട്ടുണ്ടെന്നാണു് ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി ഇവിടെ ഒരു ചോദ്യത്തിനു മറുപടിയായി പറഞ്ഞതു്. നൂററിനാലു ലക്ഷത്തിനെ അഞ്ചു ലക്ഷം കൂടെ കൂട്ടി നൂററമ്പതു ലക്ഷമാക്കി വർദ്ധിപ്പിച്ചിട്ടുണ്ടെന്നു പറയുമ്പോൾ ഹരിജനങ്ങളുടെ പേരിലാണു് ഈ പണം ചെലവാകുന്നതെന്നു തോന്നാമെങ്കിലും യഥാർത്ഥത്തിൽ ഹരിജനങ്ങൾക്കുവേണ്ടി മാത്രമല്ല ഈ പണം ചെലവാകുന്നതു്. പിന്നോക്കസമുദായങ്ങൾക്കുകൂടി ചേർത്താണു് ഈ തുക ഉൾപ്പെടുത്തിയിട്ടുള്ളതു്. ഹരിജനങ്ങൾക്കുവേണ്ടി ഇങ്ങനെ അഞ്ചു ലക്ഷം, പത്തു ലക്ഷം വർദ്ധിപ്പിച്ചിട്ടുണ്ടെന്നു പറയാതെ പിന്നോക്കസമുദായങ്ങൾക്കുള്ളതു് മാററിവച്ചിട്ടു ഹരിജനങ്ങൾക്കുവേണ്ടിയുള്ളതു് പ്രത്യേകമായി വകയിരുത്തണം. എന്നുമാത്രമല്ല, ഈ തുക തീരെ കുറവാണെന്നും ഞാൻ ചൂണ്ടിക്കാണിച്ചുകൊള്ളട്ടെ. ഹരിജനക്ഷേമത്തിനു വേണ്ടി ഒരു അഞ്ചു കോടി ഉറുപ്പികയെങ്കിലും നീക്കിവയ്ക്കണമെന്നാണു് ഞാൻ ആവശ്യപ്പെടുന്നതു്. സ്കോളർഷിപ്പിനു അയച്ച ഹരജികളിൽതന്നെ അയ്യായിരം ഹരജികൾ

11th March 1955] [Sri E. T. Kunhan]

കഴിഞ്ഞ കൊല്ലം തള്ളപ്പെടുകയുണ്ടായെന്നു പറഞ്ഞുവല്ലോ. അതുകൂടാതെ ഹരജി അയയ്ക്കുകപോലും ചെയ്തിട്ടില്ലാത്ത എത്രയോ ആയിരം സെക്കണ്ടറി സ്കൂൾ വിദ്യാർത്ഥികളുണ്ട്. ഹരജി അയയ്ക്കുണ്ടതു ഏതു കാലത്താണെന്നോ ആർക്കാണെന്നോ അറിവില്ലാത്തതു നിമിത്തം എത്രയോ കുട്ടികൾക്കു ഹരജി അയയ്ക്കാൻ സാധിച്ചിട്ടില്ല. കഴിഞ്ഞ കൊല്ലത്തേക്കാൾ ഇക്കൊല്ലം വളരെ കൂടുതൽ കുട്ടികൾ സ്കൂളിൽ ചേർന്നിട്ടുണ്ട്. കഴിഞ്ഞ കൊല്ലം കൊടുത്തവർക്കു കൊടുക്കാതിരുന്നവർക്കും പുറമെ ഈ പുതിയ കുട്ടികൾക്കുകൂടി സ്കോളർഷിപ്പുകൾ കൊടുക്കേണ്ടതായിരിക്കുന്നു. ആ നിലക്കു നോക്കുമ്പോൾ ഇപ്പോൾ ബഡ്ജററിൽ മാററിവച്ചിരിക്കുന്ന തുക വർദ്ധിപ്പിക്കേണ്ടതല്ലേ എന്നാണ് ഞാൻ ചോദിക്കുന്നതു്.

"ഇനി ഒന്നു ചോദിച്ചുകൊള്ളട്ടെ. ഹരിജൻ വിദ്യാർത്ഥികൾക്കു സ്കോളർഷിപ്പ് അനുവദിച്ചിട്ടുണ്ട്, മററു വിദ്യാഭ്യാസ സൌജന്യങ്ങൾ പലതും അനുവദിച്ചിട്ടുണ്ട്. പിന്നെ എന്തുകൊണ്ട് ഈ സ്പെഷ്യൽ ഫീസ്സ് കൊടുക്കുന്നതിൽനിന്നുകൂടെ അവരെ ഒഴിവാക്കിക്കൂടാ എന്നാണ് ഞാൻ ചോദിക്കുന്നതു്. ഹൈസ്കൂളുകളിലും കോളേജുകളിലും ഈ സ്പെഷ്യൽ ഫീസ്സ് കൊടുക്കാൻ നിവൃത്തിയില്ലാത്തതുകൊണ്ടു മാത്രം എത്രയോ കുട്ടികൾക്കു പോകാൻ കഴിയാതെ വന്നിട്ടുണ്ട്. ആനുകൂല്യം കൊടുക്കാമെങ്കിൽ എന്തുകൊണ്ട് തോട്ടിക്കൂടെ കൊടുത്തുകൂടാ? സ്പെഷ്യൽ ഫീസ്സ് മാത്രമല്ല അഡ്മിഷൻ ഫീസ്സും ഹരിജനങ്ങൾക്കു കൊടുക്കേണ്ടതായിരിക്കുന്നു. ഇതു നിർത്തലാക്കണം.

"എസ്.എസ്.എൽ.സി. പരീക്ഷയ്ക്കു ഹരിജൻ വിദ്യാർത്ഥികൾ പ്രൈവററായി ചേരുമ്പോൾ ഫീസ്സിൽനിന്നു ഒഴിവാക്കിക്കിട്ടുന്നില്ല. ഇതിനെ സംബന്ധിച്ചു ഹരിജൻ വെൽഫെയർ ഡിപ്പാർട്ട്മെൻറിൽനിന്നു അയച്ച ഒരു കത്തു ഞാൻ കാണുകയുണ്ടായി. മുൻകൊല്ലത്തിൽ ഫീസ്സ് സൌജന്യം അനുവദിച്ചിട്ടുണ്ടെങ്കിലേ പിററേ കൊല്ലവും അനുവദിക്കുകയുള്ളുവെന്നാണ് അതിൽ പറഞ്ഞിരിക്കുന്നതു്. ഇതെന്തു ന്യായമാണ്? ഒരു കൊല്ലം കൈയിൽ പണമുണ്ടായിരുന്നു. സൌജന്യത്തിന്നു അപേക്ഷിക്കാതെ ഫീസ്സ് കൊടുത്തു. അതുകൊണ്ടു പിററേ കൊല്ലത്തിൽ സൌജന്യത്തിന്നു അർഹതയില്ലാതായിപ്പോവുമോ? പണമില്ലാത്തതുകൊണ്ടു ഇക്കൊല്ലം സൌജന്യത്തിനപേക്ഷിക്കുന്നു. അതു കൊടുക്കുകയില്ലെന്നു പറയുന്നതു് അനീതിയാണ്. മുമ്പൊക്കെ ഒരു കൊല്ലം തോററാലും സ്കോളർഷിപ്പ് കൊടുക്കുമായിരുന്നു. ഇപ്പോൾ ഈതു നിർത്തൽ ചെയ്തിരിക്കയാണ്. ഒരു കൊല്ലം തോററാൽ അടുത്ത കൊല്ലം സ്കോളർഷിപ്പ് കൊടുക്കുകയില്ല. ഇങ്ങനെ നോക്കിയാൽ ഹരിജൻ കുട്ടികൾക്കു ഓരോരോ കാരണം പറഞ്ഞു സ്കോളർഷിപ്പ് നിഷേധിച്ചുകൊണ്ടിരിക്കുന്നതായിട്ടാണ് കാണുന്നതു്. ഹരിജൻ കുട്ടികൾ വിദ്യാഭ്യാസത്തിൽ പിന്നോക്കമാണ്. അവരെ വർദ്ധിപ്പിക്കണം, അവരെ ഉദ്ധരിക്കണം എന്നെല്ലാം ഗവർമ്മേണ്ടു വിചാരമുണ്ടെങ്കിൽ ഒരു കൊല്ലം തോററുപോയതുകൊണ്ടു മാത്രം സ്കോളർഷിപ്പ് കൊടുക്കാതിരിക്കുന്ന സമ്പ്രദായം ഉടനെ നിർത്തൽചെയ്യണം. അല്ലെങ്കിൽ എത്രയോ കുട്ടികൾക്കു പഠിക്കാൻ സാദ്ധ്യമല്ലാതെ വരും. സമയത്തു ഭക്ഷണം കഴിക്കാതെയോ നേരെ വസ്ത്രം ചുററിക്കൊണ്ടോ പള്ളിക്കൂടത്തിൽ പോകാൻ കഴിവില്ലാത്തവരാണ് നാട്ടിൻപുറങ്ങളിലെ ഹരിജനങ്ങൾ. അവർക്കുള്ള സൌജന്യങ്ങൾ ഒന്നൊന്നായി എടുത്തുകളഞ്ഞാൽ അവർക്കു പള്ളിക്കൂടത്തിൽ പോകാനേ കഴിഞ്ഞില്ലെന്നു വരും.

"മലബാറിൽ ഇന്നു് കോഴിക്കോട്ടും പാലക്കാട്ടുമാണ് ഓരോ ഹരിജൻ ഹോസ്റ്റലുള്ളതു്. ഭൂരിപക്ഷം ഹരിജനങ്ങളുള്ള ഒരു താലൂക്കാണ് പൊന്നാനിത്താലൂക്ക്. പൊന്നാനിത്താലൂക്കിൽ മാത്രമാണ് കഴിഞ്ഞ തിരഞ്ഞെടുപ്പിൽ പാർലിമെൻറിലേക്കും സംസ്ഥാന നിയമസഭയിലേക്കും ഹരിജനങ്ങൾക്കു റിസർവ്വഡ് സീററു ഉണ്ടായിരുന്നതു്. അവിടെ ഭൂരിപക്ഷം ഹരിജനങ്ങളാണെന്നു അതുകൊണ്ടുതന്നെ മനസ്സിലാക്കാവുന്നതാണ്. അങ്ങനെയുള്ള പൊന്നാനിത്താലൂക്കിൽ ഒരു ഹരിജൻ ഹോസ്റ്റൽ വേണമെന്ന് ആവശ്യപ്പെട്ടിരുന്നു. ഗവർമ്മേണ്ടു ഈതു് ഒരിക്കൽ അനുവദിക്കുകയും ചെയ്തു. പക്ഷേ പിന്നീടു അതു വേണ്ടെന്നുവെച്ചു. ഗവർമ്മേണ്ടും ഹരിജൻ ഹോസ്റ്റലിട്ടെങ്കിലും ഹരിജനസേവാ സംഘത്തിന്റെ വകയായി ഒരു ഹോസ്റ്റലുള്ളതിന്നു ഇക്കൊല്ലത്തിൽ ഗ്രാൻറു പോലും അനുവദിച്ചു കൊടുത്തിട്ടില്ല. അതിനെപ്പററി ചോദിച്ചപ്പോൾ ആലോചിച്ചുകൊണ്ടിരിക്കയാണെന്ന് ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി മറുപടി പറഞ്ഞു. മറെറല്ലാ ഹോസ്റ്റലുകൾക്കും ഗ്രാൻറു കൊടുത്തുകഴിഞ്ഞിട്ടും പൊന്നാനിയിലെ ഹോസ്റ്റലിന്നു മാത്രം ഇതുവരെ ഗ്രാൻറു് കൊടുത്തിട്ടില്ല.

[Sri E. T. Kunhan] [11th March 1955

"ഉദ്യോഗനിയമനങ്ങളിൽ ഹരിജനങ്ങൾക്കു 16 ശതമാനം റിസർവ്വ് ചെയ്യിട്ടുണ്ടെന്ന് പറയുന്നുണ്ട്. ഇങ്ങനെ 16 ശതമാനം റിസർവ്വ് ചെയ്യിട്ടുണ്ടെന്നു പറഞ്ഞു കേൾക്കുന്നതല്ലാതെ അനുഭവത്തിൽ കണ്ടിട്ടില്ല. ഉദ്യോഗങ്ങൾക്കുവേണ്ടി ഹരിജനങ്ങൾ അപേക്ഷ അയച്ചാൽ അവർക്കു കിട്ടുകയില്ല. ഹരിജനങ്ങൾ ഹരജി അയച്ചാൽ ഒഴിവില്ലെന്നു പറയും. അതേ സമയം മററാളുകളെ നിയമിക്കുകയും ചെയ്യും. ഒഴിവുണ്ടെങ്കിൽ പ്രാപ്തിയില്ലെന്നു പറയും. എന്താണ് ഈ പ്രാപ്തി എന്നു എനിക്കു മനസ്സിലാകുന്നില്ല. വെറും പ്യൂൺ വേലയ്ക്കും ക്ലർക്കുവേലയ്ക്കും പ്രത്യേകിച്ചു ഏതു പ്രാപ്തിയാണ് വേണ്ടതു? ആ ഉദ്യോഗങ്ങളിലെങ്കിലും ഹരിജനങ്ങളെ നിയമിച്ചുകൂടേ? ഒഴിവില്ല, പ്രാപ്തിയില്ല എന്നെല്ലാം പറഞ്ഞു ഹരജികൾ നിഷേധിക്കുകയല്ലാതെ ഹരിജനങ്ങൾക്കു ഒരിടത്തും ഉദ്യോഗം കൊടുത്തു കണ്ടിട്ടില്ല. പിന്നെ എന്തിനാണ് ഹരിജനങ്ങൾക്കു സ്ഥാനങ്ങൾ റിസർവ്വ് ചെയ്യിട്ടുണ്ടെന്നു കടലാസ്സിൽ എഴുതിവെച്ചിരിക്കുന്നതെന്നു മനസ്സിലാകുന്നില്ല.

"മറെറാരു കാര്യം അയിത്തോച്ചാടനമാണ്. ഇന്നു സർക്കാർ ക്ഷേത്രങ്ങളിൽ ഹരിജനങ്ങൾക്കു പ്രവേശനമനുവദിച്ചിട്ടുണ്ട്. ക്ഷേത്രപ്രവേശനം കിട്ടിയാൽ പട്ടിണി മാറുമോ, വിശപ്പു മാറുമോ എന്നെല്ലാം ചോദിക്കുന്നവരുണ്ട്. ക്ഷേത്രപ്രവേശനംകൊണ്ടു വിശപ്പു മാറുകയില്ലെന്നുള്ളതു ശരിതന്നെ. എങ്കിലും ഹരിജനങ്ങളും മനുഷ്യരാണ്, അവർക്കും ക്ഷേത്രങ്ങളിൽ പ്രവേശിക്കുന്നതിന്നു അവകാശമുണ്ട്. തങ്ങളും മനുഷ്യരാണെന്ന ഒരു ബോധം ഹരിജനങ്ങൾക്കുണ്ടാകുന്നതിന്നു ക്ഷേത്രപ്രവേശനം വളരെ പ്രയോജനപ്പെടുന്നുണ്ട്. മലബാറിലാണെങ്കിൽ പൊതുജനങ്ങൾ ആരാധന നടത്തുന്ന എത്രയോ സ്വകാര്യക്ഷേത്രങ്ങളിൽ ഇന്നിയും ഹരിജനങ്ങൾക്കു പ്രവേശനം കിട്ടിയിട്ടില്ല. ചോദിച്ചാൽ പറയും അതെല്ലാം സ്വകാര്യക്ഷേത്രങ്ങളാണ്, കുടുംബവകയാണ് എന്നെല്ലാം. അതു ശരിയല്ല. ഈ ക്ഷേത്രങ്ങളിലെല്ലാം ഹരിജനങ്ങളല്ലാത്തുള്ള പൊതുജനങ്ങൾക്കു പ്രവേശനമുണ്ട്. അവർ പ്രവേശിച്ചു ആരാധന നടത്തുന്നുമുണ്ട്. ഹരിജനങ്ങൾക്കു പ്രവേശനമനുവദിക്കണമെന്നു പറയുമ്പോൾ മാത്രം ആ ക്ഷേത്രങ്ങൾ കുടുംബക്ഷേത്രങ്ങളാണെന്നു പറഞ്ഞു മാറിനിൽക്കും. ഒന്നിലധികം കുടുംബങ്ങളിലെ ആളുകൾ ആരാധന നടത്തുന്ന എല്ലാ ക്ഷേത്രങ്ങളേയും പൊതുക്ഷേത്രങ്ങളായി കണക്കാക്കി ഹരിജനങ്ങൾക്കു പ്രവേശനം അനുവദിക്കേണ്ടതാണ്. കൂടാതെ ക്ഷേത്രങ്ങളിൽ പൂജാരി മുതലായ പ്രവൃത്തികൾക്കു ഇതുവരെ ഹരിജനങ്ങളെ നിയമിച്ചിട്ടില്ല. ക്ഷേത്രങ്ങളിൽ ഏതു പ്രവൃത്തിക്കും ഹരിജനങ്ങൾക്കു അവകാശമുണ്ടെന്നുവരുന്നില്ലെങ്കിൽ ഈ രാജ്യത്തു അയിത്തം നീങ്ങാൻ പോകുന്നില്ല.

"ഹരിജനങ്ങളുടെ സാമൂഹ്യാവശതകൾ നീങ്ങണമെങ്കിൽ അതുമായി അവരുടെ സാമ്പത്തികാവശതകൾ നീങ്ങണം. ഹരിജനങ്ങളുടെ സാമ്പത്തികനില ഉയരാൻ അവർക്കു കൂടുതൽ വിദ്യാഭ്യാസസൌകര്യങ്ങളും ഉദ്യോഗങ്ങളും നല്കേണ്ടതു അത്യാവശ്യമാണ്".

"ഇന്നു ഈ രാജ്യത്തു ധാരാളം തരിശുനിലങ്ങൾ കിടപ്പുണ്ട്. അതെല്ലാം ഹരിജനങ്ങൾക്കു വിതിച്ചുകൊടുക്കണം. ഇന്നു പലയിടത്തും ഹരിജനങ്ങൾ തരിശു സ്ഥലങ്ങളിൽ അദ്ധ്വാനിച്ചു കൃഷിയിറക്കിയിട്ടുണ്ട്. പക്ഷെ അതിന്റെ അനുഭവം അവർക്കു കിട്ടുന്നില്ല. അതു മററാളുകൾ തട്ടിക്കൊണ്ടുപോവുകയാണ് ചെയ്യുന്നതു്. ആ ഭൂമികൾ ഹരിജനങ്ങൾക്കുതന്നെ വിതിച്ചുകൊടുക്കുകയാണെങ്കിൽ അവരുടെ പ്രവൃത്തിയുടെ ഫലം അവർക്കു അനുഭവിക്കാൻ കഴിഞ്ഞുവെന്നുള്ള സംതൃപ്തിക്കു കാരണമാകും. മലബാറിൽ ഓരോ ഹരിജനം വാപ്പിടത്തിന്നു 15 സെൻറ് സ്ഥലംവീതം വിതിച്ചുകൊടുക്കുമെന്നു ഗവമ്മേണ്ടു 1949 ൽ പ്രഖ്യാപിച്ചിട്ടുള്ളതാണ്. ഇന്നുവരേയും ഒരിഞ്ചു സ്ഥലംപോലും ഹരിജനങ്ങൾക്കു കൊടുത്തിട്ടില്ല. ആ പ്രഖ്യാപനമസരിച്ചു 15 സെൻറ് സ്ഥലവീതം ഉടനെ കൊടുക്കണമെന്നു ഞങ്ങൾ കഴിഞ്ഞ മൂന്നു കൊല്ലമായിട്ടു ഇടവിടെ മുറവിളികൂട്ടിക്കൊണ്ടിരിക്കുകയാണ്. ഏതായാലും അടുത്ത ഏപ്രിൽ 1-ാം തിയ്യതിക്കുശേഷം അതിനുള്ള നടപടികൾ ഉത്സാഹിതമായി ആരംഭിക്കുന്നതാണെന്നു ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി അറിയിച്ചതിൽ ഞങ്ങൾ സന്തോഷിക്കുന്നു. വറച്ചിട്ടല്ലാതെ ഇക്കുറി അതു് കാര്യത്തിൽ ചെയ്യുകാണുക്കമെന്നു് ഞങ്ങൾ വിശ്വസിക്കുകയും ചെയ്യുന്നു. സ്വന്തഭൂമിയില്ലാത്ത എല്ലാ ഹരിജനങ്ങൾക്കും 15 സെൻറ് ഭൂമി വീതം കൊടുക്കണം. ഇനി ഒന്നുകൂടി പ്രത്യേകം പറയേണ്ടതുണ്ട്. ഹരിജനങ്ങൾക്കു തരിശു കൊടുക്കുമ്പോൾ എവിടെയെങ്കിലും കൊടുത്താൽ മതി എന്നുവയ്ക്കരുതു്. ഇന്നു് അവർ താമസിക്കുന്ന സ്ഥലങ്ങൾതന്നെ അവർക്കു് കൊടുക്കണം. നീണ്ടുകാലമായി തലമുറതലമുറയായി താമസിച്ചുവരുന്ന സ്ഥലം, അവരുടെ

11th March 1955] [Sri E. T. Kunhan]

കാരണവന്മാർ ജനിച്ചുവളർന്ന മൺമറഞ്ഞ സ്ഥലം, അവരുടെ പൂർവ്വികന്മാരെ മറവ് ചെയ്തിട്ടുള്ള സ്ഥലം—ആ സ്ഥലം വിട്ടുപോകാൻ അവർക്ക് വലിയ വേദനയുമുണ്ട്. അതു വിട്ടുപോകാൻ അവരെ നിർബ്ബന്ധിക്കരുത്. ആ സ്ഥലം തന്നെ അവർക്ക് സ്വന്തമായി പതിച്ചുകൊടുക്കണം.

"ഹരിജൻ മർദ്ദനങ്ങളുണ്ടായാൽ പോലീസ് എടുക്കുന്ന നിലപാടിനെക്കുറിച്ചുകൂടി രണ്ടു വാക്കു പറഞ്ഞുകൊള്ളട്ടെ. ഹരിജനങ്ങൾ പോലീസിൽ ഒരു ഹരജി അയച്ചാൽ പോലീസുകാർ തിരിഞ്ഞുനോക്കുന്ന ഒരു ഏർപ്പാടില്ല. ഒരുവേള തിരിഞ്ഞുനോക്കിയാൽതന്നെ കുററവാളിയുടെമേൽ കേസ്സെടുക്കുകയിങ്ങനെ മാത്രമല്ല, ഹരജി അയച്ച ഹരിജൻെറ മേൽ കേസ്സ് രിരിച്ചടിക്കുകയും ചെയ്യും. ഹരിജനങ്ങളുടെ പേരിൽ കള്ളക്കേസ്സുകൾ കൊടുത്തു ജന്മിമാർ പോലീസിനെക്കൊണ്ടു കഠിനമായി മർദ്ദിപ്പിക്കുന്നുണ്ട്. 1954 ജനുവരിമാസം 15-ാം തിയ്യതി ഏങ്ങണ്ടിയൂരിൽ അരിക്കുട്ടപ്പൻ എന്ന ഒരു ഹരിജനെ വലപ്പാട് പോലീസ് സ്റ്റേഷനിൽ വിളിച്ചുകൊണ്ടുപോയി കഠിനമായിമർദ്ദിച്ച് എല്ലൊടിച്ചുവിട്ടു. വീണ്ടും മൂന്നാം ദിവസം പോലീസ്സ്റ്റേഷനിൽ ഹാജരായിക്കൊള്ളണമെന്നു പറഞ്ഞയച്ചു. അതായതു് ജനുവരി 17-ാം തിയ്യതി. പതിനേഴാം തിയ്യതി കാലത്ത് ആ കുട്ടപ്പൻ ഒരിടത്തു തൂങ്ങിനിൽക്കുന്നതായിട്ടാണ് കണ്ടതു്. ഇതാണ് പോലീസുകാരിൽനിന്ന് ഹരിജനങ്ങൾക്കു കിട്ടുന്ന രക്ഷയുടെ സ്വഭാവം. എവിടെയും ഹരിജനങ്ങളെ സഹായിക്കാനല്ല, ദ്രോഹിക്കാനാണ് പോലീസുകാർ ഇടപെടുന്നതു്. അതുകൊണ്ടാണ് മലബാറിൽ ഹരിജനങ്ങളുടെ കേസ്സുകളെപ്പററി അന്വേഷിക്കാൻ ഒരു സ്പെഷ്യൽ പോലീസ് ഇൻസ്പെക്ടരെ നിയമിക്കണമെന്ന് ഞങ്ങൾ ആഗ്രഹിക്കുന്നതു്. ഗവമ്മെണ്ടു് അതിനെപ്പററി കാര്യമായി ആലോചിക്കണമെന്നഭ്യർത്ഥിക്കുന്നു."

Sri V. S. SIVAPRAKASAM :—"*കനം സഭാ നായകർ അവർകളേ, കനം ഹരിജന ഇലാക്കാ മന്ത്രിമി അവർകൾ കൊണ്ടു വന്നിരുക്കും ഡിമാണ്ടെ നാൻ ആതരിത്തു സില വാർത്തൈകളൈച് ചൊല്ല ആചൈപടുകിറേൻ. ഇന്നാട്ടിൽ പലകാലമാക തീണ്ടാതവർകളാകവും താഴ്ത്തപ്പട്ടവർകളാകവും വെകു കാലമാക നചുക്കപ്പട്ടു വന്ത ഹരിജന മക്കൾ ഇന്ത്രൈക്കു ഒരുവാറു ഉയർന്ത നിലൈമൈയിൽ ഇരുക്കിറാർകൾ എന്ററാൽ അതുക്കു മുക്കിയമാന കാരണം ജാതി ഹിന്ദുക്കളും പിൻപട്ട വകുപ്പിനർകളും താൻ എന്പതു എന്നുടൈയ അഭിപ്രായം. ചർക്കാർ ഹരിജനങ്കളുടൈയ മുന്നേററത്തിക്കു ചട്ടങ്കൾ ചെയ്തു വിടലാം. ആനാൽ അതൈ നിറൈവേററുവതു ജാതി ഹിന്ദുക്കളും പിൻപട്ടവർകളും താൻ. ഇവർകളുടൈയ ഒത്തുഴൈപ്പു ഇല്ലാവിട്ടാൽ ഹരിജനങ്കൾ ഇപ്പൊഴുതു ഇന്ത നിലൈമൈക്കു വന്തിരുക്ക മുടിയാതു. ജാതി ഹിന്ദുക്കളുടൈയ ഉറവും ഒത്തുഴൈപ്പും ഇരുന്താൽ താൻ ഹരിജനങ്കൾ മുന്നുക്കു വര മുടിയും. ഇന്ത്രൈക്കു ഹരിജനങ്കൾ മുന്നേററമടൈന്തിരുക്കിറാർകൾ എന്ററാൽ അതുക്കു കാരണം ജാതി ഹിന്ദുക്കൾ താൻ. ഗ്രാമങ്കളിൽ ഇപ്പൊഴുതു തീണ്ടാമൈ ഇല്ലൈ എന്ററു ചൊല്ലി വിട മുടിയാതു. ആനാൽ ചില ഗ്രാമങ്കളിൽ തീണ്ടാമൈ എന്പതു ഒഴിന്തു പോയ്വിട്ടതു എന്ററു നാൻ നിച്ചയമാകച് ചൊല്ലുവേൻ. മതുരൈയിൽ തീണ്ടാമൈ ഇല്ലൈ എന്ററു ചൊല്ലലാം. ചിതംപരത്തിൽ തീണ്ടാമൈ ഇല്ലൈ എന്ററു ചൊല്ലലാം. അങ്കെല്ലാം ജാതി ഹിന്ദുക്കളുടൈയ നല്ല മന മാററത്താൽ തീണ്ടാമൈ ഇല്ലാമൽ പോയ് വിട്ടതു എന്ററു താൻ ചൊല്ലവേണ്ടും.*

"*ഇന്നാട്ടിൽ ഹരിജന ഇയക്കത്തൈ ആരംപിത്തവർകൾ നടത്തുകിറവർകൾ എല്ലാം ജാതി ഹിന്ദുക്കൾ താൻ. കാന്തിജി ഒരു ഹരിജനരാ, അല്ലതു മതുരൈ ശ്രീ ഏ. വൈത്തിയനാതയ്യർ ഒരു ഹരിജനരാ. മതുരൈയിലുള്ള ശ്രീ എൻ. എം. ആർ. സുപ്പരാമൻ താൻ ഒരു ഹരിജനരാ. ചട്ടചപൈക്കു ഉള്ളേയും വെളിയേയും പോയ് വിത്തിയാചം ഇല്ലാമൽ പേചിനാൽ പഴകിനാൽ പോതും ഇന്ത തീണ്ടാമൈ എന്പതു അടിയോടു ഒഴിന്തു പോകും. ഇപ്പൊഴുതു ജാതി ഹിന്ദുക്കൾ താൻ ഹരിജനങ്കളുക്കു വേണ്ടിയ ചേവൈകളൈ ചെയ്തു കൊണ്ടിരുക്കിറാർകൾ. ഒരു ചില ഗ്രാമങ്കളിൽ ഹരിജനങ്കൾ മുന്നേററമടൈയാമൽ ഇരുന്താലും അനേകമാക എല്ലാ ഗ്രാമങ്കളിലും ഹരിജനങ്കൾ മുന്നേററമടൈന്തുതാൻ ഇരുക്കിറാർകൾ. നണ്പർ കലിയാണചുന്ദരമും നണ്പർ കോവിന്ദചാമി അവർകളും മന വിത്തിയാചം കൊള്ള വേണ്ടിയതില്ലൈ. അവർകളുക്കുള് Forward class, Backward class ചണ്ടൈ വര വേണ്*

[Sri V. S. Sivaprakasam] [11th March 1955

டாம். அவர்கள் எல்லோரும் செய்த உதவிதான் நாங்கள் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறோம். சர்க்கார் என்ன திட்டம் தான் கொண்டு வரட்டும் எவ்வளவு பணம் தான் ஒதுக்கட்டும், அதனால் ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்து விடமாட்டார்கள். ஜாதி ஹிந்துக்களுடைய மனப் பான்மைதான் மாறவேண்டும். ஜாதி ஹிந்துக்கள் தான் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இப்பொழுது ஜாதி ஹிந்துக்களுடைய உதவியினால் தான் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் டி.எஸ்.பி. ஆகவும் கலெக்டராகவும் இருக்கிறார்கள். இன்னும் பல ஹரிஜனங்கள் உத்தியோகங்களில் கெட்டிக் காரர்களாகவும் இருக்கிறார்கள். நல்ல பெயரையும் வாங்கியிருக்கிறார்கள், திறமையாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. நல்ல முறையில் வாழ்ந்து வருகிறார்கள். ஏன்? பாரபக்ஷமின்றி, நல்ல முறையில் நீதி செலுத்தும் நம்முடைய சபாநாயகர் அவர்களும் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்தான். கனம் சபாநாயகர் நடு நிலைமை வகித்து வருகிறார்; அதுவே ஒரு சான்றாகும். (கை தட்டல்) இப்படி எவ்வளவோ பேர்கள் நல்ல ஸ்திதியில் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் ஜாதி ஹிந்துக்கள் தான். இன்னும் ஹரிஜனங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கொடுத்தால் இன்னும் முன்னேற்றத்திற்கு வருவதற்கு முடியும். கெட்டிக்காரர்களும் திறமைசாலிகளும் ஹரிஜனங்களில் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். சந்தர்ப்பம் தான் வேண்டும். ஹரிஜன டிமாண்டில் பேசுவதில் பயன் இல்லை. ஹரிஜன டிமாண்டில் ஹரிஜனங்கள் பேசுவதைக் காட்டிலும் ஜாதி ஹிந்துக்கள் அதிகம் பேச வேண்டும். ஜாதி ஹிந்துக்களுடைய உதவியினால் அநேகம் ஹரிஜனங்களும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும் நல்ல முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்.

"இப்பொழுது ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் என்று ஒன்று இருக்கிறது. அந்த டிபார்ட்மெண்ட் என்ன செய்கிறது. இவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறது. ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுக்கிறது. இது பெரும்பாலும் ரெவினியூ அதிகாரிகளால் கவனிக்கப் படுகிறது. இவை சரியானபடி நடந்ததாகவும் இல்லை. இதற்கு வெல்பேர் என்று பெயர். ஹரிஜன் ஒருவர் உத்தியோகத்தில் இருக்கிறார் என்றால் அவருக்கு ஏதாவது இடஞ்சல் நேரிட்டால் அதைப்பற்றி ஹரிஜன டிபார்ட்மெண்ட் வெல்பேர் டைரக்டர் விசாரிக்க முடியாது. உத்தியோகங்களில் ஏதாகிலும் நியாயமான உயர்வு கிடைக்கவில்லை என்றால் அதைப்பற்றியும் அந்த டைரக்டர் விசாரிக்க முடியாது. அதற்கு வேண்டிய அதிகாரம் அவருக்கு இல்லை. யாராகிலும் ஹரிஜனங்களுக்கு கெடுதல் செய்கிறார்கள் என்றால் அதைப்பற்றியும் விசாரிக்க முடியாது. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாகவே ஹரிஜன் ஒருவர் பிரதம எஞ்சினியராக வந்திருக்க முடியும். அப்பொழுது சர்க்கார் தலையிடாமலிருந்திருந்தால் அவர்கள் பிரதம இஞ்சினியராக வந்திருக்க முடியும். ஹரிஜன வெல்பேர் டைரக்டர் கவனத்திற்கு அது வரவில்லை. இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் கவனிக்க அவருக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

"அடுத்தபடியாக சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டைப் பார்த்தேன். அதில் ஐ.ஜி.எப். ரிஜிஸ்ட்ரேஷனைப்பற்றி பிரமாதமாக எழுதி இருந்தது. அந்த விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். ராஜாஜி காலத்தில் ஒரு ஹரிஜன் ஐ.ஜி.எப். ரிஜிஸ்ட்ரேஷன் பதவிக்கு வரவேண்டியதாக இருந்தது. அந்த ஹரிஜனனுக்குத்தான் அந்தப் பதவியைக் கொடுக்க வேண்டும் என்று நான் ராஜாஜி அவர்களுடன் வாதாடினேன். அப்பொழுது கனம் நிதி மந்திரி அவர்களும் மாஜி மந்திரி ராஜாராம் அவர்களும் இருந்தார்கள். அப்பொழுது ஆந்திர ராஜ்யம் பிரியாமல் ஒன்றாக இருந்தபோது ஒரு ஐ.ஜி.எப். ரிஜிஸ்ட்ரேஷன்தான் இருந்தது. அப்பொழுது அந்த ஹரிஜனனுக்கு அந்தப் பதவியைக் கொடுக்காமல் பிறகு ராஜ்யம் பிரிந்த பிறகு இரண்டு ஐ.ஜி எப். ரிஜிஸ்ட்ரேஷன் பதவிகளை உண்டு பண்ணி இப்பொழுது அந்த ஹரிஜனனுக்கு ஜாயிண்ட் ஐ.ஜி.எப். ரிஜிஸ்ட்ரேஷன் உத்தியோகம் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி அநியாயங்களையெல்லாம் விசாரிக்க ஹரிஜன டைரக்டருக்கு அதிகாரம் வேண்டாமா?

11th March 1955] [Sri V. S. Sivaprakasam]

"இப்பொழுது நிலம் ஜாரி செய்வது என்பது ரெவினியூ டிபார்ட்மெண்டில் நடக்கிறது. ஸ்காலர்ஷிப் கொடுப்பது அந்தந்த இலாகாவில் வருகிறது.

"இந்த வேலைமட்டுமில்லாமல், இந்த மாதிரி சின்ன சின்ன விஷயங்களை மட்டும கவனிப்பதுடன் நில்லாமல், ஹரிஜன் ஒருவன் முன்னேற்றம் அடைந்து, உத்தியோகம் செய்து சர்க்காரிடத்திலே அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் வாங்கித் தருவதுமல்லாமல், சர்க்காரால் கொடுக்கப்பட்ட சலுகைகள் ஹரிஜனங்களுக்கு சரியாகப் போய்ச் சேர்ந்தனவா என்று பார்க்கும் ஹரிஜன Welfare டைரக்டராக இருக்கவேண்டும். அடுத்தபடியாக இந்த ஹரிஜன் Welfare டிபார்ட்மெண்டின் மூலம் ஹாஸ்டல் நடக்கிறது. இதைப்பற்றிச் சொல்ல பரிதாபமாக இருக்கிறது. முதலாவதாக ஹரிஜனங்களுக்கும், Backward class பிள்ளைகளுக்கும், ஒரே ஹாஸ்டல் இருப்பது பொருத்தமான முறை. தனித்தனியே இருக்கும் முறையை ஒழிக்கவேண்டும். அவ்விரு சமூகப் பிள்ளைகளுக்கு ஒரே இடத்தில் பழகும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இனிமேல் Backward class ஹரிஜன் என்ற வித்தியாசம் காட்ட இடங்கொடுக்கக்கூடாது. ஹரிஜனங்களுக்கு அதிக சலுகைகள் காட்டப்படுவதாக வீண் பிரசாரம் செய்யப்படுவதால் மற்ற இனத்தாருக்கு பொறாமை ஏற்படுகிறது. ஹரிஜனங்கள் நம் நாட்டு மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் முக்கியமான சமூகம் என்பதை உணரும்படி செய்ய, சந்தர்ப்பங்களை அவ்வாஸ்ட்டலிலே ஏற்படச் செய்ய வேண்டும். சில Private ஹாஸ்டல்களுக்கு, Lump sum ஆக தூக்கி சர்க்கார் கொடுக்கிறது. சர்க்கார் இப்பேர்ப்பட்ட ஹாஸ்டல்களுக்கு 10 லக்ஷம் ரூபாய் கொடுத்திருந்தால், அந்த 10 லக்ஷம் ரூபாய், ஹரிஜனங்களுக்காக செலவழிக்கப்பட்டதா? அவர்களுக்குப் போய் சேர்ந்ததா? என்று யாரும் பார்ப்பதில்லை. ஹரிஜன் Welfare டைரக்டர் கூட பார்ப்பதில்லை அவருக்குக்கூட அதைப்பற்றி தெரியாது. இம்மாதிரி Boarding ஹரிஜன் ஹாஸ்டலுக்கு கொடுக்கப்பட்ட Lump sum யை எடுத்துக்கொண்டு அதை நடத்துபவர்கள் பிரியம்போல் rules போட்டுக்கொண்டு நடத்துகிறார்கள். முப்பது பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட பணத்தை 50 பிள்ளைகளுக்கு செலவழிக்கிறார்கள். இப்படி செய்வதால், 20 பிள்ளைகளை அதிகமாகச் சேர்த்து, அப்பணத்தால் பயன்பெற வேண்டிய 30 பிள்ளைகளின் நலனையே கெடுத்து விடுகிறார்கள். தவிர இம்மாதிரி private ஹாஸ்டல்களுக்காக சர்க்கார் இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்தாலும் காங்கிரஸ் சர்க்காருக்கு விரோத மனப்பான்மையுள்ள மக்களே அதிலே வந்து சேருகிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் இவ்வளவு பண உதவி செய்திருக்கிறதே என்றுகூட அவர்கள் நினைப்பதில்லை. ஒரு Private management கொடுத்ததாகவே ஹாஸ்டலின் மாணவர்கள் நினைக்கிறார்கள். ஹரிஜன் சேவா சங்கம் நடத்தும் ஹாஸ்டலில் கூட, அங்கிருக்கும் மாணவர்கள் காங்கிரஸ் சர்க்கார் பணம் கொடுக்கிற தென்பதை உணராமல் நடக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் பணம் கொடுத்து நடக்கும் ஹாஸ்டல்கள் எல்லாம் சர்க்கார் மேனேஜ்மெண்டில் வைத்து நடத்தினால் நன்மையாக இருக்குமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, midday meals எங்கே கொடுக்கிறோம்? ஹரிஜன் ஸ்கூல்களில் கொடுக்கிறோம். இந்த சாப்பாடு சாப்பிட்டு எந்த ஹரிஜன் மாணவனும் அபிவிருத்தி அடைந்துவிடமுடியாது. தன் பிள்ளைகளுக்கு தங்கள் சொந்த முயற்சியில் 5-வது வகுப்பு வரையிலாவது படிக்கவைக்கவேண்டும் என்ற பெற்றோருக்குத்தான் சர்க்கார் உதவி செய்யவேண்டும். மத்தியான சாப்பாட்டிற்காக பிள்ளையை பள்ளிக்கு அனுப்பும் குணம் மாறவேண்டும். ஹரிஜனங்களுக்காக தனி ஸ்கூல் ஏற்படுத்தி ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் நடத்தும் மேனேஜ்மெண்ட் மோசமாக இருக்கிறது. சமீபத்தில் கூட, இவ்வித காரியங்களை கல்வி இலாக்காவுக்கு விட்டுவிடவேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஹரிஜன மாணவர்கள் எங்கு வேண்டுமானாலும் படிக்கலாம். அவர்களுக்கு மத்தியான சாப்பாடும் கொடுக்கலாம். ஹரிஜன ஸ்கூல்களில்தான் படித்து, மத்தியான சாப்பாடுபெற வேண்டுமென்ற பாகுபாட்டை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக தீண்டாமை விலக்கு. இந்த தீண்டாமை விலக்கு விஷயத்தில்,

12-30 p.m.

[Sri V. S. Sivaprakasam] [11th March 1955

முக்கியமாக, ஹரிஜன நண்பர்கள் கவனமாக இருக்கவேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவில் தீண்டாமை இருக்கிறது. கனம் எதிர்கட்சி உபதலைவர் கல்யாணசுந்திரம் அவர்கள்கூட சொன்னார்கள், 1954–55-ல்கூட இங்கே தீண்டாமை இருக்கிறதே என்று சொன்னார். அந்த ஊரிலும் இந்த ஊரிலும் தீண்டாமை போய்விட்டது, நீங்கள்மட்டும் ஏன் தீண்டாமையைப் போக்கக் கூடாது என்று சொன்னால், அது போகாது. அதைப்பற்றி இது மாதிரி அதிகமாக பேசாமல், ஆங்காங்கே ஹரிஜனங்களும், மற்றவர்களும், சமத்துவமாக வாழ்கிறார்கள், நீங்களும் அம்மாதிரி இருக்கவேண்டுமென்று பிரசாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கார் இது வரை செய்திருக்கும் உதவியானது நன்றாக உள்ள ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும், எல்லா ஹரிஜனங்களுக்கும், முன்னேற்றம் அடைய உதவிகரமாக இல்லை. ஸ்காலர்ஷிப் ஆயிரம் பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டதென்றால், அப்பணத்தை இரண்டாயிரம் பிள்ளைகளுக்கு செலவு செய்து உதவி செய்கிறார்கள். அப்பணத்தினால் உதவி பெறவேண்டிய ஆயிரம் பிள்ளைகள் சரியாக உதவி பெறுவதில்லை. இரண்டு ஆயிரம் பேர் ஸ்காலர்ஷிப் கேட்டால் ஒரு ஆயிரம் பேருக்குத்தான் பணம் இருக்கிறது. மூன்று ஆயிரம் பேர் ஹாஸ்டலில் இடம் கேட்டால் அதில் பாதிப் பேருக்குத்தான் இடம் கிடைக்கிறது. ஆகவே, இந்தமுறை மாறி, ஹரிஜனப் பிள்ளைகள் அத்தனைபேருக்கும் ஹாஸ்டல் உண்டு, ஸ்காலர்ஷிப் உண்டு என்ற திட்டம் அமைக்கவேண்டுமென்று கனம் நிதி மந்திரி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri S. P. THANGAVELU :—" கனம் சபாநாயகர் அவர்களே தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட இனத்தவர்கள் முன்னேற்றம் குறித்து பேசப்படும் பிரச்னையானது பெரும்பான்மையான சமூகத்தினுடைய பிரச்னையாகுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த பெரும்பான்மையான சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இங்கே வந்து எங்கள் சமூகம் கவனிக்கப்படவில்லை என்று முறையிடுவது வருந்தத் தகுந்த நிலைமை. இப்பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் சபையில் கட்சி பாகுபாடு இல்லாமல் பார்த்தால்—பெரும்பான்மையாக இருந்தும்கூட, சர்க்காரிடத்திலே இத்தனை ஆண்டுகளாக எங்களை ஒதுக்கிவிட்டார்கள் எங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை குறைவு என்று சொல்லியும்கூட, அத்தொகை உயர்த்தப்படாமல் இருப்பதைக்கண்டு உள்ளபடியே வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறதென்று சொல்லி, அடுத்த ஆண்டிலாவது, அதிகத் தொகையை எங்கள் அபிவிருத்திற்காக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பிற்போக்காக இருப்பதாகச் சொல்லுகிறார்கள், அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்று சொல்லுகிறார்கள், அது ஏன் என்பதை சர்க்கார் நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்த ஏழ்மைத்தன்மை, படிப்பின்மை, பிற்போக்குதன்மை ஆதித்திராவிட சமுதாயத்தில்தான் இருக்கிறது என்று சொல்லவில்லை. உயர்ந்த ஜாதிக்காரர்கள் இடையேயும் இவ்வித ஏழ்மைத்தன்மை இருக்கிறது. அவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் இந்த பெரும் சமுதாயத்தில் மாத்திரம் பிறப்பினால் தாழ்த்தப்பட்டவர் என்று கருதப்பட்டு பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள் ; இந்தக் கொடுமை ஏன் என்று இந்த சர்க்கார் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இது சாதாரணமாக சட்டசபையில் மானிய கோரிக்கைகளுக்காக, சாதாரணமாக பேசப்படும் பேச்சாக இருக்கக் கூடாதென்று சொல்லிக்கொள்ளுகிறேன். சமுதாயத்தில் குறிப்பிட்ட இனங்களைச் சேர்ந்தவர்களை, பிறப்பின் காரணமாக தீண்டப்படாதவர்கள் என்று சொல்லுகிறார்கள். அதுவும் உயர்ந்த ஜாதிக்காரர்கள், தங்கள் சமுதாய அமைப்பிலுள்ள செல்வாக்கையும், பொருளாதார வசதியையும் பயன்படுத்திக்கொண்டு, இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களை தீண்டப்படாதவர்கள் என்று சொல்லி ஒதுக்கிவைத்திருக்கின்றார்கள். தீண்டப்படாதவர்கள் என்று சொல்லுவது, இந்த தீண்டாமையை அனுஷ்டிப்பது குற்றம் என்று சர்க்கார் சட்டம் செய்திருக்கிறது. ஆனால் கனம் மந்திரி அவர்கள் முடியுமானால் பதில் சொல்லும்போது, எவ்வளவு பேர் இந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்கள், தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்மேற்

11th March 1955] [Sri S. P. Thangavelu]

குற்றம் புரிந்து இருக்கிறார்கள் என்பதும், அதற்காக இதுவரை தண்டிக்கப் பட்டவர்கள் எத்தனை பேர் என்று சொல்லவேண்டுமென்று விரும்பு கிறேன். பல இடங்களில் சட்டத்தின் மூலம் தீண்டாமையை ஒழிக்க, சர்க்கார் உள்ளபடியே முயற்சி எடுத்துக்கொண்டாலும் இந்த சட்டத்தை அமுல் நடத்தக்கூடியவர்கள், தீண்டாமை இருக்கக்கூடாது என்றும், இந்த சட்டத்தை பயன்படுத்த வேண்டுமென்று கருதுவதில்லை. அவர் கள் தீண்டாமை போகவேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்கள் இல்லை என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

"இந்த சந்தர்ப்பத்தில் ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்று நிய மிக்கப்படுகிற அதிகாரிகளெல்லாம் பெரும்பாலானவர்கள் ஹரிஜனங்களைச் சேர்ந்தவர்களாகவோ பிற்பட்ட இனத்தவர்களைச் சேர்ந்தவர்களாகவோ இருப்பதில்லை. **(District Harijan Welfare Officer)** ஜில்லா வெல்பேர் ஆபீசர் அநேகமாக மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஹரிஜனங்களுடைய குறைகளை யாராவது எடுத்துச் சொல்லப்போனால் அவர்கள் உள்ளபடியே நல்ல முறையிலே அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு நிவர்த்திக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கேட்பதில்லை. பெரும்பாலானவர்கள் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு ஹரி ஜனங்களைச் சேர்ந்தவர்களையே ஓரளவு நியமிப்பதால் இந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றியளிக்கு மென்று நான் நினைக்கிறேன். 12-40 p.m.

"ஹரிஜன முன்னேற்றத்திற்கும் பிற்பட்ட இனத்தவர்களின் முன் னேற்றத்திற்கும் ஒதுக்கப்படுகிற தொகை ஒரே ஒரு தலைப்பிலே கொடுக்கப் பட்டிருப்பதினால் ஹரிஜனங்களுக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது, பிற் பட்ட இனத்தவர்களுக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்று தெரிந்து கொள்ளாமலே ஹரிஜன இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இப்படி இருக்கக்கூடாதென்று வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். பிற்பட்ட இனத் தவர்கள் ஒரு வேளை அதிகப்படியாக எடுத்துக்கொண்டு போய் விடுகிறார் களோ என்று ஹரிஜனங்கள் ஐயுறுகிறார்கள். ஹரிஜனங்கள் தாங்கள் ஏமாற்றப்படுவதாக நினைக்கிறார்கள். ஒரு கோடி சொச்சம் ரூபாய் ஒதுக்கி யிருப்பதில் 11 லட்ச ரூபாய்தான் பிற்பட்ட இனத்தவர்களுக்கு செல வழிக்கப்படுகிறது என்று தெரியவருகிறது. ஹரிஜன முன்னேற்றத்திற்கு ஒதுக்கப்படுகிற தொகையோடு பிற்பட்ட இனத்தவர்களுக்கு என்று ஒரு சிறு தொகையையும் சேர்த்து வைப்பதன் மூலமாக ஹரிஜனங்களைச் சேர்ந்த வர்கள் சந்தேகப்படுகிறார்கள். நமக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை பிற் பட்ட இனத்தவர்களுக்குக் கொண்டு போகப்படுகிறதோ என்ற சந்தேகத் திற்கு இடம் இருக்கிறது. பிற்பட்ட இனத்தவர்கள், ஹரிஜனங்கள் ஆகிய இரண்டு சமூகத்தவர்களும் இன்னொரு சமூகத்தவருக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறதோ என்று ஏமாற்றம் அடைவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இரண்டு சமூகங்களுக்கும் இருக்கவேண்டிய ஒற்றுமையை வலியுறுத்தி ஏற்கெனவே பேசிய அங்கத்தினர்களின் எண்ணத்தை நான் ஆதரிக் கிறேன். இரண்டு இலாக்காக்களும் தனித் தனியே பிரிக்கப்படவேண்டும். பிற்பட்ட இனத்தவர்களின் நலனுக்கு என்று ஒரு தனி இலாக்கா இருக்க வேண்டும். அவர்களுடைய குறைகளை ஆராய்ந்து அவைகளை நிவர்த்திப் பதற்கு ஒரு இலாகா ஹரிஜனங்களுக்காக ஹரிஜன வெல்பேர் டிபார்ட் மெண்ட் என்று இருப்பது போல் விரைவிலே ஏற்படுத்தவேண்டும். அப் படிச் செய்வதன் மூலமாக இரண்டு சமூகங்களுக்கும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமல் இருக்கக்கூடிய நிலைமை மாறும் என்று நான் கருதுகிறேன்.

"கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கப்படும்போது தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகளாக இருந்தாலும் கூட பிற்பட்ட இனத்தவர் களுக்கும் ஹரிஜனங்களும் ஒரு குறிப்பிட்ட அளவு இடம் ஒதுக்கப் பட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருந்தும்கூட பல கல்லூரி களில் ஒதுக்குவது இல்லை. திருச்சிராப்பள்ளியில் தேசியக் கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன, ஜோசப் கல்லூரியில் கத்தோலிக் கிறிஸ்துவர்களுக்குத் தான் முக்கியத்

[Sri S. P. Thangavelu] [11th March 1955

துவம் கொடுக்கப்படுகிறது. தேசியக் கல்லூரியைப் பற்றி நான் இங்கு சொல்வது கொஞ்சம் தவருகப் புரிந்து கொள்ளப்படும் என்ருலும்கூட உண்மையை நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். அங்கு பிராம்மணர்களுக்குத் தான் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறதேயொழிய ஹரிஜனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பிற்பட்ட இனத் தவர்களுக்கும் சலுகை கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, பிற்பட்ட இனத் தவர்களையும், ஹரிஜனங்களையும் அங்கு சேர்த்துகொள்ள வேண்டுமென்று சொன்னுலும் உடனே அவர்கள் சிரிப்பார்கள், கேலி செய்வார்கள். அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். பொது மக்களின வரிப்பணத்திலிருந்து இப்படிப் பட்ட கல்லூரிகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது. அப்படியிருக்கும்போது குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுடைய கல்விக்காகவே அவர்கள் பெரும்பாலும் செலவழிப்பது சரியல்ல என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன்.

"பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், ஆதித் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியவாகளுக்கு குறிப்பிட்ட காலம் வரையில் 50 சத விகிதம்வரையில் கல்லூரிகளிலே இடம் ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். கல்லூரிகளில் படித்து வெளியேறுபவர்கள் மார்க் அதிகமாக வாங்கியிருப்பதினுல் திறமையைக் காட்டி விடுகிருர்கள் என்று நம்புவதில் அர்த்தமில்லை. நம் சபையில் அங்கத்தினராக இருக்கும் ஸ்ரீ எஸ். டி. ஆதித்தன் அவர்கள் சொல்லுவார்கள். கெட்டிக்காரப் பிள்ளைகளை மட்டும் கல்லூரிகளில் சேர்த்துக் கொள் வதினுல் அங்குள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்கு என்ன போதிக்கி றர்கள்? பிற்பட்ட சமூகம், ஹரிஜனங்கள் ஆகிய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குச்சொல்லிக் கொடுத்து, அதிகப்படியான மாணவர்களைத் தேறும்படி செய்தால்தான் அந்தக் கல்லூரியில் உள்ளவர்கள் உள்ளபடியே நன்ருகவேலை செய்கிருர்கள் என்று கருதப்படுமேயல்லாது, ஏற்கெனவே நன்ருகப் படிக்கக்கூடிய, அதிக மார்க்குகள் வாங்குகிறவர்களைச் சேர்த்துக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுப்பதிலே போதனு முறையில் என்ன திறமை காட்டப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன். ஹரிஜனங்கள், பிற்பட்ட சமூகங்கள் ஆகிய இரண்டு சமூகங்களுக்கும் பெரும் பகுதியான ஸ்தானங் களை (Arts Colleges) 'ஆர்ட்' கல்லூரிகளில் ஒதுக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடவேண்டும். தொழில் கல்லூரிகளில் பாதி ஸ்தானங் கள் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் ஹரிஜன சமூகத்தவர்களுக்கும் ஒதுக்க வேண்டும்.

"உத்தியோகங்கள் வழங்கும் விஷயத்தில் ஹரிஜனங்களுக்கென ஒதுக் கப்படும் ஸ்தானங்களுக்கு வேண்டிய அளவு மனுக்கள் வருவது இல்லை என்று சொல்லுகிருர்கள். பிற்பட்ட இனத்தவர்களிலோ, ஹரிஜனங் களிலோ இரண்டொருவர் வரவில்லையென்ருல் முற்பட்ட இனத்தவர்களுக் குக் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லுகிருர்கள். உள்ளபடியே இது சந்தேகப்படவேண்டிய விஷயம் என்று நான் நினைக்கின்றேன். பிற்பட்ட இனத்தவர்கள், ஹரிஜனங்கள் ஆகிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மனுப் போடுவதில் எண்ணிக்கை குறைவாக இருக்குமென்று நான் கருதவில்லை. ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் தான் குறைவாக இருக்கும்.

"பப்ளிக் சர்விஸ் கமிஷன் சம்பந்தமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதில் பிற்பட்ட இனத்தவரோ, ஆதித்திரா விடரோ யாரும் அங்கத்தினர்களாக இல்லை. அப்படியில்லாமல் இருப் பதின் மூலமாக இவர்களுடைய குறைகள் சர்வீஸ் கமிஷனுக்கு நல்ல முறையில் விளங்குவது இல்லை. சமூகத்திலே பிற்பட்ட இனத்தவாகளும், ஆதித்திராவிடர்களும் பெரும்பான்மையாக இருந்தும், சமுதாய அமைப் பில் இவர்களை அடிப்படையாக வைத்து சமூகம் நடந்து கொண்டிருந்தும் கூட குறைகளைக் கவனிக்கக்கூடிய முறையிலே பப்ளிக் சர்விஸ் கமிஷன் அமைப்பு இல்லை. பிற்பட்ட இனத்தவரில் ஒருவரும், ஆதித்திராவிடரில் ஒருவரும் இந்தக் கமிஷனிலே இருக்கவேண்டும். பிற்பட்ட சமூகத்தவ ருக்கோ, ஆதித்திராவிட சமூகத்திற்கோ ஏதாவது செய்வதென்ருல் தங

11th March 1955] [Sri S. P. Thangavelu]

களுடைய வீட்டுச் சொத்து போய் விடுவதுபோல் முற்பட்டவர்கள் பொறுமைப் படுகிறார்கள். அந்தக் கண்ணோட்டத்துடன் தான் இந்தப் பிரசனையை அவர்கள் ஆராய்ந்து பார்க்கிறார்கள். இவ்வளவு காலமாக பிற்போக்குத் தனமையிலேயே சமுதாய அமைப்பு காரணமாக அமுக்கி வைக்கப்பட்டிருப் பவர்கள் சில சலுகை பெறுவது குறைபடக் கூடியதல்லவென்று அவர்கள் கருதவேண்டும்."

12-45 p.m.

* SRI A. MUTHUSWAMI :—" கனம் சபாநாயகர் அவர்களே, மந்திரி அவர்களால் கொண்டு வரப்பட்ட ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன். 'ஹரிஜன்' என்ற நாமம் அண்ணல் காந்தியடிகளால் கொடுக்கப்பட்ட புனிதமான நாமமாகும். பறையன், பஞ்சமன், புலையன், தியன் என்ற இழிவு பெயர் கொடுக்காமல் இந்த ஹரிஜன் என்ற பெயரை கொடுத்தார். ஹரிஜன் என்ற பதத்திற்கு விஷ்ணுவின் பிள்ளைகள், அதாவது கடவுளுக்குகந்த பிள்ளைகள் என்று அர்த்தமாகும். இப்படிப்பட்ட நாமத்தையுடைய மக்களுக்கு நமது அரசாங்கத்தார் மகாத்மா காந்தியின் நோக்கத்தைப் பூர்த்தி செய்து, அவர் கொடுத்த புனித நாமத்திற்கு ஏற்றபடி அந்த மக்களை உயர்த்த வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

" ஆண்டவனுடைய சிருஷ்டியில் ஜாதி வித்தியாசம் கிடையாது. கடவுளால் சிருஷ்டி செய்த சந்திரன், சூரியன், அக்னி, வாயு ஆகிய சக்திகளைக்கொண்டு பார்த்தால், சூரிய சந்திரன் ஆகியவைகள் ஹரிஜனங்களுக்காகத் தனியாகவும், உயர்ந்த ஜாதி வகுப்பினர்களுக்குத் தனியாகவும் பிரகாசிப்பதில்லை. ஆண்டவன் படைப்பில் வேற்றுமையில்லை. ஆனால், மனிதன் தொழில் முறையால் பாகுபாடு வைத்துக்கொண்டிருக்கிறான். ஹரிஜன பிற்பட்ட சமூகமானது கபடு சூது இல்லாமல் தேகத்தை விவசாயத் துறையில் வருத்தி உழைக்கக்கூடிய ஒரு சமூகமாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட உழைக்கும் சமூகத்திற்கு வேண்டிய சலுகைகள் அநேகம் உண்டு.

" இவ்வருஷ பட்ஜெட்டில் 1,09,36,600 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் தொகை உண்மையிலே போதாது. இந்த பணம் பூராவும் ஹரிஜன மக்களுக்கு நேராக போய் உதவுவது இல்லை. தாழ்த்தப்பட்ட இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு குறைந்த பட்சம் 5 முதல் 6 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கியிருந்தால் இந்தச் சமூகம் ஓரளவு முன்னேறி வரும் என்று நம்புகிறேன். தரித்திரத்தினாலும், வறுமையினாலும் பீடிக்கப்பட்ட இந்தப் பெரும் சமூகத்திற்கு அரசாங்கம் எந்தெந்த துறைகளில் உதவி செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து முடித்தால் தான் இந்த சமூகம் முன்னேற முடியும் என்பதை நான் மறுமுறையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

" குறிப்பாக எனது தொகுதியை எடுத்துக் கொண்டால் திருக்கோயிலூர் தாலூகாவிலுள்ள மக்களில் ஹரிஜனங்களுக்கும் மிராசுதார்களுக்கும் அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் வறுமை. மிராசுதார்களாக இருக்கக்கூடியவர்கள் ஹரிஜனங்களை எந்தெந்தத் துறையில் சௌகரியம் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாததன் காரணமாக இன்றைக்கு அந்த இடத்தில் பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, திருவெண்ணெய்நல்லூர் பிர்க்கா பெரும்பான்மையாக மிராசுதார்கள் வாழும்படியான இடம். அங்கிருக்கும் விவசாய ஹரிஜன மக்களுக்கு உழுது பயிரிட நிலங்கள் கிடையாது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடையாது. ஹரிஜனங்களை கேவலமாக நடத்தி இம்சிக்கிறார்கள். சமீபத்தில்கூட ஒரு சண்டை சச்சரவு ஏற்பட்டு வருகின்றதையும் நான் கண்கூடாகப் பார்த்தேன். செய்தித்தாளிலும் அதைப்பற்றி பார்த்திருக்கலாம். ஆகவே, அந்தத் தொகுதிக்கு செய்யவேண்டியதெல்லாம் கூலி நிர்ணயம், ஜல வசதி, பாட்டை வசதி, வீட்டு மனை, பள்ளிக்கூட வசதியும், மயான வசதி ஆகியவைகள்தான். அதோடு கூட சிறு சிறு தொழில் வசதிகளும் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். சில கிராமங்களில் மயானத்திற்கு பிரேதங்களை சிறு பாதை

[Sri A. Muthuswami] [11th March 1955

கள் மூலம் எடுத்துக்கொண்டுபோனால் அங்கு தடை ஏற்படுகிறது. இதனால் ஜாதி இந்துக்களுக்கும், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இனப் பாகுபாடுகள் அதிகமாக இருகின்றன. அதனால் இவர்களிடையே அடிக்கடி சண்டைச்சச்சரவுகள் ஏற்படுகின்றன. இது தவிர இந்த ஜில்லாவில் எங்களுடைய தொகுதியில்தான் ஒரு கம்யூனிஸ்ட் மெம்பர் சென்ற ஜில்லா போர்டு எலக்ஷனில் ஜெயித்து வந்திருக்கிறார். காரணம் அங்குள்ள ஹரிஜனங்களுக்கும், மற்ற வகுப்பினருக்கும் ஒற்றுமை கிடையாது. அங்குள்ள ஹரிஜனங்களுக்கும், வன்னியர்களுக்கும் ஒரு பெரிய பிளவு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு ஜாதியினர்களும் ஒற்றுமையாய் வாழக் கூடியதாயில்லை. தற்சமயம் கம்யூனிசம் சேரிகளில் பரவி இருப்பதினால் சேரியார்களுக்கும் ஊராருக்கும் பிளவு உண்டாகி கலகங்கள் ஏற்பட்
12-50 p.m. டிருக்கிறது. ஐந்து வருஷத் திட்டத்தில் ஜலவசதி, குடியிருப்பு மனை கட்டு, பாட்டை, பள்ளிக்கூட வசதி செய்துகொடுப்பதாகச் சொல்லுகிறார்களேயொழிய நடைமுறையில் அநேக கிராமங்களில் ஹரிஜனங்களுக்காக ஒன்றும் செய்யப்படவில்லை. எனது தொகுதியில், திருக்கோவிலூர் தாலூகாவில் அரசாங்கம் இன்றைக்கு ஹரிஜனங்களுக்கு வேண்டிய சலுகைகள் செய்யவில்லையானால் அங்கு இருக்கும் மக்கள் அனைவரும் கட்டாயம் கம்யூனிசத்தை பின்பற்றுவார்கள் என்று நினைக்கிறேன். ஆதலால் உடனடியாக அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை செய்து கொடுக்கவேண்டும் என்பது எனது கருத்து. அப்படிச் செய்தால்தான் நாம் ஒரு அளவு வெற்றி அடையலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"அண்ணல் காந்தி அடிகளால் கொண்டுவரப்பட்ட ஆலயப்பிரவேசத் திட்டம் நல்லமுறையில் நடக்கவேண்டுமானால் ஒவ்வொரு கோவில்களிலும் ஹரிஜனங்களை டிரஸ்டியாகப்போடவேண்டும் என்று ஒவ்வொரு கூட்டங்களிலும் நானும் என்னைச் சார்ந்த ஹரிஜன எம்.எல்.ஏ. க்களும் அடிக்கடி பேசிக்கொண்டுவருகிறார்கள். ஆனால் இதுவரையில் அரசாங்கம் எதையும் செய்துவிட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது ஹரிஜன முன்னேற்றம் என்பதை காண்பிப்பதற்காக எங்கள் வகுப்பைச் சேர்ந்த நபர் ஒருவரை தமிழ்நாடு காங்கிரஸ் காரியககமிட்டித் தலைவராக ஸ்ரீ பி. கக்கனை போட்டதற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன். அது போலவே உத்தியோக பதவிகளிலும் பிரமோஷன் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—"இது வேறு விஷயம். கனம் அங்கத்தினர் அதைப்பற்றி யெல்லாம் இங்கு பேசக்கூடாது."

SRI A. MUTHUSWAMI :—"எங்களுக்கு வேண்டிய சலுகைகளெல்லாம் உடனடியாக அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும். சென்னை கார்பரேஷனில் எப்படி வகுப்புவாரியாக தலைவர் பதவிகளை அளிக்கிறார்களோ அதுபோல் மேயர் பதவியை எங்களுக்குத் தரவேண்டும். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுப்பதுபோல் மேயர் பதவியையும், ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத்து போர்டு தலைமைஸ்தானங்களை தரும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக இங்கு வரும்காலத்தில் தென் ஆற்காடு ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கும், வன்னியர்களுக்கும் ஜாதி வித்தியாசம் அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. இந்த பாகுபாடுகளை தகர்த்தெறிவதற்கு ஆவனசெய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக கனம் ரெவின்யூ மந்திரி எம். மாணிக்கவேலு நாயக்கர் அவர்களும், கனம் எஸ். எஸ். ராமசாமி படையாச்சி அவர்களும், கனம் பி. பரமேஸ்வரன் அவர்களும் ஆக மூவருமாக ஒன்று சேர்ந்து தமிழ்நாட்டில் ஜாதி வித்தியாசம் இல்லாமல் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜன வெல்பேர் இலாக்கா ஆரம்பித்திருக்கிறார்கள். இது என்ன வேலை செய்கிறது என்று தான் தெரியவில்லை. இவர்கள் சரியான முறையில் இடங்களை சுற்றிப்பார்த்து விரைவில் ஜனங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்ய அதாவது கீழையூர், தாசர்புறம், சு. கோடுங்

11th March 1955] [Sri A. Muthuswami]

எப்கள்.

கால், நெற்குணம், பையூர், முடியனூர், வெளந்தை, சித்தலிங்கமடம், நெடுங்கம்பட்டு போன்ற கிராமங்கள் அநேக தடவை மகஜர்கள் விண்ணப்பித்துக் கொண்டு, கடைசியாக பணம் கட்டி விண்ணப்பித்தும்கொண்டார்கள். குறிப்பாக திருக்கோயிலூர் தாலூக்காவில் ஹரிஜனங்கள் வீட்டு மனைக்கு அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் இது வரையில் இது சம்பந்தமாக விசாரணைசெயது நடவடிக்கை எடுத்ததாகதெரியவில்லை.

"நமது அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு 10 வருஷ சலுகை கொடுத்திருக்கிறார்கள். இதில் ஹரிஜனங்கள் எல்லாம் முன்னேறிடுவார்கள் என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அதில் இன்னும் இரண்டு மூன்று வருஷம் தான் பாக்கியிருக்குமென்று நம்புகிறேன். ஹரிஜனங்கள் எதிர்ப்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. ஆகவே அரசாங்கம் ஹரிஜன மக்களுக்குவேண்டிய பொருளாதாரம், கல்வி, புறம்போக்கு, தரிசு நிலங்கள், கோவில்மானியம், வாரம், குத்தகை, கூலி நிர்ணயம், உத்தியோக உயர்வுபோன்ற வசதிகளை செய்து தருவதற்கு எவ்விதமாக தடைசெய்யாமல் அங்கீகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜனங்களுக்கு பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும், இன்னும் எந்தெந்தத் துறையில் அவர்கள் சீர்கெட்டிருக்கிறார்களோ அந்தந்தத் துறைகளிலும் நமது முதல் அமைச்சர் ஸ்ரீமான் கே. காமராஜா ஆட்சியில் ஹரிஜனங்கள் சுபீக்ஷமாக வாழ அரசாங்கம் முன்னுக்கு வரும் படிகேட்டுக்கொண்டு எனது சிறிய பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—"The House will now rise for lunch and meet again at 2-30 p.m."

The House then adjourned for lunch.

(After lunch—2-30 p.m.)

SRI M. PALANIYANDI :—"சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மக்களுடைய மானியத்தைப்பற்றி பல மெம்பர்கள் எனக்கு முன் பேசியுள்ளார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமைபற்றி நான் பேசுகாலத்தில் இந்த சட்டசபை ஆரம்பித்த காலத்திலிருந்தே எல்லா மெம்பர்களும் தாழ்த் தப்பட்டவர்களுடைய வாழ்கைத்தரம் உயரவேண்டும் எனபதில் மிகவும் அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லவிரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி பக்கத்திலிருந்தும்சரி, எதிர்கட்சி பக்கத்திலிருந்தும் சரி, இந்த விஷயத்தில் அக்கறை காட்டியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதோ ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று இன்று அரசாங்கம் சொல்லிவிட்டால் போதாது. நாங்கள் பல ஆண்டுகளாக சொல்லிவந்து கொண்டிருக்கும் விஷயம், அவர்களுக்கு நிலம் கொடுக்கப்படவேண்டும், நல்லபொருளாதார வசதி ஏற்பட்டால்தான் அவர்கள் சமூக நிலைமை தற்போது இருக்கும் தாழ்ந்த நிலையில் இருந்து மாறும் என்று சொல்லி வந்திருக்கிறோம். ஆனால் இதுவரையிலும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. எவ்வளவு ரூபாய் அரசாங்கம் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்கு என்று ஒதுக்கினாலும் கூட, எவ்வளவு ரூபாய் அவர்கள் படிப்புக்கு என்று ஒதுக்கினாலும் நான் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பதில கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். இன்று கிராமங்களில் பிற்பட்ட வகுப்பினருடைய வாழ்க்கைத்தரம், சமூகத்தின் சூழ்நிலை மாறியிருக்கிறது என்று மந்திரிமார் யாராவது சொல்லமுடியுமா. இன்னும் அவர்களை தெருவில் வரக்கூடாது, தண்ணீர் எடுக்கக்கூடாது என்று அவர்களை பிற்போக்காக வைத்திருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. கிராமத்தில் அவர்களுக்கு அடியும், உதையும், குத்தும்தான் விழும்; ஆகையால் தான் நாங்கள் அவர்களுக்கு வேண்டியது பொருளாதார வசதியென்று சொல்லுகிறோம். நிலம் படைத்தவர்கள், பொருளாதார வசதியுள்ளவர்கள் கிராமத்தில் பிற்பட்ட மக்களுக்கு 1 ஏக்ரா, 2 ஏக்ரா நிலம் கொடுக்க வசதி ஏற்பட்டால் அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்செலவழிக்கவேண்டாம். பிற்பட்ட சமூகம் அப்

[Sri M. Palaniyandi] [11th March 1955

போது நிச்சயமாக முன்னேற முடியும் என்று பல ஆண்டுகளாக சொல்லியாகிவிட்டது. அரசாங்கத்திற்கு இன்னும் கண் திறக்கவில்லை என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக தாழ்த்தப்பட்டோர் லிஸ்டு எப்போதோ, யாராலோ தயார் செய்யப்பட்டது. அந்த லிஸ்டு நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பரிசீலனை செய்யப்படவில்லை. உதாரணமாக இந்த லிஸ்டில் கணக்கன் என்ற ஒரு வகுப்பு இருக்கிறது. மலையாளத்தில் இந்த வகுப்பு மக்கள் தொடப்படாத மக்களாக இருக்கிறார்கள். கணக்கன் என்றால் தமிழ் நாட்டிலே நல்ல முற்போக்கு வகுப்பில் வந்தவர்கள். கணக்குப் பிள்ளைகளாக இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட முற்போக்கு வகுப்பில் வந்தவர்கள் கணக்கன் என்ற பட்டியலிலே காட்டி எல்லா சலுகையையும் பெற்று விடமுடியும். மலையாளத்தில் எடுத்துக்கொண்டால் குறவன் தீண்டப்படாதவன் இங்கு உயர் ஜாதியாக கருதப்படுகிறது. வால்மீகி, வெட்டுவான், வண்ணான் இந்த வகுப்பு எல்லாம் முற்போக்கு உள்ள ஜாதியாக சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால் உண்மையாக சலுகைகள் நேரடியாக மிகவும் தாழ்த்தப்பட்ட, தீண்டாத மக்களுக்கு சேருவதில்லை. இன்று என்ஜினியரிங் காலேஜில் 45 பிற்பட்ட மாணவர்களுக்கு வேண்டிய வசதி உண்டு என்றால், 5 மாணவர்கள்தான், தீண்டப்படாத மக்களாக இருக்கிறார்கள். இதை பரிசீலனை செய்யவேண்டும். நாடு விடுதலை அடைந்த பிறகு யார் யார் பிற்போக்காக இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு நேரிடையாக பணம் சேருகிறதா என்று பார்க்கவேண்டும். ஏதோ பணம் ஒதுக்கிவிட்டோம் என்று இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நேற்று முன்தினம் திருநெல்வேலியிலிருந்து வரும் ஒரு மெம்பர் கூறினார். யாரோ ஒரு பணம் படைத்தான் பிற்பட்ட வகுப்பினனை கழுத்தில் எருக்க மாலையை போட்டு அடித்தானாம். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்லவிரும்புகிறேன். அப்படி அடிப்பதற்கு சாட்சியிருந்து போலீஸ்காரர்கள் ஏதாவது கேஸ் போட முன்வந்தாலும்கூட அந்த வழக்கில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் வாதாட வசதி கிடையாது. பணம் படைத்தவன் செலவு செய்து கேஸை தள்ளுபடி செய்துவிட்டு பிறகு இவனை தெருவில் திண்டாடவிட்டு வாட்டுவார்கள். வழக்கு நடத்த இவனுக்கு வசதி செய்யவேண்டும். அரசாங்கத்தில் உள்ள பப்ளிக் பிராஸிகியூடர்கள்கூட முற்போக்கு கருத்து உடையவர்கள் என்று சொல்ல முடியாது. ஒருவர் சார்பாகவோ தட்டிக்கழித்துவிடுவார்கள்.

"அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வசதி செய்யும்போது இந்த வகுப்பினர்களுக்கு நடுவில் இருக்கும் வண்ணான், அம்பட்டன் இவர்களை ஒன்றிலும் எடுபடாதவர்களாக இவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுத்ததுபோக ஏதாவது அதிகம் தொகையிருந்தால் நிச்சயமாக சலுகை கொடுக்கப்படவேண்டும். இவர்களும் கிராமத்தில் ஒதுக்கி தள்ளப்படுகிறார்கள் என்று எடுத்துச் சொல்ல முடியும். இதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட வகுப்புகளில் பலவற்றை சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களில் பலர் கிறுஸ்தவர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்களே அவர்கள் நிலைமையை பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். நேற்று கேள்விக்கு பதில் சொல்லும்போது, நிதி மந்திரி அவர்கள் கிறுஸ்துவன் என்றால் கிறுஸ்துவன் **Christian is Christian** என்று சுலபமாக சொல்லிவிட்டார். ஏதோ எந்தக் காலத்திலோ சூழ்நிலை காரணமாக, பொருளாதார தொந்திரவின் காரணமாக அனேக தாழ்த்தப்பட்ட மக்கள் கிறுஸ்துவர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக பொருளாதாரத்தில் உயர்ந்து விட்டார்கள் என்றுகூற முடியுமா? தாழ்த்தப்பட்டவர்களை விட இன்னும் மோசமாக இருக்கிறார்கள். கத்தோலிக் சர்ச்சில், பிராடெஸ்டெண்டுகளை விடமாட்டார்கள். பிராடஸ்டெண்ட் சர்ச்சில் கத்தோலிக்கியர்களை விடமாட்டார்கள். அந்தந்த வகுப்பு கிறிஸ்தவர்கள், அந்தந்த வகுப்பிலேதான் கல்யாணம் செய்துகொள்ளுகிறார்கள். திருச்சியில் 'மேரி தோப்பு' என்று ஒன்றிருக்கிறது. அந்த மேரி தோப்பிலிருந்து கிறுஸ்துவர்களாக மாறியவர்கள், அவர்களுக்குள்ளேயே கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள். ஆகையால் ஏதோ கிறுஸ்துவ மதம்

11th March 1955] [Sri M. Palaniyandi]

மாற்றிக்கொண்டதை பெரிய கொள்கையாக மனதில் வைக்காமல் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்த நாட்டு மக்கள் என்று ப்ழகவேண்டும். இப்படி மதமாறின தாழ்த்தப்பட்ட மக்களுக்கு படிப்பு விஷயத்தில் ஏன பாகுபாடு காட்டவேண்டும். சர்க்கார் மதசார்பற்ற சர்க்கார் என்று சொல்லிகொள்கிறார்கள். அரசாங்கத்தார் நிசசயமாக நீங்கள் இந்து மதத்திற்கு வந்தால் தான் சலுகைகள் உண்டு, கிறிஸ்தவர்களாக இருந்தால் ஒன்றும் கிடையாது என்று தாழத்தப்பட்ட மக்கள் கிறுஸ்தவ மதத்திற்கு மாறிய காரணத்திற்காக அவர்களுக்கு கல்வி சலுகை அளிப்பது இல்லை எனறு சொல்லியிருக்கவேண்டும். அதேபோல் பிற்பிட்ட மக்களில்கூட, அதாவது வன்னியர்கள், சேர்வைகள், உடையார்களில், பலர் கிறுஸ்துவர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிலைமையையும் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அவர்களும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு கல்வி சலுகையாவது கொடுங்கள், உத்தியோக சலுகைகள் பற்றி கவலையில்லை.

"அடுத்தபடியாக, இந்த சலுகைகளை எல்லாம் கொடுத்துவிடவேண்டுமென்று அடிக்கடி சொல்லவேண்டியது அவசியமில்லை. உண்மையான அரசாங்கம் ஏழைகளுக்கு சலுகை அளிக்க வேண்டும். ஏழமக்கள் எந்த சமூகத்தில் இருக்கிறார்கள் என்று பார்த்து சலுகைகளை வழங்க வேண்டும். மூன்றுவது பாரம் வரை ஏழைகளுக்கு மந்திரி சபை கல்வி வசதி கொடுப்பதாக முடிவு செய்ததாக நிதி மந்திரி சொன்னார். நீங்கள் நன்றாக பரிசீலனை செய்து பாருங்கள்; பிற்பட்ட மக்களில்கூட பணக்காரர்களாக பலர் இருக்கிறார்கள். தாங்களும் பிற்பட்டவர்கள் என்று சொல்லிக்கொண்டு இவர்களும் சலுகை பெற்றுவருகிறார்கள். அதே சமயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிலும் பணக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இந்த சலுகையை உபயோகப்படுத்திக்கொள்ளமுடியும். அப்படியானால் ஏழை மக்களுக்கு சலுகை கொடுக்கிறோம் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. சோஷலிஸ சமூகம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஏழைகளுக்கு வசதி செய்து கொடுத்து அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தவேண்டும். நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியும், திமிர்ந்த ஞானச் செருக்குமிருக்க வேண்டுமானால் அவர்களின் வாழ்க்கை உயர வேண்டும்." 2 40 p.m.

SRI L. ANANDAN :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த நாட்டுப் பழங்குடி மக்களாகிய ஆதித்துராவிடர்களின் தாழ்ந்த நிலையை அரசாங்கம் உணர்ந்து முன்னேற வழிகளைச் செய்தும், இதுவரையிலும் எட்டில் ஒரு பங்குகூட முன்னேற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக தென் ஆற்காடு ஜில்லாவில் கள்ளக்குறிச்சி தாலூக்கா மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது என்பதை யாரும் மறக்கமுடியாது. 1,10,000 ஹரிஜனங்கள் வசிக்கும் ஒரு தொகுதியில் ஒரே ஒரு ஹாஸ்டலும் 13 ஹரிஜன பள்ளிகளும் இருக்கிறது எனறால், அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இரண்டு வருஷ காலமாக, நான் சின்ன சேலத்தில் ஒரு ஹாஸ்டல் திறக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தும், அரசாங்கம் நாளது தேதிவரையில் செவி கொடுக்கவில்லை. அந்தத் தாலூக்காவில் மூன்று ஹாஸ்டல்களாவது இருந்தால்தான் அந்தப் பகுதியிலுள்ள ஹரிஜன மாணவர்கள் முன்னேற முடியும் என்பது என்னுடைய கருத்து. சுமார் 10 அல்லது 15 ஹரிஜன முன்னேற்றப் பள்ளிகள் வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஹரிஜன வெல்பேர் டைரக்டரும் நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். இதுவரையிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, மேற்சொன்ன தொகுதியில் உள்ள ஹரிஜன மாணவர்கள் முன்னேறவேண்டுமானால், 10 அல்லது 15 ஹரிஜன முன்னேற்றப் பள்ளிகளும், சின்னசேலத்தில் ஒரு ஹரிஜன ஹாஸ்டலும் ஏற்படுத்தவேண்டும்.

"கள்ளக்குறிச்சியிலிருக்கும் ஹரிஜன ஹாஸ்டலில் 15 மாணவர்களுக்குத்தான் சர்க்கார் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். இன்னும்

அதிக மாணவர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கவேண்டும். மேலும், சங்கராபுரத்தில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தி, அங்கே ஒரு ஹரிஜன் ஹாஸ்டலையும் நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரம் மக்கள் ஏழு ஏக்கர் நிலமும், 25,000 ரூபாயும் கொடுப்பதாக சர்க்காருக்கு வாக்குறுதி கொடுத்திருந்தும் அங்கே ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"வீட்டு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டால் அங்கேயுள்ள மிராசுதார்கள் தடை செய்துகொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அதற்குச் செவி சாய்த்துக்கொண்டுதான் வருகிறது. பயிரிடாத நிலங்களாக இருந்த போதிலும், அங்கிருக்கும் மிராசுதார்கள் தடை செய்துகொண்டு வருகிறார்கள். ஹரிஜனங்கள் எந்த இடத்தில் கேட்கிறார்களோ அந்த இடத்திற்கு அரசாங்கம் அனுமதி கொடுப்பதாகத் தெரியவில்லை.

"ஜாதிஒற்றுமை என்று ஒருபுறம் ஜாதி-இந்துக்கள்சொல்லிக்கொண்டு மற்றொரு புறத்தில் ஹரிஜனங்கள் 4 அல்லது 5 பர்லாங் தூரத்தில்தான் வசிக்கவேண்டும் என்று சொல்வது மிகவும் வருந்தத்தக்க விஷயம். சேரியில் வீடில்லாதவர்களுக்கு, ஜாதி ஹிந்துக்கள் காலி மனைகள் இருந்தால், ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"எனது தொகுதி சேரிகளுக்கு நன்மைகள் செய்து கொடுக்கவேண்டுமென்று அடிக்கடி நான் விண்ணப்பித்திருக்கிறேன். இதுவரையிலும் எந்தச் சேரிக்கும் நன்மை செய்ததாகத் தோன்றவில்லை. இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் வந்து சுமார் 7 அல்லது 8 வருஷங்கள் ஆகியும் எனனுடைய தாலூக்காவில் ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. பிரிட்டிஷார் ஆட்சி காலத்தில் எப்படி இருந்தார்களோ அதே நிலையில் தான் இன்னமும் இருந்துவருகிறார்கள்.

"சின்ன சேலத்தில் ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தி அதை அரசாங்கமே நடத்துவதுடன், சங்கராபுரத்திலும் ஒரு ஹைஸ்கூலையும் ஒரு ஹாஸ்டலையும் ஏற்படுத்தினால் அங்கேயுள்ள மக்கள் முன்னேறுவதற்கு வசதி ஏற்படும்."

Sri A. K. SUBBIAH :—"கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்திலிருக்கக்கூடிய ஹரிஜன மான்யத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டு மூன்று வருஷங்களாகவே இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் ஹரிஜனங்களின் நிலைமையைப்பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும், அரசாங்கம் அதைப்பற்றி இன்று வரையிலும் கவனித்ததாகத் தெரியவில்லை.

"முதலாவதாக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு தகுதியான இடங்கள் கொடுக்கப்படவில்லை. வீட்டுப் பிரச்னைதான் ஹரிஜனங்களின் பெரிய பிரச்னையாக இருந்துவருகிறது. நூற்றுக்கணக்கான மனைக் கட்டுகளிலிருந்து ஹரிஜனங்கள் வெளியேற்றப்படுகிறார்கள். கட்சி வித்தியாசமில்லாமல் ஹரிஜனங்களுக்கு குடியிருப்பதற்கு மனைக்கட்டுகள கொடுக்கப்படவேண்டுமென்று ஒவ்வொரு அங்கத்தினரும் சொல்லியிருக்கிறோம். அரசாங்கம் செவி சாய்க்கவில்லை.

"தஞ்சை ஜில்லாவிலிருக்கக்கூடிய ஹரிஜன விவசாயிகள், தங்களுக்குச் சொந்தமாக நிலங்களோ, மனைக்கட்டுகளோ இல்லாத காரணத்தினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் மிராசுதார்களிடம் அடிமைப்பட்டு வாழ்க்கை நடத்தவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். குறிப்பாக, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலே அங்கம் வகிக்கக்கூடிய வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் மிகப்பெரிய நிலப்பிரபு. 2,000 வேலி நிலத்திற்கு ஏகபோக அதிபதியாக இருப்பவர். கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் ஹரிஜனங்களுக்குச் செய்துகொண்டுவரும் கொடுமைகளைப் பற்றி, எழுத்து மூலம் அரசாங்கத்திற்கு நாங்கள் தெரியப்படுத்தி இருக்கிறோம். அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பூசலகுடி கிராமத்தில் ஹரிஜன் ஒருவனுடைய வீட்டிலிருந்து ஆடுமாடுகளை

11th March 1955] [Sri A. K. Subbiah]

ஓட்டிக்கொண்டு, வீடுகளையும் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மறுநாள் ரௌடிகளை விட்டு வீட்டைப் பிரித்து, ஹரிஜனங்களையும் இம்சைப்படுத்தி இருக்கிறார்கள். இதைப்பற்றி எனக்கு ஒரு மனு வந்திருக்கிறது. அதை கனம் சபாநாயகர் முன்னிலையில் மந்திரி அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

" வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியாரைப்பற்றித்தான் நான் மேலும் பேசப்போகிறேன். 100 ஹரிஜன விவசாயிகள் உழுது வந்த நிலத்தை கரும்பு பயிரிடவேண்டுமென்ற காரணத்திற்காக, அவர்களை வெளியேற்றி, போலீஸ்காரர்களைக் கொண்டு மிரட்டி, எழுதியும் வாங்கி இருக்கிறார். கோமளப்பேட்டை விவசாயிகள், இதைப்பற்றி புகார் செய்திருக்கிறார்கள். ஆபீசர்களிடம் புகார் செய்தால், ஏதோ தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று பதில் வருமேயொழிய, உண்மையில் யாதொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை. தஞ்சை ஜில்லாவில் இந்த மாதிரி நிலைமை நீடித்துக் கொண்டே போகிறது. கொடுமையும், அநீதியும், அக்கிரமும்தான் தாண்டவமாடுகிறது. இனிமேல் ஹரிஜனங்கள் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை அரசாங்கத்திற்கு இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களின் தற்காப்புக்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துதான் ஆகவேண்டுமென்பதை கனம் மந்திரி அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். மந்திரி அவர்கள் இந்த சபையிலேயே இதற்குப் பதில் சொல்லியாகவேண்டும்.

" தமிழ்நாடு நிலச் சீர்திருத்தக் கமிட்டி கொடுத்திருக்கும் ரிப்போர்ட்டில் ஹரிஜனங்களுக்கு மனைகள் வழங்கவேண்டியது அவசியம் என்று சிபார்சு செய்திருக்கிறது. ஹரிஜனங்கள் வாழ்க்கையில் பின்தங்கியவர்கள். குடியிருக்க இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கனம் முதல் மந்திரி காமராஜ நாடார் சபையிலே பேசவில்லை யென்றாலும், நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்போவதாக வெளியில் சொல்லியிருக்கிறார்கள்.

" நிலச் சீர்திருத்தம் வருவதற்கு இடைக்காலத்திலே அரசாங்கமானது நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால், ஹரிஜனங்களை மனைக்கட்டிலிருந்து விரட்டியடிக்காமல் அவர்களுடைய உடைமைகளையும், அவர்களுடைய வீடுகளையும் பறிக்காமல் பார்த்துக்கொள்வதற்காக உடனடியாக ஒரு அவசரச் சட்டத்தைக்கொண்டு வரும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். 2-50 p.m

" அடுத்ததாக, அவர்களுக்கு நடப்பதற்குகூட சரியாக பாதைகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கிராமத்திலே இறந்த பிரேதங்களை எடுத்துச் செல்வதற்குக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி எடுத்துச் செல்லவேண்டுமானால், அங்குள்ள பண்ணைக்காரர்களின் தயவிலேதான் கொண்டு போய் புதைக்கவோ, அல்லது கொளுத்தவோ முடியும். அதேமாதிரி ஹரிஜனக் குழந்தைகள் படிப்பதற்கு சரியான வசதிகள் கிடையாது. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், 9 வெல்பேர் ஸ்கூல்கள்தான் இருக்கின்றன. மற்ற இடங்களைக் காட்டிலும், எங்கள் தொகுதியில்தான் மூன்று பெரிய மிராசுதார்கள் இருக்கிறார்கள். அந்த நிலப் பிரபுக்கள் இருக்கக்கூடிய தாலூக்காவிலே ஹரிஜனங்கள் மிகவும் அடிமைகளாக வெள்ளைக்காரன் காலத்தில் நடத்தியதைப்போல் கொடுமைபடுத்தப்படுகிறார்கள். சுதந்திரம் வந்தும் ஹரிஜனங்களுக்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்கப்படவில்லை.

" ஜில்லா ஹரிஜன நலக் கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி ஹரிஜனங்களுக்காக என்ன செய்கிறது என்றே தெரியவில்லை. அந்தக் கமிட்டிகளில் அங்கத்தினர்களை நியமிப்பதிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. அக்கமிட்டிகளுக்கு நிலப்பிரபுக்களை ஆதரிக்கக்கூடியவர்களையும், அவர்களுடைய கையாளாக இருக்கக்கூடியவர்களையுமே நியமிக்கப்படுகிறார்கள். உண்மையாக ஹரிஜனங்களிடையே விஷயங்களை எடுத்துக்கூறி விவாதிக்கக்கூடியவர்களை அந்தக் கமிட்டிகளில் நியமிப்பது கிடையாது. இம்மாதிரியான அடிப்படையில் ஏன் நியமிக்கின்றார்கள் என்று தெரியவில்லை. இவர்களை நியமிப்பதால் ஹரிஜனங்களுக்காக என்ன நன்மை ஏற்படப்போகிறது ? அவர்களுக்காக ஒதுக்கப்படும் பணம் ஒழுங்காக செலவழிக்கப்படுவதில்லை. நிலப் பிரபுக்களோடு சேர்ந்துகொண்டு அவர்களைத்

[Sri A. K. Subbiah] [11th March 1955

துன்புறுத்துவதைப் பார்த்தால், நாம் மட்டும் அவர்களுடைய பிரதிநிதியாக வந்து என்ன சாதித்துவிடப் போகிறோம் என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது. இந்தச் சபையிலே எங்கள் சமூகத்தினருக்கு மந்திரி பதவி கொடுப்பதாலும், சபாநாயகர் பதவி கொடுப்பதாலும், அல்லது காங்கிரசு கமிட்டித் தலைவராகவும், இன்னும் வேறு பல பதவிகள் கொடுப்பதாலும் எந்தவித நன்மையும் செய்துவிட முடியாது.

"இன்று அவர்கள் அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள்; உதைக்கப்படுகிறார்கள்; வீடுகளைப் பறித்துக்கொள்ளுகிறார்கள்; கொள்ளையடிக்கப்படுகிறார்கள்; அவர்களுடைய சாமான் செட்டுக்களை எல்லாம் பறிமுதல் செய்துவிடுகிறார்கள். ஹரிஜனங்களை நிலச்சுவான்தார்களுடைய கையாட்கள் மிரட்டி, மனைக்கட்டு இல்லாதவாறு எழுதி வாங்கிக் கொள்ளுகிறார்கள். இந்த மாதிரியாக பல அக்கிரமங்களைச் செய்துவருகிறார்கள். இவைகளை உடனடியாகத் தடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். ஆகவே, என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், உடனடியாக தஞ்சை ஜில்லாவிற்கு மட்டும் ஹரிஜன விவசாயிகளை மனைக்கட்டிலிருந்து வெளியேற்றாதிருக்க, சாமான் செட்டுகளை பறிமுதல் செய்வதைத் தடுக்க, உடனே அவசரச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட சாமான்களையும் அவர்களுடைய மனைக்கட்டுகளைத் திருப்பித் தரவும், சொத்து சுகங்களைத் திருப்பித் தரவும் சட்டத்தில் வசதி செய்து தரவேண்டும். தஞ்சை ஜில்லா பெருநிலப் பிரபுவான வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார் தன் எஸ்டேட்டிலுள்ள நிலங்களை அவருடைய கையாட்களை வைத்துக்கொண்டு, ஹரிஜனங்களை மிரட்டி எழுதி வாங்கிக்கொண்டு வருகிறார். அம்மாதிரியான நிலங்களையும் திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

"அடுத்து, குடிநீர் வசதியை எடுத்துக் கொள்வோமானால் கிராமப் பகுதிகளிலே நல்ல குடிநீர் வசதியே கிடையாது. ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டிக் கொடுப்பதில்லை. அப்படி வெட்டிக் கொடுக்கப்படும் இடங்களிலும் தண்ணீர் நல்லதாகக் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களுக்கு வேறு நல்ல கிணறுகளை வெட்டித் தருவதற்கு சர்க்கார் உத்தரவிடுவதில்லை. அவைகளையெல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"சில நண்பர்கள் பிற்பட்ட சமூகத்தினருக்கும், ஹரிஜனங்களுக்குமிடையே ஒற்றுமை இல்லையென்று கூறினார்கள். நாங்கள் எப்போதும் ஒற்றுமையாக இருக்கவே விரும்புகிறோம். ஆனால் சில ஜாதி ஹிந்துக்கள் தான் ஹரிஜனங்கள்மீது படையெடுத்து வருகிறார்கள். நாங்கள் ஒன்றாக இரண்டறக் கலந்து வாழவேண்டுமென்றுதான் நினைக்கிறோம். ஆனால் சர்க்காரில் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதில்லை.

"குடிப்பதற்கு தண்ணீர் வசதிகூட ஒழுங்காக செய்துகொடுக்காமல் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஹரிஜனங்கள் தண்ணீர் எடுக்கும் குளம், குட்டைகளைக்கூட சுத்தம் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருவதில்லை. ஆகவே இதையெல்லாம் செய்துகொடுக்கும்படியாக வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

2–55 p.m. SRI K. R. VISWANATHAN :—"கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன முன்னேற்ற மான்யத்தின் வேண்டுகோளின்கீழ் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். இந்த மான்ய வேண்டுகோளிலே இந்த ஆண்டிலே ஓரளவு கொஞ்சம் அதிகத் தொகையை செலவிட ஒதுக்கப்பட்டிருப்பதை அறிந்து, அரசியலாரை முதன்முதலாகப் பாராட்டிக் கொள்ளுகின்றேன். இன்று அரசியலார் பல நன்மைகளைச் செய்துகொண்டு வந்தாலும், இன்னும் செய்யவேண்டிய விஷயங்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

"முதலாவதாக, கல்வித் திட்டத்தைப் பார்க்கின்றபோது வரவுசெலவுத் திட்டத்திலே பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற 11 லட்ச ரூபாய் மிகக் குறைவானது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஏனென்றால், இச்சபையிலே கனம் அமைச்சர் அவர்கள், பிற்பட்ட

11th March 1955] [Sri K. R. Viswanathan]

வகுப்பினர்களிடம் இருந்து 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்ததாகவும், அதிலே 2 ஆயிரம் விண்ணப்பங்களுக்கே உதவித்தொகை அளிக்க முடிந்ததாகவும், பாக்கி 5 ஆயிரம் விண்ணப்பங்கள் தள்ளப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். ஆகவே இப்போது கொடுக்கப்பட்டுள்ள உதவி இரண்டு பங்கானால், இன்னும் ஐந்து பங்கு அதிகப்படுத்தினால், ஓரளவு வருகின்ற விண்ணப்பங்களையாவது திருப்தி செய்ததாக இருக்கும். ஆகவே, இந்தத் தொகையை இன்னும் அதிகரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்து, பள்ளிகளிலே படித்துக் கொண்டுருக்கின்ற மாணவர்கள் ஹாஸ்டல் வசதிக்காகவும், சாப்பாட்டு வசதிக்காகவும் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ரெசிடென்ஷியல் வசதி (Residential Scholarship) வேண்டுமென்று கேட்டார்கள். என்ன காரணத்தாலே, அவர்களுக்கு ரெஷிடென்ஷியல் அல்லாத உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஏழை மாணவர்கள் தாங்கள் பரீட்சையிலே திறமை பெற்றிருந்தும், உணவுடன்கூடிய படிப்புதவி கிடைக்குமென்று சாப்பாட்டு வசதி செய்துகொண்டிருந்தும், ரெசிடென்ட் இல்லாமையால் மிகவும் இன்னலுறுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றியமைத்து, அவர்கள் எந்த படிப்புதவிக்கு விண்ணப்பிக்கின்றார்களோ அதற்கு உதவியளிக்கு மாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

"இப்போது சர்க்கார் எட்டாம் வகுப்புவரை ஜாதிமத பாகுபாடு இன்றி எல்லா மாணவர்களுக்கும் சம்பளமில்லாமல் படிப்பதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறது. ஆனால் இதனால் பிற்பட்ட வகுப்பினருக்கோ, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கோ எந்தவிதமான அதிகச் சலுகையும் செய்துவிட்டதாகச் சொல்லமுடியாது. ஆகையால் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் 10-வது வகுப்பு வரையிலாவது இலவசமாகப் படிக்க உதவியளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"உத்தியோகத்தை எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால், பிற்பட்ட வகுப்பினருக்கு 100-க்கு 25 சத விகிதம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது அவர்களுடைய ஜனத்தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் தாராதம்மியமாக இருக்கிறதென்று பல தடவை இந்த சட்ட சபையிலே எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆனால் நிதி மந்திரி அவர்கள் பிற்பட்ட வகுப்பினர் 32 சத விகிதம் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் கணக்குப்படியே வைத்துக்கொண்டாலும் பிற்பட்ட வகுப்பினருக்கு 32 சத விகிதம் உத்தியோகம் ஒதுக்கும் சலுகையை அளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அடுத்து, இந்த உத்தியோகத்திலிருக்கின்றவர்களுக்கு உத்தியோக உயர்வுச் சலுகை கொடுக்கப்படுகின்றதா என்று பார்த்தால் அதிலும் அவர்களுக்கு சலுகை கொடுக்கப்படுவதில்லை. உதாரணமாக, செக்ரடேரியட்டில் எடுத்துக்கொண்டால், 'அசிஸ்டென்ட் செக்ரட்டரி' என்கிற பதவிக்கு அங்கிருக்கும் எழுத்தாளர் (குமாஸ்தா), மேற்பார்வையாளர் (சூபரின்டென்ட்) அவர்களுக்குத்தான் அசிஸ்டென்ட் செக்ரட்டரி பதவி கொடுக்கப்படுகின்றது. அப்படிக் கொடுப்பதில் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 25 சத விகிதம் சலுகைகூட அவர்களுக்கு கொடுப்பதில்லை. அதேபோல் இந்தச் சிக்கல்கள் இன்னும் பல இலாகாக்களில் இருந்து வருகிறது. அங்கெல்லாம் முற்பட்ட வகுப்பினர்கள்தான் உயர்ந்த உத்தியோகத்தில் அதிகமாக காணப்படுகிறார்கள். அதையும் கவனித்து, அங்கெல்லாம் பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்டவருக்கும் நியாயம் அளித்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"முற்பட்ட வகுப்பினர் பிற்பட்ட வகுப்பினருக்கு உத்தியோக உயர்வு 3 p.m.
கொடுக்கும்போது மனக் கசப்பும் தாராள மனம் இல்லாமலும் இருக்கிறார்கள். கீழ் நிலையில் முற்பட்ட வகுப்பினர் இருந்து அவருக்கு மேல் பிற்பட்ட வகுப்பினர் இருந்தால் அந்த முற்பட்ட வகுப்பினருக்கு மேல் பதவி கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் அவருக்கு மேல்

[Sri K. R. Viswanathan] [11th March 1955

இருக்கும் பிற்பட்ட வகுப்பினருடைய பர்சனல் பைலில் கெட்ட முறையில் எழுத உத்தியோக உயர்வை கொடுக்காமல் இருக்கிறார்கள். இது நம்முடைய நாட்டின் துரதிருஷ்ட வசம்தான் என்று சொல்லவேண்டியதாக இருக்கிறது. இங்குதான் இந்த ஜாதி பாகுபாடுகள் பிரதிபலிக்கிறது. ஜாதி பாகுபாடுகள் இருந்தாலும் இந்த மாதிரி பிற்பட்டவர்கள் மேலே வரமுடியாமல் தடுத்துவிடுகிறார்கள். இதற்காகத்தான் நாங்கள் உத்தியோக உயர்வு முறையில் ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். எங்களுடைய முக்கியமான வேண்டுகோள்களில் இது ஒன்று.

"இப்பொழுது சர்வீஸ் கமிஷன் இருக்கிறது. அதில் முற்பட்ட வகுப்பினர்கள்தான் உத்தியோகம் வகிக்கிறார்கள். நாம் சமத்துவம் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நடைமுறையில் வேறுவிதமாக காரியங்கள் நடந்துகொண்டு வருகின்றன. ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினர் என்ற பேதாபேதம் இருந்து வருகிறது. சமத்துவம் பேச்சளவில்தான் இருக்கிறது. ஆனால் காரியம் செய்யும்போது வேறு விதமாகத்தான் நடக்கிறது. அதனால்தான் சர்வீஸ் கமிஷனில் பிற்பட்ட வகுப்பினருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லிக்கொண்டு வருகிறோம். அங்கு மூன்று பேர்கள் இருந்தால், ஒருவர் முற்பட்டவராகவும், ஒருவர் தாழ்த்தப்பட்டவராகவும், மற்றவர் பிற்பட்டவராகவும் இருந்தால்தான் நலம் பயக்கும். அந்த முறையில் சர்வீஸ் கமிஷனை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பொதுவாக தாழ்த்தப்பட்டவர்களுடைய முன்னேற்றத்தை யாரும் விரும்பாதவர்கள் இல்லை. ஒவ்வொருவரும் வேண்டுமென்றுதான் சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் அங்கங்கே தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலைமையும் ஹரிஜனங்களுடைய நிலைமையும் முன்னேற்றப்படவேண்டும். பேச்சானது அதிகமாக இருக்கிறதேயொழிய காரியத்தில் ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. இந்த சட்ட சபையில்கூட ஹரிஜனங்களுக்கு என்று அதிகப்படியான சலுகைகள் காட்டப்படுகிறது. மற்ற டிமாண்டுகளுக்கு மூன்று மணி அல்லது நாலு மணி என்று ஒதுக்கி இருந்தாலும் ஹரிஜன முன்னேற்றத்திற்காக இந்த டிமாண்டுக்கு ஆறு மணி நேரம் ஒதுக்கி அதிகமாக பேசவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படி பேச்சளவில் நடந்தாலும் காரியத்தில் ஒன்றும் நடப்பதாகவே தெரியவில்லை. கூச்சல் போடுவதற்கான பயன் ஏற்படவில்லை. 1932-33-ம் வருஷம் மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருந்தபோது ஒரே மணி நேரத்தில் ஜனங்களுடைய மனம் எவ்வளவோ மாறிவிட்டது என்று நிலைமை இருந்தது. ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. எல்லாம் பேச்சளவில்தான் இருக்கிறது. மனமாற்றம் ஏற்படவில்லை. முன்னேற்றம் அடைந்ததாகவே தெரியவில்லை.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியாவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.'

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

பேசிக்கொண்டுதான் நாம் இருக்கிறோமே தவிர நடைமுறையில் அதிகமாக செய்வது கிடையாது. அந்த அளவில் நாம் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறோம்.

"அதற்கு ஹரிஜனங்களுக்கு இலவசமாக பள்ளிக்கூட படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டியதவசியமில்லை. அதனால் மனதை மாற்றிவிட முடியாது. அதற்கு ஒரு வழி நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டில் ஜாதி மத பேதங்கள் இருப்பதற்குக் காரணம் அவர்கள் செய்துவரும் தொழில்தான். அவரவர்கள் தனித்தனி தொழில் செய்து வருவதால்தான் இம்மாதிரியான ஜாதி மத பேதங்கள் ஏற்படுகின்றன.

'பிறப்பொக்கு மெல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'

என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார். அவரவர்களுடைய தொழில் காரணமாகத்தான் உயர்வு தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு

11th March 1955] [Sri K. R. Viswanathan]

தோட்டி வேலை செய்யவேண்டும் என்றால் அந்த தோட்டி வேலைக்கு ஹரிஜன சேரியிலிருந்துதான் ஆட்கள் வரவேண்டும் என்று இருக்கிறது. மற்ற வகுப்பினர்கள் அந்த தொழிலுக்கு வருவதாக இல்லை. வேறு ஜாதி தோட்டி வேலை செய்து கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அதற்கு என் மேல் ஜாதியிலிருந்து ஒருவரும் வரவில்லை. அந்தத் தொழில் கீழ்த்தொழில் அதனால் கீழ் ஜாதிக்காரர்தான் அதைச் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த நிலைமையில் இந்நாடு இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டும். இன்றைக்கு பார்த்தால் மருத்துவ தொழில் இருக்கிறது. அதற்கு என் மேல் வகுப்பினர்கள் வருகிறார்கள். அதில் அதிகப்படியான வருமானம் கிடைக்கிறது. அதனால்தான் அந்தத் தொழிலுக்கு எந்த வகுப்பினரும் வருகிறார்கள். தோட்டித் தொழிலுக்கு இன்றைக்கு ரூ. 30 தான் கொடுக்கிறார்கள். அதற்கு ரூ. 150 சம்பளம் கொடுப்பது என்றிருந்தால் உண்மையிலேயே அந்தத் தொழிலுக்கு பார்ப்பனர்கள்கூட வருவார்கள். எந்த ஜாதியாக இருந்தாலும் அந்தத் தொழிலைச் செய்வதற்கு வருவார்கள். அப்படி வருவதற்கும் தயாராக இருப்பார்கள். அதனால் உயர்ந்த ஊதியம் கொடுக்க சர்க்கார் முன் வந்தால் உண்மையிலேயே மற்ற ஜாதிகள் இந்தத் தொழிலுக்கு வருவார்கள். ஜாதி வித்தியாசம் ஏற்படாது."

*Sri O. A. NANJAPPA :—"கனம் சபாநாயகர் அவர்களே, இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவ்வருஷம் செலவுக்காக ரூ. 1,09,36,600 ஒதுக்கி இருப்பதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். இம்மாதிரி வருஷா வருஷம் அதிகப்படியான தொகையை ஒதுக்கி தாழ்த்தப்பட்டவர்களுக்கு நன்மையைச் செய்து வருகிற சர்க்காரை நான் ஆதரிப்பதோடு சில யோசனைகளையும் சொல்ல ஆசைப்படுகிறேன். புதிய யோசனைகள் ஒன்றுமே இல்லை. காங்கிரஸ் சர்க்கார் இந்நாட்டில் ஆட்சியை ஏற்றுக்கொண்ட பிறகு ஹரிஜனங்களுக்கென பத்து வருஷத் திட்டத்தை அமைத்து நன்மைகள் செய்துகொண்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட முக்கால் பங்கு வருஷம் அந்தத் திட்டத்தில் செலவாகி விட்டது. இன்னும் இரண்டொரு வருஷங்கள்தான் இருக்கின்றன. அதுவும் அநேகமாக முடியப்போகிறது. அதனால் இன்னும் ஹரிஜனங்களிடத்திலுள்ள குறைகளைப்போக்க, கல்வி அறிவை வளர்க்கவேண்டியதாக இருக்கிறது. சமுதாயம் முன்னேற்றமடையவேண்டியதாக இருக்கிறது. அதனால் சர்க்கார் இன்னும் பத்து வருஷங்களுக்கு அந்த சலுகையை நீடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்காக சர்க்கார் ஆவன செய்ய முன் வரவேண்டும்.

"ஆரம்பத்திலிருந்தே அவர்கள் நசுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு சமுதாயத்தில் அபிவிருத்தி வேண்டும். பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற்றமடையவேண்டும். கல்வி வசதிகள் வேண்டும். அம்மாதிரி கல்வி வசதியை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு சேரிகளிலும் கட்டாயமாக லேபர் பாடசாலைகளை அமைக்கவேண்டும். பாடசாலைகளை அமைத்து அவர்களுக்கு புஸ்தகங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டும். மத்தியான உணவு இலவசமாகக் கொடுக்கவேண்டும். ஹரிஜன மாணவர்கள் ஆரம்பக் கல்வி பெற்று வருவதற்கு சர்க்காரால் ஆன எல்லா ஏற்பாடும் செய்யவேண்டும். சேரிகளை ஒழித்து அங்கு நல்ல வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டும். அதற்கு இப்பொழுது சர்க்கார் திட்டம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சேரிகளுக்குப் பக்கத்தில் உள்ள நிலங்களை எடுத்து ஆளுக்கு 4 சென்ட் என்று கொடுத்துவிடுகிறார்கள். அப்படி நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்களேயொழிய நடைமுறையில் பார்த்தால் அவர்கள் அங்கு வீடுகளைக் கட்டிக்கொள்ளவில்லை. ஏனென்றால் அவர்களுடைய கையில் பணம் இல்லை. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வட்டியில்லாத கடனாக 50 சத விகிதம் கொடுத்தும் 50 சத விகிதம் இலவசமாகக் கொடுத்தும் அவர்களை வீடுகள் கட்டிக்கொள்ளச் சொல்லவேண்டும். அப்படி செய்தால் கிராமங்களில் நூற்றுக்கணக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியும். வருஷா வருஷம் ஒரு கோடி என்று ஒதுக்கி

[Sri O. A. Nanjappa] [11th March 1955

செலவழிப்பதில் பிரயோசனம் இல்லை. ஒரு கோடியோ அல்லது இரண்டு கோடியோ ரூபாயை ஒரே தடவையாக ஒதுக்கி சேரிகளில் வீடு கட்டும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவந்தால்தான் சேரிகளில் குடிசை வீடுகளை பார்க்கமுடியாது. இதில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு மில் தொழில் முதலிய பெரிய தொழில்கள் அவசியமில்லை. இப்பொழுது சர்க்காருக்கு பொருளாதார நெருக்கடி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் ஹரிஜனங்களுக்கு குடிசைத் தொழிலை நடத்துவதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும். குடிசைத் தொழிலுக்கு அவ்வளவு தொகை தேவையில்லை. ஹரிஜனங்களுக்கு பாய் முடைதல், தச்சு வேலை செய்தல், ஜமக்காளம் நெய்தல் போன்ற முதலிய வேலைகளைக் கற்றுக்கொடுக்கலாம். இப்படிப்பட்ட குடிசைத் தொழில்களை ஆரம்பித்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். தனிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட குடிசைத் தொழிலை ஆரம்பித்தால் அவர்களுக்கு கிராண்ட் கொடுத்து உதவி செய்ய சர்க்கார் முன் வரவேண்டும். சாதாரணமாக ஒருவன் தச்சு வேலை ஆரம்பித்தால் அதை சர்க்கார் எடுத்துக் கொண்டு பூரா செலவையும் சர்க்கார் கொடுத்து உதவ வேண்டும். அதனால் நூற்றுக்கணக்கான ஹரிஜனங்கள் முன்னுக்கு வரமுடியும்.

3 10 p.m. ஏற்கனவே டிமாண்டின் ஆரம்பத்திலே சில தகராறுகள் ஏற்பட்டன. ஹரிஜனங்களுக்கும், Backward class-யை சேர்ந்த படையாச்சிகளுக்கும் விரோதமிருப்பதாக ஒரு நண்பர் சொன்னார். இன்னொரு நண்பர் அதை மறுத்தார். ஆனால் அதை நான் மறுக்க முடியாது. கிராமங்களில் ஆதித்திராவிடர்களுக்கும் படையாச்சிகளுக்கும் சண்டை நடந்துகொண்டுதான் இருக்கிறது. தைப் பண்டிகை காலத்திலே, கிராமங்களில் மாடு ஆட்டம் போடுவார்கள். அந்தச் சமயத்தில், படையாச்சிகளுக்கும் ஆதித்திராவிடர்களுக்கும் சண்டை வருவதுண்டு. ஹரிஜனங்களுடைய குடிசைகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டிருக்கின்றன; பெரிய குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. ஐயருக்கும் ஆதித்திராவிடர்களுக்கும் சண்டையில்லை; முதலியார்களுக்கும் ஆதித்திராவிடர்களுக்கும் சண்டை கிடையாது; படையாச்சிகளுக்கும் ஆதித்திராவிடர்களுக்கும்தான் சண்டையிருக்கிறது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதை ஒழிக்க ஒன்று செய்யவேண்டும். ஜில்லா Welfare ஆபீசர்களை Propaganda ஆபீசர்களாக மாற்றி தாழ்ந்தவன் உயர்ந்தவன் இல்லை என்ற பிரசாரம் செய்யச் சொல்லவேண்டும். ஆகவே இந்த மாகிரி பிரசார ஆபீசர்களாக மாற்றி கிராமங்களில் பிரசாரம் செய்ய வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக கிராமத்திலே இன்னும் பெரிய குறை இருக்கின்றது. கிராமத்தில் பணக்காரனும் இருப்பான், தாழ்த்தப்பட்ட தோட்டியும் இருப்பான். பணக்காரன் வீட்டிலே இறந்துபோன பசுக்களையும், ஆடு மாடுகளையும் தாழ்த்தப்பட்டவன் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற நிர்ப்பந்தமுண்டு. அதற்காக தாழ்த்தப்பட்டவன் பணக்காரனிடத்திலே ஊதியம் பெறுவான். அந்தப் பழக்கம் இன்னும் இந்நாட்டிலே இருந்துகொண்டுதான் இருக்கிறது. நாட்டுக்கு எந்த ராஜா வந்தாலும் தோட்டிக்கு எப்போதும் தொண்டு செய்யும் கடமைதான் என்றபடி இந்த பழக்கமும் நிர்ப்பந்தமும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. பணக்காரனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அந்த செத்த மாட்டை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினாலும், அல்லது தாழ்த்தப்பட்ட மகன், அந்த இறந்த மாட்டை எனக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினாலும், இந்த இரண்டு பேர்களையும் தண்டிப்பதற்காக சர்க்கார் சட்டம் செய்தாலொழிய, இன்றைக்கு இருக்கும் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற பிரச்னை மாறாது. ஆகவே, கவர்ன்மெண்டார் இந்தப் பழக்கத்தை நிறுத்த உடனடியாக ஏதாவது ஒரு சட்டம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் சேலம் ஜில்லாவில் ஹரூர் தாலூக்கா பிற்போக்கான தாலூக்கா. சேலம் ஜில்லாவில் வசிக்கும் ஹரிஜனங்களில் முக்கால் பங்கு ஜனத்தொகை கொண்டது. அவர்கள் எல்லாம் பாமர மக்கள். அவர்கள் காட்டில் கூலி வேலை செய்தாலொழிய, அவர்களுக்கு எந்தவித

11th March 1955] [Sri O. A. Nanjappa]

மான வருமானமும் கிடையாது. அங்கே பஞ்சாயத்து காடுகள், கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆத்தூர் தாலூக்காவில் கொடுத்ததுபோல், ஹரூர் தாலூக்கா பஞ்சாயத்து காடுகள், புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கு இலவசமாக கொடுத்து அவர்கள் பண்ணையத்திலே அபிவிருத்தி அடைய கிணறு வெட்டுவதற்கு பணமும், பண்ணையம் செய்ய, மாடு வாங்க தலைக்கு முன்னூறு ரூபாய் கடனுகவும் கவர்ன்மெண்டார் கொடுத்தால் நன்மையாக இருக்கும். சர்க்கார் ஹரிஜனங்களுக்கு ஆத்தூரில் நிலம் கொடுத்து உதவியதுமட்டும் போதாது, அவர்கள் விவசாயத்தை மேற்கொண்டு செய்வதற்கும், விவசாயக் கருவிகள் வாங்குவதற்கும், ஆடு, மாடுகள் வாங்குவதற்கும் பொருள் உதவி செய்யாவிட்டால், அங்கே கொடுக்கப்படும் ஒன்பதாயிரம் ஏக்கர் நிலமும் வீண் ஆகிவிடும். ஆகவே கவர்ன்மெண்டார் ஒரு கோடியல்ல, இரண்டு கோடி ரூபாய் ஹரிஜன அபிவிருத்திக்கு என்று ஒதுக்கிவைத்து, பத்து ஆண்டு சலுகை காலத்திற்குள்ளாக அவர்கள் எண்ணம் பூராவும் பூர்த்தி செய்யவேண்டும். வருஷா வருஷம் கேட்டுக்கொண்டே இருந்தாலும், சலுகைகள் கிடைத்துக்கொண்டிருந்தாலும் ஹரிஜனங்கள் அதிக முன்னேற்றம் அடைய முடியாது. உடனடியாக, வேண்டிய காரியங்களை ஹரிஜனங்களுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI P. RANGASWAMI REDDIAR :—" சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்கள் முன்னேற்றத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசுவதிலிருந்து, நம் மாகாணத்திலுள்ள தீண்டப்படாதவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படும், நம் மாகாண ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்கு மக்களுடைய சமுதாயம் முன்னேற்றம் அடைய, ஒரு சிலருக்கு தொழில் வசதி அளிப்பதினுலோ, அல்லது ஒரு சிலருக்கு உத்தியோகம் கொடுப்பதால்மட்டும் முன்னேறிவிடாது என்பதை நாம் எல்லோரும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு கோடியல்ல, இரண்டு கோடி பணம் செலவழித்து, ஹரிஜனங்களுக்கு அதிகப்படியாக பள்ளிக்கூட வசதிகள், அதிகப்படியாக உத்தியோகங்கள் கொடுத்தாலும், சுவாமி விவேகானந்தர் சொல்லி இருப்பதுபோல் ஒரு சிலர் பிராமணத்தன்மை அடைவார்களே ஒழிய இந்த சலுகைகள் கொடுத்ததினுல் சமுதாயம் பூராவும் உயர்வு அடைய முடியாது. சமுதாயம் இழிதன்மையில் மாற்றம் ஏற்படாது. படிப்பு, உத்தியோக உயர்வு பெற்றவர்களும், மற்றவர்களும் தங்களுக்கு சமத்துவமானவர்கள் என்ற எண்ணத்தில் அதிக நாட்டம் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். இதில் கனம் அங்கத்தினர்களுக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆகவே என் இந்த தீண்டாமை அல்லது தீண்டக்கூடாத கொடுமை சமுதாயத்தில் இருக்கிறது என்பதை இந்த சலுகைகள் காட்டுவதுடன்கூட சர்க்கார் ஆராய்ச்சி செய்ய வேண்டும். நாம் எல்லோரும் சட்ட சபையில், மக்கள் பிரதிநிதிகளாகிய தீண்டாமை ஒழியவேண்டும், ஹரிஜனங்கள் என்ற வகுப்பு இருக்கக்கூடாது, எல்லோரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை நிலவவேண்டுமென்று நினைத்தால், அதேமாதிரி பொது மக்களும் நினைத்தார்களானுல், இந்த தீண்டாமைக் கொடுமையை, கூடியசீக்கிரத்தில் ஒழிக்கப்படவேண்டிய வழி வகைகளை சர்க்கார் கண்டுபிடிக்க வேண்டும். நான் சில ஆண்டுகளாக இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்தேன். எனக்கு ஒரே மார்க்கம்தான் தோன்றிற்று. ஆனுல் அனேக ஹரிஜனங்களும் அதை ஒத்துக்கொள்ளமாட்டார்கள், பொது மக்களும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இந்த வம்பு நமக்கு எதற்காக என்று நானும் நினைத்ததுண்டு. அந்த மார்க்கம் என்னவென்ருல், திருச்சி ஜில்லாவிலுள்ள ஹரிஜனங்கள் எல்லோரையும், ராமனுதபுறம், வட ஆற்காடு ஜில்லாக்களுக்கு கொண்டுபோய், அவர்களுள் தமிழ் பேசுகிறவர்கள், படித்தவர்களை, பிள்ளை, முதலியார் என்று சொல்லியும், தெலுங்கு பேசுகிறவர்கள், படித்தவர்களை, நாயுடு, ரெட்டி என்று சொல்லியும் ஜாதி பட்டத்தை மாற்றிக்கொண்டால் நலம் என்று தோன்றிற்று."

MR. SPEAKER :—" I hope the House will not misunderstand me if I just intervene to say that Sri Ayodidoss—one of the uncles

[Mr. Speaker] [11th March 1955

of the Hon. the Minister for Harijan Welfare Sri B. Parameswaran tried that experiment also. He asked the Harijans to change their names and call themselves as Mani Chettiar and so on. But that experiment also was not a success."

* SRI P. RANGASWAMI REDDIAR :—" ஏதோ அப்படி ஒருவர் முயற்சி செய்ததாக கனம் சபாநாயகர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் சொல்லுவது; ஊர் பெயர் தெரியாத இடத்திலே, அவர்களை விட்டுவிடுவது. தெலுங்கு பேசுகிறவர்களை, ரெட்டியார், வைசிய செட்டியார் என்று சொல்லி, அவர்களை நடுத்தெருவில் குடி இருக்கச் செய்வதும், அதேமாதிரி தமிழ் பேசுகிறவர்களை முதலியார், பிள்ளை என்று சொல்லி, அப்படி செய்யவேண்டுமென்று அடியேனுக்கு நீண்டநாள் அபிப்பிராயம். நீங்கள் எல்லோரும் இதை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்ல வில்லை. ஊரை விட்டு ஊர் போவது கஷ்டம் என்பது எனக்கும் தெரியும். ஆகவே, இந்த தீண்டாமையை போக்கும் விஷயத்தை மிக முக்கியமாக யோசனைசெய்து பார்க்கவேண்டும். பத்து, பதினைந்து ஆண்டுகள் வரையில் இந்தச் சலுகைகள் கொடுத்துவிட்டால் இந்த தீண்டப்படாத சமுதாயம், அறுபது லக்ஷம் மக்கள் மற்ற ஜாதிக்காரர்களுடைய அந்தஸ்து பெற்று விடுவார்களா ? என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அப்படியானால் யோசித்துக்கொண்டு ஒரு சலுகையும் இல்லாமல் சும்மா இருப்பதென்று அர்த்தமல்ல. எனக்கு அநுபவத்தில் ஒரு சின்ன விஷயம்; இன்று காலை பேசிய அங்கத்தினர்கள், அந்தப் பக்கத்திலிருந்து பேசினவர்கள், ஜாதி ஹிந்துக்கள், இத் தீண்டாமை ஒழிப்பில் அதிக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். நம் நாட்டில் 150 ஆண்டுகளாக பலர் பொதுநலச்சேவை செய்து இருக்கிறார்கள். கிறிஸ்துவப் பாதரிகள், கன்னிகாஸ்திரீகள் தங்கள் வாழ்க்கையை பொதுநலத்திற்கு அர்ப்பணம்செய்து, பொதுமக்களுக்கு கல்வி மருத்துவதுறையில் தொண்டு செய்கிறார்கள். அப்படி ஹரிஜன சமுதாயத்திலிருந்து பலர் பொதுநல சேவைக்காக தோன்றவேண்டும். அவர்கள் வாழ்க்கையில் எந்தவிதமான, பிரதிப்பிரயோசனமும் இல்லாமல், அவர்களுடைய சொந்த வாழ்க்கையில் அக்கறை காட்டாமல், சந்தேகத்திற்கு இடங்கொடாமல், "Caesar's wife should be above suspicion" என்ற மாதிரி சுயநலவாதி என்ற சந்தேகத்திற்கு இடம் கொடுக்காமல் இந்த சமுதாயம் முன்னுக்கு வரவேண்டு மென்ற அக்கறையுடன் வேலைசெய்தால்தான், இந்த சமுதாயம் முன்னேற்றம் அடைய முடியும். ஹரிஜனங்களுக்கு மற்றவர்கள் செய்வதைவிட ஹரிஜனங்களே
3-30 p.m. தங்களுக்குச் செய்துகொள்ளவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. நம்முடைய சபையில் பலதாப்பட்ட ஹரிஜன மெம்பர்கள் இருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகிய மூன்று பிரிவுகள் இருக்கின்றன. இவர்களுக்குள்ளேயே வேறுபாடுகள் இருக்கின்றன. துறையூருக்குப் பக்கத்தில் ஏழாவது மைலில் மூன்று குடிதண்ணீர் கிணறுகள் இருக்கின்றன. பள்ளர்கள் பறையர்கள் ஆகிய இரு வகுப்பினர் வசிக்கக்கூடிய இடத்தில் ஒரு கிணறு இருக்கவேண்டிய இடத்தில் இரு கிணறுகள் இருக்கின்றன. அதன் மத்தியில் ஒரு சுவர் எழுப்பி தண்ணீர் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதற்கு இருபது கஜ தூரத்தில் ஒரு ஏரியின் உள்வாயில் இருக்கிறது. முசிரி டெபுடி கலெக்டரிடம் சொல்லி ஒரு கிணறு வெட்டச்சொன்னால், மூன்று வகுப்பினரும் ஒரே பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொள்ள ஒத்துக்கொள்வது இல்லை என்று சொல்லுகிறார். அவர்கள் அப்படிச்சொல்வதற்கு ஓரளவு அறியாமை காரணம், சமுதாயத்திலுள்ள கொடுமைகள் தெரியாத காரணம், மூடப் பழக்கவழக்கங்களில் அவர்கள் ஈடுபட்டிருப்பது காரணம். இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்தால் ஏன் இந்தச் சமுதாயம் தீண்டப்படாத சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று கருதப்படுகிறது ? மற்ற சமூகங்களில் படிக்காதவர்கள் இல்லையா ? மற்ற ஜாதிகளில் ஏழைகள் இல்லையா ? தொழில் செய்வதனால் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னால் மற்ற ஜாதி இந்துக்களில் அதேமாதிரி தொழில் செய்பவர்கள் இல்லையா ? எதனால் இந்தச் சமுதாயம் மட்டும் இப்படி

11th March 1955] [Sri P. Rangaswami Reddiar]

இருக்கிறது ? தொன்றுதொட்டு இருந்துவந்த பழக்கம் என்று சொல்ல லாம், சாத்திர அடிப்படையில் ஏற்பட்டது என்று சொல்லலாம், ஆண்ட வன் சொன்ன அடிப்படையில் ஏற்பட்டது என்று சொல்லலாம். தொன்று தொட்டு நம்பிவந்த பழக்கவழக்கங்களை மாற்றி ஒரு பொது பகுத்தறிவு நோக்கும் (rational thinking) கொண்டு பாரததால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் செய்தொழில் வேற்றுமையால் உயாவு தாழ்வு இல்லை என்று திருவள்ளுவர் விடுத்த எச்சரிக்கை நன்கு விளங்கும். சமுதாயத்தில் இருக்கின்ற குறைபாடுகள்தான் காரணம். சமுதாயத்தில் இருக்கின்றவர்கள், ஹரிஜனங்கள் நம்பியிருக்கின்ற அடிப்படைக் கருத்துக் களை மாற்றிக்கொண்டாலே அவர்கள் ஓரளவு முன்னுக்கு வந்துவிடலாம். ஹரிஜனங்களெல்லோரும் தற்போது அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தித்துக்கொள்வதற்கு சிற்சில இடங்களில மூன்று வகுப்பினர்கள் நான்கு வகுப்பினர்கள் இருந்தாலுங்கூட ஒருசில வகுப்பினர் குடும்பங்கள் மூன்று நான்குதான் இருக்கும். சில வகுப்பைச் சார்ந்தவாகள் 150, 200 குடும்பங்கள இருக்கன்றன. அவர்கள் எல்லோரும் சேர்ந்து பொது சௌகரியங்கள்—கிணறுகளாயிருந்தாலும்சரி, பள்ளிக்கூடங்களாக இருந் தாலும்சரி, ஜாதி இந்துக்களைக் கேட்டுகொள்வதற்குமுன்பு, ஜாதி இந்துக் கள் அவர்களுக்கு நன்மை செய்வார்கள் என்று நினைப்பதற்குமுன்பு அவர்கள் ஒன்றுபட்டு ஒரு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்ற மனோ பாவத்துடன் இருக்கப் பாடுபடவேண்டும். அந்த முறையில் வேலை செய்வ தற்கு அவர்களுக்குத் தகுந்தபடி எடுத்துச்சொல்லவும் அவர்கள் அதைத் தகுந்தபடி புரிந்து வாழ்க்கையில் நடந்துகொள்ளவும் இங்குள்ள ஹரிஜன அங்கத்தினர்கள் இடைவிடாமல் வேலைசெய்து வந்தால் அதுவே ஹரி ஜனங்களை முன்னேற்றுவதாகும் என்று நான் தாழ்மையுடன் தெரி வித்துக்கொள்ளுகின்றேன். ஜாதி இந்து அங்கத்தினர்கள் செய்கின்ற, எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சியைவட ஹரிஜன அங்கத்தினர்கள் அந் தந்தத் தொகுதியில் இந்த ஒரு சிறு காரியத்தைச் செய்வார்களானால் ஓரளவு சர்க்கார் சில விஷயங்களைச் சாக்காகச் சொல்லி தட்டிக்கழிக்க முடியாது. 'மூன்று வகுப்பினர்களும் ஒன்று சேர்ந்து ஒரே கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொள்ளச் சம்மதித்தால் கிணறு வெட்டுவதற்கு உத் தரவு போடுகிறோம்' என்று சொல்லாமல் இருப்பதற்கு மேற்சொன்ன காரியங்களை ஹரிஜன அங்கத்தினர்கள் செய்யவேண்டும்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு கனம் ஸ்ரீ பரமேசுவரன் அவர்களிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. அதாவது 1954-ம்ஞு நவம்பர்மீ 10உ அந்த அறிக்கை வந்தது. 'ஹரிஜனக் குடும்பங்களுக்கு குடி தண்ணீர் வசதிகள் எவ்வாறு இருக்கின்றன, எங்கெங்கே குடிதண்ணீர் வசதி இல்லை' என்று எழுதி அனுப்பமாறு கடிதம் வந்தது. நாளதுதேதி வரையில் நான் பதில் எழுதவில்லை. அங்காங்கே இருக்கின்ற ரெவினியூ அதிகாரிகளுக்கு நேரில் எடுத்துச் சொல்லியும் காண்பித்தும் 'ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம்' என்பதை வைத்துக்கொண்டு ரெவினியூ அதி காரிகள் குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்கிறோம் என்பதன் காரணமாக, . . ."

*SRI M. MARIMUTHU :—"கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன மான்யத்தை அன்புடன் ஆதரித்து சில விஷயங்கள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

"ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு அளிக்கும் விஷயத்தில் நான் சில மனுக்களை சமர்ப்பித்திருந்தேன். பிறகு தஞ்சை ஜில்லா திருப்பந்துருத்தி கிராமத்திலிருந்து பெரிய ஹரிஜன தெருவார்கள் 140 மனைகளுக்காக சுமார் நான்கு வருஷ காலமாக மேல் அதிகாரிகளிடம் மனுக்களைக் கொடுத் தும் இதுவரை கோரிக்கைகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அது விஷயத்தில் சர்க்கார் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்து உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பட்டுக்கோட்டை தாலூக்காவில் ஹரிஜனச் சேரிக்குப் பக்கத்தில் சிச்சடி புஞ்சை, மகாராஜாசமுத்திரம் இனும் கிராமம் சுமார் 7 ஏக்கரா நிலத்தை யும் வருஷத் தவணைகளில் சர்க்கார்மூலம் உடனடியாக வாங்கிக்கொடுக்கும் படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[Sri M. Marimuthu] [11th March 1955

"பட்டுக்கோட்டை பஞ்சாயத்து போர்டு தோட்டிக்குடியிலிருந்த குடிசைகளெல்லாம் அந்த நிலக்காரர்கள் பிரித்துவிட்டபடியினால் தோட்டிகளெல்லாம் கஷ்டப்படுகிறார்கள். அதையும் சர்க்காருக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

"தஞ்சை ஜில்லாவில் உள்ள மரமேறிகள் 12 தாலூக்காக்களிலும் பதனி இறக்குவதற்கு இதுவரை சௌகரியம் ஏற்படாமல் மக்கள் கஷ்டப்படுவதினால் உடனடியாக சர்க்கார் அவர்களுக்கு லைசென்சு கொடுக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

"பட்டுக்கோட்டை தாலூக்காவில் வந்திப்பட்டணத்தில் பரம்பரையாய் இருந்த (1) கட்டான் கருப்பையா, (2) முத்துராஜா வகையறாக்கள் பரம்பரையாய் இருந்த குடிசைகளை அப்புறப்படுத்தும்படியாக துன்புறுத்தப்படுவதினால் உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் அந்த இடத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படாமல் அதிலே குடியிருக்க வகைசெய்யவேண்டும்.

"ஒரத்தநாடு, ராஜாமடம் போர்டு பள்ளிகளில் ஹரிஜன மாணவர்கள், மாணவிகளை சேர்க்காமலிருப்பதால் இவ்வருஷம் சேர்க்கக்கூடிய மாணவர்களை உடனடியாக ஒரத்தநாடு ராஜாமடம் பள்ளிகளில் சேர்க்குமாறு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

"ஹரிஜன மக்கள் முன்னேறுவதற்கு மகாத்மா காந்தியடிகள் எவ்விதம் பாடுபட்டார்களோ அந்த அளவில் மாஜி முதல் மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் பாடுபட்டுவந்தார்கள். காலஞ்சென்ற வைத்தியநாதய்யர் அவர்களும் ஹரிஜன மக்களுக்காகப் பாடுபட்டு வந்ததை எல்லா அங்கத்தினர்களும் அறிவார்கள். பிராமணர்கள், பிராமணர்களல்லாதவர்கள், இன்னும் எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் ஆகியவர்களெல்லோரும் ஹரிஜன முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும். ஹரிஜனங்களிடையே தீண்டாமை இருக்கிறது, அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்று அங்கத்தினர்கள் அடிக்கடி சொல்லி வருவதும் பிரசாரம் செய்வதும் அவ்வளவு உசிதமாக இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

"இந்த பட்ஜெட்டிலே பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், மந்திரிகள் அங்கத்தினர்கள் பொதுமக்கள் எல்லோரும் ஹரிஜன முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் ஹரிஜனங்கள் தீண்டப்படாதவர்கள் என்ற பெயர் மாறும். ஹரிஜன வகுப்பில் பிராம்மணப் பெண்களைப் போல் அழகாக உள்ள எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஹரிஜன முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லும் எம்.எல்.ஏ.-க்கள் குறிப்பாக ஹரிஜனங்களல்லாத அங்கத்தினர்கள், விவாகம் செய்துகொள்வதற்கு முன்வந்தால், ஹரிஜனப் பெற்றோர்கள் தங்களுடைய பெண்களைக் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் எப்பொழுது பார்த்தாலும் தீண்டாமை தீண்டாமை என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கேட்டு எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது."

Sri M. PALANIYANDI :—"ஒரு விஷயத்தைக் கனம் அங்கத்தினரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இங்கு பெரும்பாலும் கல்யாணம் ஆனவர்கள்தான் இருக்கிறார்கள். ஹரிஜன சமூகத்தினுள்ள பெண்களை பிற ஜாதியாருக்குக் கொடுக்க விரும்புகிறாரா, அல்லது பிற ஜாதியிலிருந்து பெண்களை எடுத்துக்கொள்ள விரும்புகிறாரா ?"

***Sri M. MARIMUTHU** :—"உயர்ந்த வகுப்பினர்கள் பெண் கேட்க ஆரம்பித்தால் என்னுடைய மகளையே நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்."

Sri P. CHELLATHURAI :—"கனம் அங்கத்தினர், தனது வீட்டிலேயே குமாரி இருப்பதாகவும், ஜாதி இந்துக்கள் யார் முன்வந்தாலும் கல்யாணம் செய்து தருவதற்குத் தயாராய் இருப்பதாகவும் சொன்னார். அவர் அப்படிச் சொல்வதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு ஆண்குழந்தை இல்லையே என்று உண்மையிலேயே கவலைப்படுகிறேன்."

11th March 1955]

MR. SPEAKER :—" അങ്കത്തിനർ സൊല്വതു ചരിയല്ല. എം.എല്.എ ക്കുത്താൻ പെണ്ണ തരുവതാക കനം അങ്കത്തിനർ സൊന്ന്ാരേയൊഴിയ എല്ലോരുക്കും കൊടുപ്പതാകച് ചൊല്ലവില്ലേ."

***SRI M. MARIMUTHU** :—" കനം തലൈവർ അവർകളേ: 3-40 p.m.
ഇപ്പോതു ഇന്ത ഹരിജനങ്കളുടെയ മുന്നേറ്റത്തിറ്കാക നാൻ സൊല്ലുവതു ഒന്റും പുതിതു അല്ല. ഹരിജനങ്കൾ മുന്നേറുവതറ്കാക പിരിട്ടിഷ് ആട്ചി കാലത്തിലിരുന്തു മകാത്മാ കാന്തി അവർകൾ മികവും പാടുപട്ടിരുക്കിറ്ർ എന്പതു എല്ലാ അങ്കത്തിനരുക്കും തെരിന്ത വിഷയം. ഇന്ത നാട്ടിലേ എവ്വളവുതാൻ ജാതിവിത്തിയാചം ഇരുന്ത പോതിലും ഹരിജനങ്കൾ കൊഞ്ചം കൊഞ്ചമാക മുന്നേറിക്കൊണ്ടു താൻ വന്തിരുക്കിറ്ർകൾ. ഇവർകളിടയേ എവ്വളവുക്കെവ്വളവു വിത്തിയാചം ഇരുക്കിറതോ അവ്വളവുക്കവ്വളവു മുന്നേറുവതു നിച്ചയം. ആകവേ പടിത്ത ചാതാരണമാക ഇരണ്ടാവതു പാരം മുതല് എസ്.എസ്. എല്.ഷി-വരൈ പടിത്ത മാണവ മാണവികൾ പടിത്തിരുന്തും ചർക്കാർ ഉത്തിയോകമില്ലാത അളവുക്കു എത്തനൈയോ പേർകൾ കഷ്ടപ്പടുവതാല് ഉടനടിയാക പിയൂൻ മുതലിയ വേലൈകളൈകൊടുക്കുമാറു ചർക്കാരൈ അൻപുടൻ കേട്ടുക്കൊള്കിറേൻ.

" ഒവ്വൊരു ജില്ലാവിറ്കും മുക്കിയമാക തേവൈയാക ഇരുപ്പതു പാടചാലൈ മനൈകൾ, നടപ്പാതൈ, കുടിതണ്ണീർ, കിണറു, മയാനം, തർകാൎത്തു മുതലിയവൈകളാകും. ആകൈയാല് പൊതുജനങ്കൾ അന്തന്ത ജില്ലാ കലൈക്ടരുക്കും, ടെപുടി കലൈക്ടരുക്കും, ലേപർ ആപീചരുക്കും, ഇവൈകൾ വേണ്ടുമെന്റു എഴുതിനാലും എന്തവിതമാന നടവടിക്കൈയും എടുപ്പതില്ലേ. ആതലാല് അരചാങ്കം ഉടനടിയാക ഇന്ത വിഷയത്തില് അപ്പോതൈക്കപ്പോതു കവനം ചെലുത്തവേണ്ടുമെന്റു കേട്ടുക്കൊള്ളുകിറേൻ. മേലും ഇപ്പൊഴുതു ഇരുക്കക്കൂടിയ നിലൈമൈയില് മാണവർകൾ പടിത്തിരുന്തുംകൂട അവർകളുക്കു വേലൈ കിടൈപ്പതില്ലേ. അറന്താങ്കി താലുക്കാവില് ലേപർ പാടചാലൈ കിടൈയാതു. ആതലാല് അങ്കു ഇരുക്കും പിള്ളൈകളുക്കു അറിവു വളർച്ചിക്കു ഇടം ഇല്ലാമല് ഇരുക്കിറതു. ആതലാല് ഹരിജന മന്തിരി അവർകൾ ഇതൈപെല്ലാം കവനിത്തു ആവനചെയ്യുമാറു കേട്ടുക്കൊള്ളുകിറേൻ. ഇന്ത ഇടങ്കളില് കുടിതണ്ണീർ വചതി ചെയ്തു കൊടുക്കവേണ്ടും. ചർക്കാർ ഹരിജനങ്കളുക്കു മനൈക്കട്ടുകൾ കൊടുപ്പതറ്കു വേണ്ടിയ ഏറ്പാടുകൾ ചെയ്യവേണ്ടുമെന്റു കേട്ടുക്കൊള്ളുകിറേൻ."

***SRI K. C GOPALAN UNNI** :—" മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഹരിജനോദ്ധാരണത്തിനുവേണ്ടിയുള്ള ഡിമാന്റിൽ എന്റെ സ്നേഹിതൻ ശ്രീ കല്യാണസുന്ദരം അവതരിപ്പിച്ചിരിക്കുന്ന ബഡ്ജറ്റാവശ്യത്തെ ഞാൻ പിന്താങ്ങുന്നു. ഹരിജനോദ്ധാരണത്തിനുവേണ്ടി ഗവർമ്മെണ്ടു കുറെ പണം ചെലവാക്കുന്നുണ്ടെന്നുള്ളതു ശരിയാണ്. പക്ഷെ അതു മററാളുകൾക്കുവേണ്ടി ചെലവാക്കുന്ന സംഖ്യയുമായി താരതമ്യപ്പെടുത്തിയാൽ വളരെ ഉച്ചമാണ്. ഒരു ഹരിജൻ വെൽഫെയർ സ്കൂളിന് ചെലവാക്കുന്ന സംഖ്യ എടുത്തുനോക്കിയാൽ, അദ്ധ്യാപകന്മാരുടെ ശമ്പളം, കെട്ടിടവാടക ഉടങ്ങിയ ഇനങ്ങൾക്കായിട്ടാണ് കൂടുതൽ തുക ചെലവാക്കുന്നതു. ഹരിജനവിദ്യാർത്ഥികൾക്ക് കിട്ടുന്ന പ്രത്യേകമായ ആനുകൂല്യങ്ങളുടേയും സൌകര്യങ്ങളുടേയും കണക്കെടുത്തു നോക്കിയാൽ ചെലവാക്കുന്നതിന്റെ വകുതിപോലും വരുന്നില്ലെന്നു കാണാം. അതിന്നു പുറമെ ഗവർമ്മെണ്ടു ഈ പണം ചെലവാക്കുന്നതുതന്നെ ഒരുതരം ധർമ്മപ്രവൃത്തിയെന്നു വിചാരത്തോടുകൂടിയാണോ എന്നു എനിക്കു സംശയമുണ്ട്. ഹരിജനങ്ങൾ വളരെക്കാലമായി ഈ നാട്ടിലെ ജാതിഹിന്ദുക്കളുടെയും നാടുവാഴിമേധാവിത്വത്തിന്റെയും കൈയിൽനിന്ന് നിരന്തരമായ മർദ്ദനവും ക്ഷീണവും അനുഭവിച്ചു തങ്ങൾ മനുഷ്യരാണെന്നോ ഈ രാജ്യത്തു തങ്ങൾക്കും എന്തെങ്കിലും അവകാശമുണ്ടെന്നോ ഉള്ള ബോധം പോലും നഷ്ടപ്പെട്ടവരായിത്തീർന്നിരിക്കയാണ്. ആ നിലയ്ക്കു ഒരു മാററം വരുത്തി ഹരിജനങ്ങളും ഈ രാജ്യത്തുള്ള മനുഷ്യരാണെന്നും, അവർക്ക് ഈ രാജ്യത്തു മററുള്ളവരോടുള്ള അവകാശങ്ങളുണ്ടെന്നും, അതു കിട്ടുന്നതിന്ന് മററാരുടേയും സൌജന്യം ആവശ്യമില്ലെന്നും, അവർക്കുവേണ്ടി ചെയ്യുന്ന ആനുകൂല്യങ്ങൾ വെറുതെ ധർമ്മമായി കാട്ടുകയല്ലെന്നുമുള്ള ഒരു ബോധം ഹരിജനങ്ങളുടെയിടയിൽ ഉണ്ടായിട്ടുണ്ടോ

[Sri K. C. Gopalan Unni] [11th March 1955

എന്നു ഞാൻ സംശയിക്കുന്നു. അങ്ങനെ ഒരു വിശ്വാസം ഹരിജനങ്ങൾക്കുണ്ടാകുന്നതിന്നു തക്കവണ്ണം വിദ്യാഭ്യാസമല്ല അവർക്ക് നൽകിക്കൊണ്ടിരിക്കുന്നതു്. ഹരിജന വെൽഫെയർ ഡിപ്പാർട്ട്മെൻറായാലും ശരി, മററു ഡിപ്പാർട്ട്മെൻറുകളായാലും ശരി, ഹരിജനങ്ങൾക്കുവേണ്ടി എന്തെങ്കിലു ചെയ്യുന്നതു് തങ്ങൾ ഒരുമാതിരി ധർമ്മം ചെയ്യുന്നുവെന്ന മനോഭാവത്തോടെയാണെന്നു പറയാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല വളരെക്കാലമായി ഞ്ഞ മനുഭവിച്ച തങ്ങൾ മനുഷ്യരാണെന്ന ബോധംതന്നെ നഷ്ടപ്പെട്ടുപോയിട്ടുള്ള ആ ജനവിഭാഗത്തിന് തങ്ങളുടെ അവകാശങ്ങളറിച്ചുള്ള ബോധം ഉണ്ടാക്കിക്കൊടുക്കുന്നതിനും ആത്മാഭിമാനത്തോടുകൂടി തങ്ങൾ ആരുടേയും സൌജന്യത്തെല്ല കഴിയുന്നതു് എന്ന ഒരു വിശ്വാസം ഉണ്ടാക്കിക്കൊടുക്കുന്നതിനും പ്രയോജനപ്പെടുമാറു് ബഡ്ജററിൽ കൊള്ളിച്ചിട്ടുള്ള സംഖ്യകൾ ചെലവാക്കണമെന്നാണ് ഞാൻ വാദിക്കുന്നതു്. മലബാറിൽ 1931 ൽ മഹാത്മാഗാന്ധി വരികയുണ്ടായി. അക്കാലം മുതൽക്കെ അവിടത്തെ ദേശീയ പ്രസ്ഥാനത്തിന്റെ ഒരു ഭാഗമായി ഹരിജനോദ്ധാരണ പ്രസ്ഥാനവും വളർന്നുവന്നിട്ടുണ്ട്. അന്നു കോൺഗ്രസ്സിൽ പ്രവർത്തിച്ചുപോന്നിരുന്ന ഞങ്ങൾ ഒരു ഫാക്ടറിയോ ധർമ്മപ്രവൃത്തിയെന്നോ കരുതിയല്ല ഹരിജനപ്രസ്ഥാനത്തിൽ പങ്കെടുത്തിരുന്നതു്. സോഷ്യലിസ്റ്റ് ബുദ്ധിയോടും ഹരിജനങ്ങളെ ഉദ്ധരിക്കേണ്ടതു് തങ്ങളുടെ കടമയാണെന്നുള്ള വിശ്വാസത്തോടുകൂടിയാണ് ആദ്യം പ്രവർത്തിച്ചിരുന്നതു്. മഹാത്മാഗാന്ധി മലബാർ സന്ദർശിച്ചപ്പോൾ അന്നത്തെ അവിടത്തെ ഹരിജനപ്രസ്ഥാനത്തിന്റെ നേതാവായിരുന്ന രാമുണ്ണി മേനോന്റെ നേതൃത്വത്തിൽ മഹാത്മജിയെ സ്വീകരിക്കാൻ പോയ വാളണ്ടിയർമാർ ഒരു പാട്ടുപാടുകയുണ്ടായി. അന്നു ഹരിജനങ്ങൾ എത്രക്ക് തന്റേടത്തോടും ആത്മാഭിമാനത്തോടുമാണ് ജീവിക്കുന്നതെന്നു ആ പാട്ട് വ്യക്തമാക്കുന്നുണ്ട്. ആ പാട്ടിന്റെ രണ്ടു വരി മാത്രം ഞാൻ ചൊല്ലാം.

'അറിയാമീ ഞങ്ങൾക്കു നല്ലപോലെ
കരിയും കൈകൊട്ടുമെടുക്കാൻ പാടേ.'

ഞങ്ങൾക്ക് അദ്ധ്വാനിക്കാനറിയാം, വണ്ടുമുതൽക്കേ അറിയാം ഞങ്ങളുടെ വാസ്തവം, മററാളുകളെ ചൂഷണം ചെയ്യുന്നവരല്ല ഞങ്ങൾ, അതുകൊണ്ടു് ആത്മാഭിമാനത്തോടെ ഈ നാട്ടിൽ ജീവിക്കുവാനുള്ള അവകാശം ഞങ്ങൾക്കുണ്ട്, അതു എപ്പോഴും കവർന്നെടുക്കരുതു്, എന്നാണ് ആ പാട്ടിന്റെ മുരുക്കം. ആ ബോധം കൂടുതൽ കൂടുതൽ ഹരിജനങ്ങൾക്കുണ്ടാകേണ്ടതു് അത്യാവശ്യമാണ്. അതിനുപകരിക്കുന്ന ഒരു വിദ്യാഭ്യാസമാണ് അവർക്കു നൽകേണ്ടതു്.

* SRI P. G. KARUTHIRUMAN :—"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இப்போது இந்த ஹரிஜன முன்னேற்ற மானியத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் முதலாவதாக நமது எதிர்கட்சி உப தலைவர், அவர்கள் சொன்னது போல்—இது ஹரிஜனங்களை உயர்த்த, uplift-க்காக இருக்கவேண்டியது அவசியமில்லையென்று சொன்னார்கள். ஆனால் பொதுப்படையாக எடுத்துப் பார்த்தால், உயர்த்துவது என்றால், நம் தேசத்தில் எவ்வளவோ பிற்பட்ட வகுப்பினர்கள் இருக்கிறார்கள். அதாவது வறுமையை அடிப்படையாக வைத்துக்கொண்டால், இந்த ஜாதியில் தான் உயர்வு தாழ்வு என்று கிடையாது. வறுமையை அடிப்படையாக எடுத்துக்கொண்டால், நம் மாகாணத்தைப் பார்த்தால் பிற்பட்டவர்களில் மட்டுமல்ல, உயர்ந்த இனத்தவர்கள் இடையேயும், ஹரிஜனங்களை விட மோசமான நிலைமையில் பலர் இருக்கிறார்கள். ஆனால் இந்த ஹரிஜனங்கள், ஒரு தனி வகுப்பாக ஒதுக்கப்பட்டு கவனிக்கப்படாமல் இதுவரை இருந்த காரணத்தால், நாம் அவர்களுக்கு தனிச் சலுகைகள் கொடுக்கிறோம். அதை அவர்கள் உபயோகப்படுத்துவதற்கும் அவர்கள் நம் அனுதாபத்திற்கு பாத்திரமாக இருக்கிறார்கள். ஆண்டவன் படைப்பில் மனித சமுதாயத்தில் உயர்வு தாழ்வு என்பது கிடையாது. எல்லா மக்களும் ஒரே மக்கள்தான், எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்கவேண்டியதும் அவசியமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் தனியாக ஒதுக்கப்பட்ட காரணத்தால், ஒரு சமுதாயம் அதாவது ஜனத்தொகையில் நூற்றுக்கு இருபதுள்ள மக்கள் தனியாக ஒதுக்கப்பட்டிருப்பது பரிதாபகரமான விஷயம்தான். ஆனால் இன்னொன்று கவனிக்க வேண்டும். ஹரிஜனங்கள் பிற்பட்டவர்கள், தாங்கள் கவனிக்கப்படவில்லை என்று அவர்கள் ஏதோ பேசுகிறார்கள். அடிப்படையாக, ஹரிஜனங்களை கவனித்தால் அவர்களிடையே ஒற்றுமை குறைவாகத்தான் இருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளலாம். முதலில் அந்த பிற்பட்டவர்களிடம், ஒற்றுமை இருக்கிறதா என்றால், மிகவும் வருந்தும்படியான நிலைமையில்தான் இருக்கிறது. மந்திரி அவர்கள் எந்தெந்த ஹரிஜன சேரியில் குறைந்தது மனிதனுக்கு அவசியமான தண்ணீர் வசதி செய்ய வேண்டுமென்றும், எங்கெங்கு தண்ணீர் வசதி இல்லையோ, அந்த இடங்களில் குடி தண்ணீர் கிணறுகள் தோண்டுவதற்காக சுற்றறிக்கையும் அனுப்பினார்கள். குடி தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் கிணறுகள் வேண்டுமென்று கேட்பார்கள். கிராமங்களில் ஹரிஜனங்களில், அருந்ததிய ஹரிஜனங்கள் என்றும், பல்லவர்கள், வேடர்கள் என்றும் பல வகுப்புகள் இருக்கிறார்கள். ஒருவர் பொருளை இன்னொருவர் தொடக்கூடாது. குடி தண்ணீர் இருந்தும் சில இடங்களில் உபயோகப் படாமல் இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும், அருந்ததியர் ஹரிஜனங்கள் தனிக் கிணறு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பல்லர்கள் இன்னொரு தனி கிணறு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவர்கள் பிற்பட்டவர்கள், இவர்களிடையேயுள்ள தீண்டாமை ஒழித்துக்கொண்டார்களா ? வேடர்களைத் தொட்டுவிட்டால், வேறு ஒருவரைத் தொடுவதில்லை. இப்படி, இவர்களுடைய முன்னேற்றத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி இருந்தாலும், இங்கு இருக்கும்

[Sri P. G. Karuthiruman] [11th March 1955

பிற்பட்டவர்கள், அதைப் பரிபூரணமாக உபயோகித்துக் கொள்வதில்லை. இங்கு பேசுவதை விட, முதலாவதாக, ஆங்காங்கு இருக்கும் பிற்பட்டவர்கள் அனைவரையும் ஒன்ருக இருக்க ஒரு வழி காணவேண்டுமென்று சட்ட சபையிலுள்ள M.L.A.-க்களை கேட்டுக்கொள்ளுகிறேன். உயர்ந்த ஜாதிக்காரர்கள், இவர்களை அனுமதிக்கவில்லை, கௌரவிக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். ஆனல் இவர்களிடையேயுள்ள குறைபாடுகளை இவர்கள் முதலில் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக கல்வி விஷயத்தில், பல புள்ளிவிவரங்களைச் சொல்லி குறை கூறுகிருர்கள். ஹரிஜனங்களுக்கு விகிதாசார இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது குறைவு. மற்றும், அந்த இடங்கள் பூராவும் தங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்று சொன்னுர்கள். வந்த ஹரிஜனங்களுக்கு இடமில்லை என்று சொல்லி பிற்பட்ட வகுப்பினருக்கு சலுகை அளிக்கவில்லை. பத்து பேர் ஹரிஜனங்கள் படிக்க வரவேண்டுமென்ருல் ஏழுபேர்தான் வருகிருர்கள். ஆக, ஹரிஜனங்களுக்குப் போக, மிச்சம் உள்ளதைத்தான் பிற்பட்ட வகுப்பினருக்கு சர்க்கார் கொடுக்கிறது. ஹரிஜனங்களை புறக்கணித்து, அவர்கள் இடங்களை மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. ஆகவே பொருளாதாரத்துறையில், மற்றும் முக்கியமானதுறையில் முன்னேற்றம் அடையவேண்டுமென்ருல்—விவசாயத்தொழில் செய்பவர்கள் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள் தான். கிராமத்தில் விவசாயம் சிறப்பாக நடப்பதற்குக் காரணம் ஹரிஜனங்கள்தான். எல்லாப் பண்ணைகளிலும் குடியானவர்களில் ஒரு பகுதியினர் விவசாயத்தொழில் செய்யும் ஹரிஜனங்கள்தான் இருக்கிருர்கள்—இவர்கள் சர்க்காரிடமிருந்து, சலுகையாக பொருளாதாரவகையில் உதவி எதிர்ப்பார்ப்பதைவிட, யாரிடத்தில் அவர்கள் வேலை செய்கிருர்களோ—அதாவது மிராசுதார்கள், பண்ணைகள் இருக்கிருர்கள்—இவர்கள் தாராள மனதுவைத்து மனித சமுதாயத்தின்மேல் அன்புவைத்து, ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடையவேண்டுமென்று பொருளாதார உதவி செய்தால், நல்லமுறையில் முன்னேறலாமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடிப்படையாக சாக்கார் என்ன செய்யவேண்டுமென்ருல், முதலாவதாக, ஹரிஜனச் சேரிகளில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களுடைய குடியிருப்பு இடம், அவர்களுக்கே சொந்தமாக்கச் சட்டம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நேரடியான அனுபவம் கிடையாது என்பது கன்ம மந்திரியார் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அக்கறையுடன் பாடுபட்டதால் என்னுடைய தொகுதியில் ஒரு இடத்தில் ஹரிஜனங்களுடைய உரிமை பாதுக்காக்கப்பட்டது. எருமைமக்காரபுதூரில் ஹரிஜனங்கள் பணக்காரர்களுக்கு கைஆட்களாகத்தான் இருக்கிருர்கள். ஹரிஜனங்கள் சக்தி உடையவர்கள்தான். அந்த ஊரிலே ஒரு தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலின் ஒரு காரணமாக முக்கியவிஷயம் நடந்தது. சாதாரணமாக ஒருவர் ஒரு இடத்தை, பத்து அல்லது 12 வருஷங்களுக்கு மேல் உபயோகப்படுத்திக்கொண்டிருந்தால், சர்க்கார் அந்த இடத்தை அவருக்கு பட்டாசெய்து, acquisition செய்து கொடுக்கவேண்டியது நியாயம். அந்த ஊர் மிராசுதாரின் நிலையத்தில், ஹரிஜனங்கள், 50, 60 வருஷங்களாக குடி இருக்கிருர்கள். அந்த இடம், ஜனங்கள் வசிக்க லாயக்குள்ளது என்று Health Officer சர்டிபிகேட் கொடுத்தால், அந்த நிலத்தை அந்த ஹரிஜனங்களுக்கு வாங்கிக் கொடுக்கமுடியும். ஆனல் அந்த மிராசுதார் சின்ன Health Officer இடம் சொல்லி அந்த இடம் குடியிருக்க லாயக்கில்லை என்று எழுதச் சொன்னுர். Health ஆபீசரும் அந்த இடத்தில் நான்கு வண்டி குப்பையைக் கொட்ட ஏற்பாடு செய்து அந்த இடம் ஜனங்கள் வசிக்க லாயக்கில்லை என்று எழுதிவிட்டார். மறுபடியும் ஜில்லா Health Officer-யை கூட்டிவரச்செய்து அந்த இடம் வசிக்க லாயக்குள்ளது என்று எழுதினதின்பேரில் அந்த இடம் ஹரிஜனங்களுக்கு வாங்கித் தரப்பட்டது. ஆகவே ஹரிஜனங்கள் எங்கெங்கு குடியிருக்கிருர்களோ, அந்த இடங்களெல்லாம் அவர்களுக்கு சொந்தமாக்க ஏற்பாடு செய்தாகவேண்டும். என்னுடைய தாலுக்காவில் ஹரிஜன் ஹாஸ்டல் நடத்தப்படுகிறது. அதிலே 110 ஹரிஜன மாணவர்கள் இருக்கிருர்கள். அதை நடத்துபவர் ஹரிஜன் அல்ல. ஹரிஜன் அதை நடத்தி இருந்தால் ரொம்ப நாளைக்கு முன்பே அது மூடப்பட்டிருக்கும். அதற்கு கணக்கு வைத்து, நிர்வாகம் நடத்துபவா, உயா ஜாதிக்

11th March 1955] [Sri P. G. Karuthiruman]

காரரான பிராமணர். அவர் ஆயிரக்கணக்கான ரூபாய் போட்டு அதை நடத்துகிறார்கள். நம் மாகாண ஹரிஜன் ஹாஸ்டல்களில் அதுவும் ஒன்று. அப்படி இருக்கும்போது, மனித சமூகத்தில் பிறவியில் உயர்ந்த ஜாதி. தாழ்ந்த ஜாதி என்பது கிடையாது. பொருளாதார அடிப்படைதான் அவ்வித வித்தியாசங்கள் இருப்பதற்குக் காரணம். இந்த நிலையிலே நம் தேசத்தில் மகாத்மா காந்தி வழியில் வந்திருக்கும் காங்கிரஸ் மகாசபை எவ்வளவு பெரிய முன்னேற்றம் ஹரிஜனங்களுக்கு கொண்டுவந்திருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் கொண்டு வந்திருக்கிறது. ஹரிஜன சகோதரர்கள் அதை சரியானபடி உபயோகப் படுத்திக்கொள்ளவில்லை."

*SRI SAMIA KOORAYAR :—"கனம் உப சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மான்யத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அனேக அங்கத்தினர்கள் அதைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். ஹரிஜனங்களுக்கு மனை அடமானம் செய்வதைப்பற்றி நான் வெகுகாலமாக பல தலைவர்களுடன் பேசி மனவருத்தம் அடைந்ததைத் தவிர, காரியம் பிரயோஜனப்படவில்லை. ஹரிஜனங்கள் இருக்கும் இடத்தை அவரவர்களுக்கே கொடுத்து, கடனை ரத்து செய்து, 'பண்ணையாள்' முறையையும் எடுத்துவிட்டால் அவர்களுடைய நிலைமை வெகுதூரம் மாறிப்போகும். நான் ஏதோ முயன்று பார்த்தும் அது பிரயோஜனப்படவில்லை. சென்ற வருஷத்திலே பண்ணையாள் சட்டம் வந்தபோதுகூட 'இது அமுலுக்கு வருவது கஷ்டம். அவரவர்கள் வசிக்கும் மனையை அவரவர்களுக்குக் கொடுத்து, அவரவர்கள் பட்ட கடனையும் ரத்து செய்துவிட்டு, பண்ணையாள் முறையையும் எடுத்துவிட்டால் மிகவும் உபயோகமாக இருக்கும்; அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதை அவர்களே பெற்றுக்கொள்ளமுடியும்' என்று அங்குள்ள தலைவர்களைக்கண்டு பேசியும் முடியாமல் வியர்த்தமாகிப் போய்விட்டது. ஹரிஜனங்கள் வசிக்கும் இடத்தை அவரவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையில் ஒவ்வொரு பட்ஜட் பிரசங்கத்திலும் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆனால் ஒருவித பிரயோஜனமும் ஏற்படவில்லை. 'டெல்டாப் பிரதேசத்தில் மனை இல்லை, ஆகையால் கொடுக்க முடியவில்லை' என்று சொல்லி வருகிறார்கள். கொடுக்கப்பட்ட இடத்திலேயும் அவர்கள் ஏற்கெனவே இருந்த இடத்திலிருந்து இத்தனை வருஷங்களாக குடியேறாமல் பாழாக இருக்கிறது. அவர்களை குடியேற்றக் கூடியது அசாத்தியம். தலைமுறை தலைமுறையாக இருந்தவர்களை வெளியேற்றி புதிதாகக் குடியேற்றுவது அசாத்தியம். அந்த இடத்தை அவரவர்களுக்கே அடமானம் செய்வது நல்லது. எவ்வளவு கெடுதலாக இருந்த இடமாக இருந்த போதிலும் பரம்பரையாக இருந்தவர்களுக்கு அந்த இடத்தை விட்டுப் போவது என்றால் மனக்கஷ்டந்தான் ஏற்படும். அதை அவரவர்களுக்கே கொடுத்துவிடலாம். நஷ்டாடு கொடுத்து எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், அந்த நிலம் வெகுகாலமாக அவர்களிடம் இருந்தது. இது விஷயத்தில் தைரியமாகக் காரியத்தைச் செய்யவேண்டும். வெகுகாலமாக ஸ்வாதீனத்தில் இருந்துவந்த மனைகளை அவரவர்களுக்கே பட்டா செய்துகொடுப்பது நல்லது என்று மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். 4-50 p.m.

"ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிதண்ணீர் வசதியும், ரோடு வசதியும் அவசியம். சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் ஆகிய வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்ட இடங்களிலாவது உடனடியாக குடிதண்ணீர் வசதியும், ரோடு வசதியும் அவசியம் செய்து கொடுக்கவேண்டும். எந்தக் கிராமத்தில் திட்டம் வகுத்தாலும் முதலாவது மேற்கூறிய வேலைகளை எடுத்துக் கொண்டு பிறகுதான் மற்ற காரியங்களைச் செய்யவேண்டும் என்ற ஒரு ஏற்பாடு இருந்தால் வெகுசீக்கிரமாக காரியங்கள் முடிந்துவிடும்.

"ஹரிஜனங்கள் உழுது பயிரிடுவதற்கு நிலம் கிடைக்கவேண்டியது அவசியம். ஒவ்வொரு கிராமத்திலும் எண்டோமெண்டுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்த நிலம் ஹரிஜனங்களுக்கு குத்தகைக்கோ

[Sri Samia Koorayar] [11th March 1955

வாடகைக்கோ கிடைக்கும்படிச் செய்தால் அந்த ஏற்பாடு மிகவும் பொருத்தமாக இருக்கும். சமீபத்தில் கொண்டுவரப்படும் என்று சொல்லப் படுகிற நிலச் சீர்திருத்தத்தில் ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது அந்தந்த கிராமங்களிலுள்ள நிலங்களில் மூன்றிலொரு பகுதியை வாரச் சாகுபடிக்கோ, குத்தகைச் சாகுபடிக்கோ ஒதுக்குவது நல்லது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பண்ணையாள் முறையை எடுத்து விடுவதும், குடியிருக்கும் மனைகளை அவரவர்களுக்கே விட்டுவிடுவதும் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். இதே அபிப்பிரா யத்தை நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். இந்தத் தடவை தமிழ்நாடு காங்கிரஸ் நியமித்த நிலச்சீர்திருத்த கமிட்டியார் இதே அபிப் பிராயத்தை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பதிலே ரொம்ப திருப்தி. (இச்சமயத்தில் கனம் சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்.)

"மேலும் ஹரிஜனங்களுக்குப் பொருளாதார வசதியினால் சமுதாய அந்தஸ்து அதிகமாக வந்துவிடுமா? சமுதாய அந்தஸ்து ஏற்பட்டால் பொருளாதார அந்தஸ்து ஏற்பட்டுவிடுமா என்பது ரொம்ப காலமாக சர்ச்சையில் இருந்துவருகிறது. சமுதாய அந்தஸ்து பலமாக இருந்தா லொழிய எவ்வளவுதான் பொருளாதார அந்தஸ்து ஏற்பட்டாலும் அவர் களை முன்னேற்ற முடிவது கஷ்டம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஜாதி இந்துக்களில் எவ்வளவோ பேர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் அவர்களிலும் எவ்வளவோ பேர்கள் வறுமையில் இருந்துகொண்டுதானே இருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஹரிஜனங்களுடைய நிலைமை அப்படி அல்ல. ஜாதி இந்துக்களில் வறுமையாக இருக்கிறார்கள் என்று சொன் னால் வேலை செய்வது கேவலம் என்ற மனப்பான்மை அவர்களுக்கு இருப்பதுதான் அவர்கள் கீழ் திசையில் இருப்பதற்குக் காரணம். ஹரி ஜனங்கள் பொதுவாக எப்பொழுதும் வேலை செய்துகொண்டிருப்பதினால் சமூக அந்தஸ்து உயர்ந்திருந்தால் அவர்கள் முன்னேறிவிடமுடியும். ஆகவே, சமுதாய அந்தஸ்திலே அதிகமான சலுகை காட்டவேண்டும். அதற்குப் படிப்பு முதலான வசதி இருந்தால்தான் முடியும். அந்த வசதி இயற்கையிலேயே இருக்கவேண்டும். இதுவரை தடைகள் அதிகமாக இருந்துவந்ததினால் ஹரிஜனங்கள் முன்னேறமுடியாமல் போய்விட்டது.

"நமது தேசத்தின் அரசியல் சட்டத்தை உண்டாக்கியவர் மத்திய சர்க்காரில் மந்திரியாக இருந்த ஸ்ரீ அம்பேத்கார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவரை ஒரு காலத்தில் பரோடா மகாராஜா படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவந்தபடியினால் அவர் அந்த அந்தஸ்துக்கு வரும்படியாக ஆய்விட்டது. அம்மாதிரி வசதி ஒவ்வொருவருக்கும் ஏற் பட்டிருந்தால் இதுவரையில் ஹரிஜன சமூகம் எவ்வளவோ தூரம் முன் னுக்கு வந்திருக்கும். ஆகையால், அரசாங்கம் இது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்து, அதற்குத் தகுந்த சட்டத்தைக் கொண்டுவந்து பிற்பட்ட மக்களையும், ஹரிஜன மக்களையும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

4-7 p.m. *SRI T. MANAVALAN :—"கனம் சபாநாயகர் அவர்களே, நமது ஹரிஜன நல முன்னேற்ற மந்திரி அவர்கள் சபைமுன் கொண்டு வந்த மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசவிரும்புகிறேன். சென்ற வருஷங்களைக் காட்டிலும் நடைமுறை வருஷத்திற்கு சுமார் ஒரு கோடி ஒன்பது லட்ச ரூபாய் தொகையை ஹரிஜன முன்னேற்றத்திற்கா கவும், பிற்பட்ட சமூகத்தினர் முன்னேற்றத்திற்காகவும் ஒதுக்கியிருப்பதற்கு நான் ஹரிஜனங்களின் சார்பாக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"கிராமங்களிலும், சேரிகளிலும் குடிதண்ணீர் வசதிக்கு நம்முடைய அரசாங்கம் இப்பொழுது ஒரு திட்டத்தை வகுத்து அமுல் நடத்த ஏற்பாடு செய்துவருகிறார்கள். அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். சேரிகளில் எங்கெங்கு குடிதண்ணீர் வசதி இல்லையோ அங்கெல்லாம் உடனடியாக

11th March 1955] [Sri T. Manavalan]

கிணறு தோண்டப்படவேண்டுமென்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். பதினைந்து குடும்பங்கள் இருந்தாலுங்கூட அந்தச் சேரியில் கிணறு வெட்ட வேண்டுமென்று கனம் மந்திரி அவர்கள் திட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன்.

"ஹரிஜனங்களுடைய கல்வி முன்னேற்றத்திற்காக உபகாரச் சம்பளமாகவும், புத்தகம், துணி முதலியவற்றை வாங்குவதற்கு அரசாங்கம் செலவு செய்துவருகிறது. கல்லூரி மாணவர்கள் பெரும் பலன் அடைந்துகொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் அதிகப்படியான மாணவர்கள் கல்லூரியில் படித்துவருவது அதிகரித்துக்கொண்டு வருகிறது. கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் பாதிப்பேருக்குத்தான் ஒவ்வொரு வருஷமும் உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. பாதி மாணவர்கள் உபகாரச் சம்பளம் கிடைக்காமல் ஏமாற்றமடைகிறார்கள். கல்லூரியில் படிக்கும் எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளம் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டுகள், சுடுகாடு, ஊருக்கும் சேரிக்கும் பாதைகள் போன்ற பல காரியங்களை தாமதமில்லாமல் செய்து கொடுத்து அவர்களுடைய நிலைமையை முன்னேற்றினால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"ஹரிஜன மக்கள் பெரும்பாலும் விவசாயத்தொழிலில் ஈடுபட்டு வாழ்கிறபடியினால் சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களையும், காட்டு இலாகாவின் கீழுள்ள பிரயோஜனமற்ற நிலங்களையும் நிலமில்லா ஹரிஜனங்களுக்குப் பட்டாசெய்து கொடுத்தால் அதன்மூலமாக ஹரிஜனங்கள் ஓரளவு பயிர்செய்து அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்திக் கொள்ள ஏதுவாக இருக்கும். ஆகையால் அவர்களுக்கு தரிசு நிலங்களை உடனடியாகப் பட்டாசெய்து கொடுக்கும்படியாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக சர்க்கார் ஹரிஜனங்களுக்கு உத்தியோகம் வழங்குவதில் அதிகப்படி சலுகை அளித்திருப்பதைப் பாராட்டுகிறேன். தகுதி, திறமை என்ற முறையில் ஹரிஜனங்களுக்கு பிரத்தியேக சலுகை காட்டி அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பிரதிநிதித்துவத்தை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 5 p m.

"அடுத்தபடியாக நமது அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்துகொண்டு வருகிறது என்பது கிராம மக்களுக்கு தெரிவது கிடையாது. அதனால் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்ய உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். எனவே அரசாங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலும் பிரசாரகர்களை ஏற்படுத்தி ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் என்னென்ன செய்துக்கொண்டு இருக்கிறது என்பதை கிராம மக்களுக்கு அறிவிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

"என்னுடைய தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு ஜில்லாவில் ஆயிரக்கணக்கான ஹரிஜனங்கள் தோல் பதனிடும் தொழிலாளர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மற்ற இனத்தாரால் பயன்படுத்தபடுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு வேண்டிய ஊதியம் சரியாக கிடைப்பதில்லை. அவர்கள் கேவலமான நிலையில் வாழ்ந்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களின் கேவல நிலைமையைப் போக்குவதற்கும், அவர்கள் முன்னேறுவதற்கும், அரசாங்கம் மூலமாக ஒரு கூட்டுறவு தோல் பதனிடும் தொழிறசாலையை எங்கெங்கே ஏற்படுத்த முடியுமோ அங்கங்கே ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் அதனால் பயன் அடைவார்கள்.

"ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு லேபர் ஆபீசரை நியமித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான வேலைகள் இருப்பதால் அவர்கள் எல்லாக் காரியங்களையும் சரிவர கவனிக்கமுடியாமல் போகிறது. அவர்கள்

பல ஆஸ்டல்களை பார்வையிடவேண்டும், பல பள்ளிக்கூடங்களைப் பார்வையிடவேண்டும் என்று இருந்தபோதிலும் அவர்கள் ஒரு சில அத்தியாவசியமான வேலைகளை கவனிக்கமுடிகிறதேயொழிய அவர்கள் தங்களுடைய வேலைகளையெல்லாம் பூரணமாக முடிக்கமுடியாமல் போகிறது.

"ஆகையால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் எல்லா வேலைகளையும் அப்போதைக்கப்போது உடனடியாக கவனிப்பதற்கு ஒரு ஜீப்போ, ஒரு காரோ அவர்களுக்கு வழங்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய முழு வேலைகளையும் கவனிக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கு சம்பளம் ஒவ்வொரு மாத முதல் தேதி அன்று வருவது கிடையாது. இரண்டு மூன்று மாதத்திற்கு அப்பால்தான் அவர்களுக்கு கிடைக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் போதிய குமாஸ்தாக்கள் இல்லையென்று சொல்லப்படுகிறது. குமாஸ்தாக்கள் இல்லையென்பதால் கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழை ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் சர்க்கார் அந்த சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் முதல் தேதியாகிலும் அல்லது ஒவ்வொரு மாத முதல் வாரத்திலாகிலும் ஆசிரியர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

5-05 p.m. * SRI T. S. ARDHANARI :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன். சட்டசபையிலே ஹரிஜனங்களின் முன்னேற்றத்தைப் பற்றி காலை பிலிருந்து இதுவரை பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். எல்லோரும் ஒரு விஷயத்தை அதிகமாக வற்புறுத்தி இருக்கிறார்கள் என்பதை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது ஹரிஜனங்களின் பண்ணை அடிமைத்தனத்தை ஒழிக்கப்படவேண்டும் என்பதுபற்றி அதிகமாக வற்புறுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு சுதந்திரமாக வாழவேண்டும் என்று ஹரிஜனங்கள் போராடி அவர்களுடைய மனித பலத்தை பொருட்படுத்தாமல் இருந்தாலும் கூட. ஜாதி இந்துக்களின் பொருளாதார பலத்தைக்கொண்டு அவர்களை அடிமைப்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு குடிதண்ணீர் வசதிகள் குடி இருக்கும் இடங்களில் இல்லாததினால் ஜாதி இந்துக்களுக்கு அடிமைப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அவர்கள் அடிமைத்தனத்திலிருந்தும், ஜாதி இந்துக்களின் கொடுமைகளினின்றும் விடுபடவேண்டுமென்றால், ஹரிஜனங்களுக்கு படிப்பு சொல்லிக்கொடுப்பதாலும், ஏதோ சில உத்தியோகங்களை அவர்களுக்கு கொடுப்பதாலும் ஹரிஜனங்களின் பிரச்னை தீர்ந்துவிடாது. பொதுவாக ஒரு தொழில் நடத்துவதற்கு வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்தில் ஹரிஜனங்கள் பெரும்பாலோர் நெசவுத் தொழில்களில் ஈடுபட்டிருப்பதால் அவர்கள் வீடு வாசல்களை சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருக்கிறார்கள். அந்த கிராமத்தில் அவர்களுடைய வீடுகளைப் பார்க்கும்போது, ஹரிஜனங்களுடைய வீடா என்று சந்தேகிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இதற்கு காரணம் அவர்கள் செய்யும் தொழில்தான்.

"இன்றைக்கு நகரத்தில் இருக்கும் தொழிற்சாலைகளில் ஹரிஜனங்களுக்கு முதலிலே வேலை கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டம் இருக்குமானால் நிச்சயமாக அவர்களுடைய பொருளாதார நிலை மேம்பட்டு அவர்கள் நல்ல நிலைமையில் வாழ்க்கையை நடத்த முடியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

"சாதாரணமாக கிராமாந்திரங்களில்தான் இந்தத் தீண்டாமை அதிகமாக கவனிக்கப்படுகிறதே யொழிய, நகரங்களில் அவ்வளவாக கவனிக்கப்படுவதில்லை. கனம் அங்கத்தினர் கருத்திருமன் சொன்னது போல் ஹரிஜனங்களிடத்திலேயே ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. பள்ளர், பறையர், சக்கிலியர் என்ற பாகுபாடுகள் இருக்கின்றன. ஜாதி இந்துக்களின்

11th March 1955] [Sri T. S. Ardhanari]

தொந்திரவுகளும் அதிகமாக இருக்கின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுவாக தண்ணீர் வசதிகள் இருக்கக்கூடிய இடத்திலும்கூட இம்மாதிரி அவர்களுக்குள் சச்சரவு ஏற்படுகின்றன. உதாரணமாக மோடமங்கலம் கிராமத்தில் சக்கிலியர் கிணற்றில் தண்ணீர் அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால் அங்கு இருக்கும் ஆதித்திராவிடர்களுக்கு தண்ணீர் கிடையாது. அவர்கள் தண்ணீர் மொண்டுகொள்வதற்கு வந்தால் பெரிய ரகளைத்தான் எற்படுகிறது. இதைக் கலெக்டருக்குத் தெரியப்படுத்தினால் அதற்கு அவர்கள் அந்த கிணற்றில்தான் தண்ணீர் மொண்டுகொள்ளவேண்டும், இல்லையென்றால் சும்மா இருங்கள் என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரியான பாகுபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு அந்தந்தத் தொகுதி ஹரிஜன எம். எல். ஏ.க்களும், மற்ற எம். எல். ஏ. க்களும் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.''

DR. SRIMATHI SOUNDARAM RAMACHANDRAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கும் ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷத்தை விட இந்த வருஷத்திய வரவுசெலவுத் திட்டத்தில் அதிகமான தொகை ஒதுக்கியிருப்பதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் இந்தத் தொகையைப்பார்த்து இது போதுமா என்று கேட்டால் இது கொஞ்சம்கூட போதாது என்று தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சாதாரணமாக ஹரிஜனங்களும் பிற்பட்ட வகுப்பினரும் மனித சமுதாயத்தில் முன்னேற வேண்டுமானால் சம அந்தஸ்தும் பொருளாதாரத்தில் முன்னேற்றமும் காணவேண்டும். ஒரு நாணயத்திற்கு எப்படி இரண்டு முகங்கள் முக்கியமாக இருக்கின்றனவோ அம்மாதிரியாகவே ஒரு சமுதாயத்திற்கு சம அந்தஸ்தும் பொருளாதார முன்னேற்றமும் அத்தியாவசியமாக இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"வெகு நாளாக முயற்சிசெய்து இப்போது சர்க்கார் அனுமதி 5-10 p.m.
எப்படி கிடைத்திருக்கிறது என்றால் 750 ரூபாய்க்கு வீடு கட்டினால் அப்படி கட்டப்படுகிற வீட்டுக்கு 75 சத விகிதம் உத்தரவாதம் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு நாம் வீடு கட்டுவதற்காக ஒவ்வொரு வருஷமும் சில கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் அந்த சொல்படிக்கு தொகைசெலவழிக்க முடியாமல் இருப்பதற்கு காரணம் அவர்களுக்கு ஈடுகட்டுவதற்கு, 500 ரூபாய் வீடு வேண்டுமானால், 700 ரூபாய், 1,000 ரூபாய் ஈடுகட்ட வேண்டிய சொத்து அல்லது இன்னொருவர் ஜாமீன் இருக்கவேண்டும். இதற்கு யார் முன் வர முடியும். வீடே இல்லாதவர்களுக்கு அடமானம் காட்டுவது போல ஈடு கட்டுவதற்கு சொத்து எங்கேயிருந்து வரும் சமுதாய நலத்திட்டப்படி கொடுக்கப்படுகிற கடன், உதாரணமாக 750 ரூபாய் வீடு கட்டுவதற்கு கடன் கொடுத்தால் 75 சத விகிதம் வீட்டை பாக்கியாகவிட்டு, கடைசியாக மண் சுவர்வைத்து கூரையை போட வேண்டியிருக்கிறது. 25 சத விகிதம் அவனே அல்லது அவனை சேர்ந்தவர்களோ Collateral security கொடுக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் மற்ற கடன்கள் கொடுக்கப்படுவது போல் கணிசமான தொகையை ஹரிஜன மக்கள் வீடு கட்டுவதற்கு என்று சர்க்கார் ஒதுக்கி வைக்க வேண்டும். Industrial labour-க்கு வீடு கட்ட திட்டம் இருக்கிறது. அதை குறைக்கச் சொல்லவில்லை, அதுபோல சில லட்ச ரூபாயை ஹரிஜன மக்களுக்கு ஒதுக்கிவைத்து, 5 வருஷத் திட்டத்திற்குள்ளே இத்தனை ஆயிரம் வீடுகள் கட்டவேண்டும், இத்தனை கிராமங்களில் முயற்சி எடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே precedence இருப்பதைப் போல், இதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஹரிஜனங்கள் என்று சொல்லும் போது பிற்போக்கு வகுப்பினரையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். பரம ஏழையாக வீடு இல்லாதவர்களாக இருந்தால் எந்த ஜாதியானாலும் அவர்களுக்கு இந்த மாதிரி திட்டத்தில் வசதி செய்து கொடுக்கலாம். இன்னும் ஒன்றுப் பொருளாதார பிரச்னை ; பொருளாதார பிரச்னை என்று

[11th March 1955

[Dr. Srimathi Soundaram Ramachandran]

நான் சொல்லும்போது, ஹரிஜனங்களில் 100-க்கு 99 பேர் விவசாயக் கூலிகளாக அல்லது சிறு குத்தகைக்கு விவசாயம் செய்பவர்களாக இருக்கிறார்கள், அது ஒழிய வேண்டுமென்றால், தேவஸ்தானம் மற்றும் பெரும் நிலங்கள் எல்லாம் நடுத்தர மனிதர்களிடம் இல்லாமல் நேரிடையாக குத்தகைக்கு விடுவதோடு மட்டுமல்லாமல், ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் அதில் 5 வருஷம், 10 வருஷம் என்று tenancy guarantee கொடுத்தால் தான் அவர்களுடைய பொருளாதார நிலை சீர்படும். இது பொருளாதார பிரச்னை மட்டுமல்ல, நில பிரச்னையும் சேர்ந்தது. நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக சீக்கிரம் சட்டம் வரும் என்று எதிர் பார்ப்பவர்களில் நானும் ஒருவள்.

"அடுத்தபடியாக அனேக சமயத்தில் நாங்கள் கேள்விப்படுகிறோம் கமிட்டி கூட்டங்களிலும் வருகிறது. ஹரிஜனங்களுக்கு ஸ்மாசனத்திற்கு இடம் கொடுக்க வேண்டும், வழிவிட வேண்டுமென்றும் கேட்கப்படுகிறது, எல்லோருக்கும் எல்லா விதத்திலும் சம உரிமை என்று சட்டம் செய்திருக்கிறோமே, மயானத்திற்கு மட்டும் சட்டத்திலிருந்து விதி விலக்கா? அவர்கள் மயானமும், மற்றவர்கள் மயானம் இருக்கும் இடத்திலேயே இருக்கவேண்டும் அவர்களுக்கு தனி வழி, தனி இடம் என வைக்கவேண்டும். இறந்த பின் மனிதர்களுக்கு அதிக மரியாதை கொடுக்க வேண்டியிருக்க இந்த மயானப பிரச்னை எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இது ஒழிய வேண்டும். சர்க்கார் மற்றவற்றிக்கு சட்டம் செய்து இருப்பதுபோல், இந்த சட்டத்திலும் ஒரு ஷரத்து சேர்க்க வேண்டும். தனி மயானம் கூடாது, தனி வழி கூடாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். எம்.எல்.ஏ.க்கள் இங்கு சொல்வதோடு இல்லாமல், செய்கையில் இயக்கிக் காட்டவும், தங்களுடைய தொகுதியில் பிரசாரம் செய்யவும் முன் வரவேண்டும். இது ரொம்ப அவசியமாக செய்ய வேண்டிய பிரச்னை. இறந்த பின்னும், ஜாதி மனப்பான்மை காட்ட வேண்டாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

"அடுத்த படியாக படிப்பு சலுகைகளுக்கு வரும்போது, படிப்பினால் மட்டும் சம அந்தஸ்து கிடைக்காது என்றாலும் படிப்பு இன்றியமையாதது. சக்கிலியர்கள், குறவர்கள், ஆதித்திராவிட வாசிகள் இவர்கள் பொருளாதார விஷயத்திலும் அதோடு படிப்பு விஷயத்திலும் மிகவும் பிற்போக்காக இருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்குள் ஹரிஜனங்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதிலும் சக்கிலியர்கள் என்றால் அவர்கள் தொழில் விவசாயிகளுக்கு அவசியமான தொழிலாக இருக்கிறது. ஆகையால் எங்கெங்கேயெல்லாம் தோல் பதனிடும் சாலைகள் நவீன முறையில் Drudgery இல்லாமல் நல்ல விதத்தில் ஏற்படுத்த முடியுமோ அங்கங்கே அவைகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். கைத்தொழில்களுக்கு பல வளர்ச்சித் திட்டங்கள் இருக்கின்றனவே, அதைப்போன்று கிராமம், கிராமமாக செய்ய வேண்டும். கிராமத்தில் விற்பனையாகும் பண்டங்களை உற்பத்தி செய்ய தொழில்சாலையிருந்தால், பெரம்பூர் முதலிய இடங்களில் அவர்கள் கஷ்டமான வேலைகளைச் செய்யவோ, அல்லது அவர்கள் கஷ்டங்களை கவனிக்க அதிகாரிகளோ இருக்கவேண்டிய அவசியமிருக்காது. இந்த தொழில்சாலைகள் எல்லாம் கூட்டு முறையில் அமுல் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது கூட்டு முறையில் Co-operative Society-ல் எவ்வளவு கஷ்டம் வந்திருக்கிறது என்று இப்போது தான் ஒருவர் சொன்னார். எழுதப்படிக்க தெரியாத சக்கிலியர்கள் கூட்டு முறையில் தோல் பதனிடும் அளவுக்கு முன்னேற்றம் அடைய இன்னும் சில வருஷங்கள் ஆகும். ஆதலால் சர்க்கார் மேற்பார்வையில் இந்த மாதிரி கைத்தொழில்கள் வளர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"படிப்புக்கு வரும் போது, ஹரிஜனங்கள் 100-க்கு 100 பிற்போக்கானவர்கள் என்று சொல்ல விரும்புகிறேன். சக்கிலியர்கள் இன்னும் பிற்போக்காகயிருக்கிறார்கள். குறவர்கள், ஆதிவாசிகள் இவர்கள் 10 பேர் ஹாஸ்டலில் இருந்தாலும் 10 பேருக்கும் stipend கொடுக்க வேண்டுமே தவிர,

11th March 1955] [Dr. Srimathi Soundaram Ramachandran]

10 பர்செண்ட், 8 பர்செண்ட் என்று எல்லாம் இந்த பிற்போக்கான ஹரி ஜனங்களுக்கு சொல்லக்கூடாது. அவர்களில் படிப்பவர்கள் ரொம்ப சொற்பமாதலால் அவர்களுக்கு தனியாக வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றும் சொல்ல விரும்புகிறேன்."

"பிற்போக்கு வகுப்பினர் பற்றி பேசும்போது, நான் சில விஷயங்களை சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது ஜாதிகளை பற்றி அதிகமாக தெரிந்து கொண்டு வருகிறேன். வண்ணார்கள், மருத்துவர்களில் பெண்கள் படித்து முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் கிடையாது. வண்ணார ஜாதியில் ஒரே ஒரு Intermediate girl–ஐ நான் பார்த்திருக்கிறேன். புருஷர்களில் சில Graduates பார்த்திருக்கிறேன். அந்த மாதிரி சமுதாய மக்கள் எவ்வளவு பேர் படிக்க வந்தாலும், சலுகை கொடுக்கவேண்டும். பிற்போக்கு வகுப்பினர் list-ஐ பார்த்தால் கள்ளர்கள், தேவாங்கர்கள் என்று வேறு மேல் ஜாதியே இல்லை என்ற அளவுக்கு நிறைய இருக்கிறது. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள், பிற்போக்கு ஜாதிகள் மொத்தத்தில் 80 சத விகிதம் என்று சொல்லுகிறோம். அப்படி சொல்லும் போது எத்தனை ரூபாய் செலவழித்தாலும், சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் போலத்தான் இருக்கும். பிற்போக்கு வகுப்பினருக்கு வாயில்லாததால், அவர்களுக்கு சண்டை போட்டு கேட்பதற்கு தெரியாது. ஆகையால் அவர்களுக்கு கல்வியிலும் மற்ற விதங்களிலும் ஹரிஜனங்களுக்கு கொடுக்கிற சலுகைகளை அவசியமாக கொடுக்கப்படவேண்டும். அதற்காக அவர்களை Scheduled Caste list–ல் வைக்கவேண்டுமென்று, Scheduled Caste போக வேண்டுமென்று விரும்புகிற நான் எப்படி சொல்வேன்? ஆகையால் இவர்கள் விஷயத்தில் அதிக வசதி செய்து கொடுப்பது, கூட்டுறவு முறையில் இல்லாது போனாலும், கிராமத்தில் அவர்கள் தொழிலை நல்ல முறையில் செய்ய அவர்களுக்கு வசதிகள செய்து கொடுக்கவேண்டும். வண்ணார்களுக்கு நகரங்களில் இருப்பது போல், கிராமத்தில் சுகாதார முறையில் தண்ணீர் கஷ்டம் இல்லாத அளவுக்கு வேலை செய்யக் கூடிய விதத்தில் சிறு வசதி செய்து கொடுக்க வேண்டும். அதே போல் மருத்துவர்களுக்கும் வசதி செய்ய வேண்டும். எல்லோரும் co-operative முறையின் கீழ் வரவேண்டும் என்பதை வரவேற்பவள் நான். இருந்தாலும் co-operative முறையில் நன்றாக செயலாற்ற சூழ்நிலை கிடைக்கிற வரையில், இந்த மாதிரி வாழ்க்கை பிரச்னைகளில் கட்டாயமாக சர்க்கார் வசதி செய்து கொடுக்க வேண்டும், இன்னும் ஒரே ஒரு வார்த்தையுடன் முடித்துக் கொள்ளுகிறேன். தாழ்த்தப் பட்டவர்கள் என்கிறவர்களுக்கும், பிற்போக்கு ஜாதி, ஹரிஜனங்கள் என்கிறவர்களுக்கும் சட்ட புத்தகத்தில் ஏராளமான சட்டங்கள் செய்து சட்ட ரூபத்தில் சம அந்தஸ்து கொடுத்திருக்கிறோம். ஆனால் இவையெல்லாம் வாயினால் எவ்வளவோ சொல்லிச் சொல்லி பார்த்தும் நடைமுறையில் வரவில்லை. அடித்த பிள்ளை தான் படிக்கும் என்றால் நாம் அடிக்கவும் தான் வேண்டும். அதைப்போல நாம் சர்க்காரை கேட்க வேண்டிய அளவில் இருக்கிறது என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI R. KRISHNAN :—"மிஸ்டர் ஸ்பீகர், ஸர், ஹரிஜனோத்தாரணத்தின் 5-20 p.m.
இன்ன ஸர்வமேண்டு செய்துகொண்டிருக்கின்ற உண்மனப்ரயத்னங்கள் தீரெ மதியாகின்ற ஒன்ன ப்ரத்யேகம் உண்ணிப்பாயேண்டியிரிக்கின்ன. இன்ன காலத்து முதல் இதுவரெ இவிடெ ஸம்ஸாரிக்க எல்லா பஹுமானப்பெட்ட மெம்பர்மாரும் ஈ காய்ம் எடுத்து பறஞ்ஞிட்டுண்டு. ஹரிஜனங்களில் ஒரு செர்ய விபாகத்தின்ன, அதாயது, ஒரு சதமானத்தினா மாத்ரம், கூடி வித்யாப்யாஸஸௌகர்யங்ஙள் நல்ககயும் அதுபோலெ கூடி ஜோலிக்ககளும் ஸர்வமேண்டுத்யோகங்ஙள் நல்ககயும் செய்துகொண்டு மாத்ரம் ஹரிஜனங்ஙளுடெ ஆவசியகதகள் அவஸானிக்கான் போகுன்னில்ல. ஸாம்பத்திகமாயி பொதுவெ ஹரிஜனங்ஙளுடெ நில உயர்த்தான் ஸாதிக்காத்திடத்தோளம் காலம் அவருடெ ப்ரஶ்னங்ஙளும் அவசியகதகளுமொன்னும் பரிஹரிக்கப்பெடான் போகுன்னில்ல. ஹரிஜனங்ஙளெ பரிஷ்கரிக்ககயும் அவர்க்கு உத்யோகம் நல்ககயுமொன்னும் வேண்டென்னல்ல ஞான் பறயுன்னது. அதெல்லாம் ஆவசியம்தன்னெ. அதினு வேண்டுவோளம் ஸௌகர்யங்ஙளும் செய்துகொடுக்கணம். பக்ஷெ அதுகொண்டுமாத்ரமாயில்ல. எந்ஞெல்லாம் ஸௌகர்யங்ஙள் செய்துகொடுத்தாலும் பள்ளிக்கூட

[Sri R. Krishnan] [11th March 1955

ത്തിൽ പോകാനൊ പഠിക്കാനൊ കൂട്ടാക്കാത്ത ചില വർഗ്ഗക്കാരുണ്ട്. വടക്കേ മലബാറിൽ കറിച്ചിയർ എന്നൊരു പ്രത്യേക ജാതിക്കാരുണ്ട്. ആരൊക്കെ എത്രയൊക്കെ നിർബ്ബന്ധിച്ചാലും അവർ സ്കൂളിൽ പോവുകയില്ല. അങ്ങനെയുള്ള കുട്ടരെ സ്കൂളിലേക്കു കൊണ്ടുവരുന്നതിന്നു പ്രത്യേകം പ്രചരണങ്ങളും പരിശ്രമങ്ങളും ആവശ്യമായിരിക്കുന്നു.

"കോൺഗ്രസ് സർക്കാർ ഭരണം തുടങ്ങിയിട്ട് ഏഴെട്ടു കൊല്ലമായി, നിയമങ്ങൾ പലതുമുണ്ടാക്കിയിട്ടുണ്ട്; എങ്കിലും ഇന്നും ഈ രാജ്യത്തു പല ദിക്കിലും അടിമസമ്പ്രദായം നിലവിലുണ്ടെന്നു പറഞ്ഞാൽ ഒട്ടും അതിശയോക്തിയല്ല. ഹരിജനങ്ങളെ മൃഗങ്ങളെപ്പോലെ അടിച്ചു പണിയെടുപ്പിക്കുന്ന സമ്പ്രദായ ഇന്നും നിലവിലുണ്ട്. മേലാളന്മാർ എന്തു ചെയ്യാലും അവർ സഹിച്ചേ മതിയാകൂ. ഹരിജനങ്ങളെ മർദ്ദിച്ചാൽ പോലീസുകാർ തിരിഞ്ഞുനോക്കുകയില്ല. പോലീസ് ഇടപെടാൽതന്നെയും അവർ മേലാളന്മാർക്കു അനുകൂലിക്കുകയേയുള്ളു. എന്റെ നിയോജകമണ്ഡലമായ കൊല്ലങ്കോട് കഴിഞ്ഞ കൊല്ലം നടന്ന ഒരു സംഭവം ഈ സഭയിൽതന്നെ ഉന്നയിക്കപ്പെടുകയുണ്ടായി, ബാലകൃഷ്ണമേനോൻ എന്നൊരു സബ്ബ് ഇൻസ്പെക്ടർ കാളൻ എന്നൊരു ഹരിജനെ ഭയങ്കരമായി മർദ്ദിച്ചിട്ടു അതിന്നു തെളിവുകൊടുക്കാൻവേലം മർദ്ദനമേററവർ മുന്നോട്ടു വന്നില്ല. മലബാറിലെ ചില പ്രദേശങ്ങളിൽ ഹരിജന സ്ത്രീകൾക്കു മാറുമറച്ചു നടക്കാനുള്ള സ്വാതന്ത്ര്യംപോലുമില്ല. മുതലമട എന്ന സ്ഥലത്തു ഒരു നായർ യുവതിയും ഒരു ഹരിജൻ യുവാവും തമ്മിൽ പ്രണയബദ്ധരായി. നാട്ടിൽ നില്ക്കാൻ നിവൃത്തിയില്ലാത്തതുമൂലം അവർ മറെറാരു സ്ഥലത്തേക്കു പോയി. എന്നിട്ട് എന്താണ് സംഭവിച്ചതു? പോലീസുകാർ ആ ഹരിജൻ യുവാവിനെ പിടിച്ചുകൊണ്ടുപോയി കഠിനമായി മർദ്ദിച്ചു. "നിനക്കു മേൽജാതി സ്ത്രീയെ വേണോടാ" എന്നു ചോദിച്ചുകൊണ്ടാണ് അയാളെ മർദ്ദിച്ചതു. ഹരിജൻ മർദ്ദനങ്ങളെക്കുറിച്ചു പോലീസിൽ ആവലാതിപ്പെട്ടാൽ ഒരു പ്രയോജനവുമില്ല നാട്ടിലെ പ്രമാണികളാണ് മർദ്ദിക്കുന്നതു്. അവരെ പോലീസുകാർക്കു വലിയ പേടിയാണ്. പോരെങ്കിൽ അവർ കോൺഗ്രസ്സുകാരുടെയായിരിക്കും. പോലീസിൽ നിന്നുമാത്രമല്ല, ഹരിജൻ വെൽഫെയർ ഡിപ്പാർട്ടുമെൻറിൽനിന്നും ഹരിജനങ്ങൾക്കു രക്ഷയൊന്നും കിട്ടുന്നില്ല. ഹരിജൻ വെൽഫേയർ ഡിപ്പാർട്ടുമെൻറിന്റെ ശ്രദ്ധയിൽപ്പെടുത്തിയാലും അവർ നടപടിയൊന്നും എടുക്കാറില്ല. ഹരിജ പോലീസിന്നയച്ചുകൊടുക്കും അത്രതന്നെ.

"പ്രൈവററു മാനേജുമെൻറിൽ നടത്തുന്ന ഹോസ്റ്റലുകളിൽ ചിലതു ആദായകരമായ തൊഴിലായി ചില മാനേജർമാർ കരുതുന്നതായി കേൾക്കപ്പെടുന്നു. ഇത്തരം ഹരിജൻ ഹോസ്റ്റലുകളെല്ലാം ഗവമ്മേണ്ടു് ഏറെറടുത്തു നടത്തണമെന്ന അഭിപ്രായമാണ് എനിക്കുള്ളതു്.

"ഹരിജൻ മർദ്ദനങ്ങളെപ്പററി ശരിയായും ഊർജ്ജിതമായും അന്വേഷിച്ചു നടപടികളെടുക്കണമെന്നു ഗവമ്മേണ്ടു് പോലീസിന്നു ഉത്തരവായ്ക്കണം. ഹരിജനങ്ങളുടെ കേസ്സുകൾ ശരിയായി നോക്കാത്ത പോലീസുകാരെ തരംതാഴ്ത്തിയും മററു വിധത്തിലും ശിക്ഷിക്കണം. അതുപോലെതന്നെ ഹരിജനങ്ങളുടെ കേസ്സുകളെപ്പററി നന്നായി അന്വേഷണം നടത്തുന്ന പോലീസുകാർക്കു സമ്മാനങ്ങളുമേർപ്പെടുത്തണം. അങ്ങനെ ചെയ്യാൽ ഒരു പക്ഷെ പോലീസുകാർ ഹരിജനങ്ങളുടെ കാര്യത്തിൽ കുറച്ചു ശ്രദ്ധവച്ചുവെന്നുവരാം.

"ഹരിജനങ്ങൾക്കു രോഗം പിടിപെട്ടാൽ ചികിത്സിക്കാനുള്ള യാതൊരു സൌകര്യവുമില്ല. അവർ ആശുപത്രിയിൽ ചെന്നാൽ സ്ഥലമില്ല, കിടക്കയില്ല, മരുന്നില്ല; ഡോക്ടർമാരാരും അവരെ തിരിഞ്ഞുനോക്കുകകൂടിയില്ല. ഇക്കാര്യങ്ങളെല്ലാം ഗവമ്മേണ്ടു് ശ്രദ്ധിച്ചു വേണ്ടതു ചെയ്യണമെന്നു അപേക്ഷിച്ചുകൊണ്ടു സമയക്കുറുകുത്താൽ ഞാൻ പ്രസംഗം അവസാനിപ്പിക്കുകയുണ്ടു."

5.25 p.m. * SRI R. S. ARUMUGAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் ஒரு கோடியே ஒன்பது லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இனவாரியாக எடுத்துக் கொண்டு பார்த்தாலும், இந்த வருஷம் அதிகமாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

"எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் பலருடைய கருத்தையே நானும் ஆதரிக்கிறேன். Harijan Welfare Department தனிப்பாடசாலைகளை

11th March 1955] [Sri R. S. Arumugam]

நடத்தவேண்டிய அவசியமில்லை. ஆசிரியர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தைக்கொண்டு, மாணவர்களுக்கு மத்தியான உணவு (mid-day meals) அளிக்கலாம். ஆகவே, வருகிற ஆண்டிலிருந்து ஹரிஜன welfare பாடசாலை என்று தனியாக நடத்தாமல், அதற்காக ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தைக் கொண்டு இன்னும் அதிகப்படியான மாணவர்களுக்கு மத்தியான உணவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றமடையவேண்டுமானால், கல்வித் துறையில் வசதியளிக்கவேண்டும். எல்லா மாணவர்களுக்கும் 'scholarship' கண்டிப்பாக வழங்கவேண்டும். ஒரு சிலருக்கு கொடுத்து பலருக்குக் கொடுக்காமலிருப்பது அதிருப்தியை விளைவிக்கிறது. ஹாஸ்டல்களும் அதிகமாக ஏற்படுத்தவேண்டும். எல்லா ஹரிஜன ஹாஸ்டல்களையும் சர்க்கார் ஏற்று நடத்தவேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். எனது அபிப்பிராயம் அதற்கு ஆதரவு அளிக்கவில்லை. எங்கள் ஜில்லா வைப்பொருத்தவரையில் பல தனி நபர்கள் திருப்திகரமான முறையில் ஹாஸ்டலை நடத்துகிறார்கள். ஆகவே அவர்களையே மீண்டும் அனுமதித்து விட்டு பாளையங்கோட்டையில் மாத்திரம் ஒரு சர்க்கார் ஹாஸ்டலை இவ்வருஷமே நடத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் நீண்டகாலமாகவே பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இப்பொழுதுதான் அவர்கள் முன்னேற்றத்தில் எல்லோருக்கும் அக்கறை வந்திருக்கிறது. அவர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் எல்லோருக்குமிருக்க வேண்டும். உங்கள் உள்ளங்கள் மாறுவிட்டால் நாங்கள் எப்படி முன்னேற முடியும் ?

"எங்கள் ஜில்லாவைப் பொருத்தவரையில், கிறுஸ்துவர்களை எடுத்துக் கொண்டால், தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்களோ அப்படித்தானிருக்கிறார்கள். பலர் வெள்ளைக்காரர்கள் இந்நாட்டுக்கு வந்தபின் கிறுஸ்துவ மதத்தின் மூலம் சில சலுகைகள் கிடைத்து ஒரு சிலர் படிப்பில் முன்னேறியிருக்கிறார்கள். அதிலே அவ்வளவு பேருமே முன்னேறிவிட்டார்கள் என எண்ணிவிடக்கூடாது. ஆகவே அவர்களுக்கும் கல்விச் சலுகையளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களில் பெரும்பாலோர் மிகவும் ஏழைகள். கல்விச் சலுகை பிற சலுகைகள் கொடுக்கவில்லையென்றால் அவர்களுக்கும் அதிருப்தி ஏற்படும். அது நாட்டுக்கும், நாட்டு முன்னேற்றத்துக்கும் நல்லதல்ல என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

"I.A.S. போன்ற உத்தியோகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சரியான பிரதிநிதித்துவம் கொடுப்பது கிடையாது. Gazetted Officers பதவிகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் சரியான ஆட்கள் கிடைக்கவில்லையென்று சர்க்கார் சொல்லுகிறார்கள். இது முற்றிலும் சரி என்று சொல்வதற்கில்லை. ஹரிஜனங்களிலும் சிலர் படித்தவர்கள் இருக்கிறார்கள். எனவே நல்ல முறையில் இந்தப் பிரச்னை கவனிக்கப்படவில்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது. 'பிரமோஷனும்' அவர்களுக்குச் சரியாக கொடுப்பது கிடையாது. போலீஸ் இலாகாவை எடுத்துக்கொண்டால், தாழ்த்தப்பட்டவர்களில் Sub-Inspectors இருக்கிறார்கள். அவர்களுக்கு Circle Inspector உத்தியோக உயர்வு கொடுப்பதில்லை. சாதாரண போலீஸ்காரர்களாயிருப்பவர்களுக்கு Head constable கூட கொடுப்பது கிடையாது. அவர்களுக்கு உயர்வு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே Explanation கேட்டு உயர்வு கிடைக்காமல் தடுத்துவிடுகிறார்கள். இதை மறுக்கமுடியாது. வேண்டுமானால் சர்க்காரிலிருந்து கமிட்டி போட்டு விசாரியுங்கள் ; உண்மை தெரியும். 'Joint Registrar-ஆக இருந்த ஒரு தாழ்த்தப்பட்டவருக்குத்தான் Inspector-General பதவி கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்' செய்தார்களா ? செய்யவில்லை. ஏன் செய்யவில்லை ? மற்றும் போலீஸ் உத்தியோகத்திற்கு சொற்ப படிப்புப் போதுமாகையால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும். படிப்பு 5-ம் வகுப்பு வரை போதும் எனக் குறைக்கவேண்டும்."

Mr. SPEAKER :—"கனம் அங்கத்தினரின் நேரம் முடிந்துவிட்டது."

[11th March 1955

Sri R. S. ARUMUGAM :—" இன்னும் ஐந்து நிமிஷம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

Mr. SPEAKER :—" உங்களுடைய **Party Whip** நீங்கள் ஐந்து நிமிஷம் பேசுவதாகத்தான் சொன்னார்."

***Sri V. MUTHU** :—" சபாநாயகர் அவர்களே, எனக்கும் ஐந்து நிமிஷம்தான் கொடுக்கப்படுமா ? " (சிரிப்பு.)

Mr. SPEAKER :—" உங்களுடைய **Whip**, ஐந்து நிமிஷம் பேசக் கூடியவர்கள் மூன்று பேர்கள் இருப்பதாகச் சொன்னார். நீங்கள் பத்து நிமிஷம் பேசுவதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது."

***Sri V. MUTHU** :—" இந்த ஆண்டு கல்வி மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வரவுசெலவுத் திட்டத்திலே ' **Harijan demand** ' என்று போட்டிருக்கிறது. ' ஹரிஜன் டிமாண்டு ' என்று சொன்னால், அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் ஹரிஜனங்களுக்கே செலவழிக்கப்படவேண்டும். இதைப்பற்றி நான் பலதடவை பிரஸ்தாபித்திருக்கிறேன். வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதாக இருந்தால், அது வேறு ' **heading**'-ல் வரவேண்டும். அடுத்த பட்ஜெட் தயாரிக்கும்பொழுதாவது சர்க்கார் இதை கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

" சில அங்கத்தினர்கள், ஒரு கோடியே ஒன்பது லட்சம் சொச்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கலாம். ' பார்த்தால் மொத்தம், பகிர்ந்தால் கொஞ்சம் ' என்று இருக்கிறது. ஹரிஜன், **Backward Class Forward class** என்று ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடாது என்று சிலர் சொல்லலாம். கோவிலுக்குப் போவதிலும், கல்யாணம் பண்ணிக் கொள்வதிலும் ஜாதி வித்தியாசம் பாராட்டவேண்டாம். ஆனால் இம்மாதிரிப் பணம் ஒதுக்கும் விஷயத்தில், தனித்தனியாக ஒதுக்கவேண்டுமென்பதே என் அபிப்பிராயம். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த ஒரு கோடி ரூபாய்தான் ' **Harijan Welfare** '-க்கு என்று சொல்லிவிட்டு **Backward class, Criminal Tribes, Converts,** போன்றவர்களுக்குச் சலுகைகள் அளிக்கிறார்கள். இது ' ஒட்டகம் கூடாரத்திற்குள் சென்று அங்கு இருப்பவனை வெளியே துறத்துவது ' போலிருக்கிறது. ஹரிஜனங்களுக்காக இவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது என்று சொன்னால்தான், அது போதுமா போதாதா, என்ன திட்டங்கள் செய்யும்படிச் சொல்லலாம் என்று தெரிய வரும். இப்போழுது ' **Harijan Welfare** ' என்று சொல்லிவிட்டு, **Backward Class,** வன்னிய ஜாதி எல்லோரையும் அதில் சேர்க்கக் கூடாது. ஹரிஜன், ஹரிஜனகத்தானிருக்கவேண்டும். ஹரிஜனங்கள் ' **Forward stage**'-க்கு வந்த பிறகு, தனியாக **Harijan Welfare Department** வேண்டாமென்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டிலாவது ' **Harijan uplift** '-க்காக ஒதுக்கப்படும் பணம் ஹரிஜனங்களுக்கே செலவு செய்யப்படவேண்டும். அதற்காகத் தனி ' **Demand** ' இருக்க வேண்டும். அதனால் ஒன்றும் குடி முழுகிப்போய்விடாது.

" அடுத்தபடியாக ஹரிஜனங்களிலிருந்து கிறுஸ்துவர்களாக மாறியவர்களை ஹரிஜனங்களாக கருதக்கூடாது. கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டதுபோல் ' ஹரிஜன், ஹரிஜன்தான் ', ' கிறுஸ்துவன், கிறுஸ்துவன்தான் ' சீக்கிரமாக நேராக மோட்ச வாழ்க்கை வேண்டுமென்று மதம் மாறினவர்களை, ஏன் பணத்தில் பங்கு வேண்டுமென்பதற்காக மறுபடியும் ஹரிஜனங்களாகச் சேர்க்கவேண்டும் ? அவர்கள் பொருளாதார நிலை மோசமாக இருக்கலாம். கல்விச் சலுகை விஷயத்தில் அவர்களை பிற்பட்ட வகுப்பில் சேர்க்கலாம்.

5-35 p.m. " சமீபத்தில் இரண்டு மூன்று கேள்விகள் வந்துள்ளது. அதாவது ஹரிஜனங்களுடைய பெயரில் இருந்துவரும் ஹாஸ்டல்களின் பெயரை மாற்றப்போவதாகவும், ஒன்றோடொன்று இணைக்கப்போவதாகவும், இவ்விஷயம் பரிசீலனையில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது நல்லதுதான்.

11th March 1955] [Sri V. Muthu]

ஆனால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஹரிஜனங்களுடைய பெயரில் இருந்தால்தான் அவர்களுக்கு ஒரு உரிமை இருக்கும். அதனால் அந்த சமூகத்தினருக்கும் அந்த சமூகத்து மாணவர்களுக்கும் ஒருவித பற்றுதல் ஏற்படும். படிப்பதற்கும் ஒரு உற்சாகம் ஏற்படும். பெயரை மாற்ற வேண்டியதுதான். மாற்றியபின் ஹரிஜனங்களின் உற்சாகம் குறையாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். அடுத்தபடி ஹரிஜன் ஹாஸ்டல்களையும், பிற்பட்ட சமூக ஹாஸ்டல்களையும் ஒன்று சேர்க்கவேண்டியதும் அவசியம் தான். ஆனால் ஒன்றானபின் ஹரிஜனங்களுடைய உரிமை குறைந்து, மேல்ஜாதிக்காரர்களுடைய ஆதிக்கம் அதிகமாகிவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—"கனம் அங்கத்தினருக்கு நேரமாகிவிட்டது. உட்காருங்கள்."

IV.—PRESENTATION OF THE PETITION TO THE ASSEMBLY.

SRI K. V. RAMASWAMI :—"கனம் சபாநாயகர் அவர்களே, நாமக்கல் தொகுதியிலே பெரும் பகுதியில் ஹரிஜனங்களும், ஷெடியூல்டு டிரைப்ஸ் மக்களும் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அவர்களில் 740-க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டு, அவர்களுடைய குறைகளைத் தெரிவித்து ஒரு மகஜரை என்னிடம் கொடுத்துள்ளார்கள். அதிலே அவர்களுக்கு போக்குவரத்திற்கு ரோடு வசதியில்லை, கல்வி வசதியில்லை, சுகாதார வசதியில்லை, வீட்டு வசதியில்லை என்ற குறைகளை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தக் குறைகளை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மகஜரை சபாநாயகர் அவர்கள் மூலமாக சமர்ப்பிக்கின்றேன்."

MR. SPEAKER :—"அதை நீங்கள் சட்டசபை செக்ரட்டரியிடம் கொடுங்கள்."

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1955-56—*Cont.* (2)—DEMAND XXII HARIJAN UPLIFT—*Cont.*

SRI P. G. MANICKAM :—"மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 5-37 p.m.
இந்த ஹரிஜன முன்னேற்ற மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதல் முதலிலே என்னுடைய கோயமுத்தூர் ஜில்லாவைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷம் மத்தியான சாப்பாட்டிற்காக ரூ. 14,50,300 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செங்கல்பட்டு மலபார், வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, போன்ற ஜில்லாக்களுக்கு மட்டும் 1லட்சம், ஒன்றரை லட்சம், இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கோயமுத்தூர் ஜில்லாவிற்கு 21 ஆயிரம் மாத்திரம்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கோயமுத்தூரிலே மொத்தம் 5 லட்சம் பேர்களுக்குமேல் இருக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லாவுக்கு இவ்வளவு மோசமாக ஒதுக்கப்பட்டால், ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு உதவ முடியாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே இந்த வருஷ பட்ஜட்டிலே குறைந்தது 50 ஆயிரம் இன்னும் அதிகமாக கோயமுத்தூர் ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒதுக்கப்பட்டாலும், அந்தத் தொகை பூராவையும் ஹை ஸ்கூல் ஹரிஜன மாணவர்களுக்கு மத்தியான சாப்பாட்டிற்காக அந்த மொத்த ரூபாயையும் செலவழிக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்து, உபகாரச் சம்பளம். கோயமுத்தூர் ஜில்லாவிற்கு ஒதுக்கப்படும் தொகை முழுவதையும் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு கொடுப்பதில்லை. ஹரிஜனங்களுக்கு நான்கில் ஒரு பங்குதான் கொடுக்கப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவர்களுடைய வசதிக்காக என்று ஒதுக்கப்படும் பணத்தை அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவே செலவழிக்கவேண்டுமென்றும், இன்னும் கொஞ்சம் அதிகத் தொகை ஒதுக்கி அவர்களுக்கு உதவவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri P. G. Manickam] [11th March 1955

"அடுத்தது, வீட்டு நிலங்கள். கோயமுத்தூர் ஜில்லாவிலே எதிர் கட்சி உபதலைவர் அவர்கள் சொன்னபடி வீட்டு மனை ஹரிஜனங்களுக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அது கவனிக்கப்படவில்லை. அதைப் பற்றி எத்தனையோ முறை இந்த சட்டசபையில் சொல்லி இருக்கிறேன். கேள்வி நேரத்திலும் கேட்டிருக்கிறேன். அங்கு 184 ஹரிஜனச் சேரிகளில் உள்ளவர்கள், மிகமிகப் பிற்பட்டவர்கள், ஜாதி இந்துக்களால் அடிமைப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். இருவர்களுக்குமிடையே பல சிக்கல்கள் இருந்துவருகின்றனயென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்கள் சுதந்திரமாக குடியிருப்பதற்கு முடியவில்லை. அவர்களிடமிருந்து குப்பை முதலியவைகளையுங்கூட பறித்துக் கொள்ளுகிறார்கள். சர்க்கார் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு நிலங்களை வழங்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தது எலிமெண்டரி கல்வி. எலிமெண்டரி கல்விக்காக பட்ஜெட்டிலே ரூ. 10,600 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எந்த விதமாக ஸ்காலர்ஷிப் வசதியும் கிடையாது. அவர்களுக்கு துணிமணி வாங்கிக் கொடுப்பதற்காக ரூ. 10,600 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எலிமெண்டரி கல்வி மிக முக்கியம் என்று இந்திய சர்க்காரும், சென்னை சர்க்காரும் கூறுகின்றன. ஆனால் அதை உயர்த்துவதற்கான வழிகளை ஒன்றும் செய்யவில்லை. இதை முக்கியமாக கவனிக்க வேண்டும். இப்போது ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கியிருந்தும், துணிமணி முதலியன வாங்குவதற்காக ரூ. 10,600 ஒதுக்கியிருப்பது மேற்படி செலவுகளுக்கு போதுமா என்று கேட்கிறேன் ?

"இப்போது ஆரம்பக் கல்வி கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலும் கூட நான் ஒரு யோசனையைக் கூறியிருக்கிறேன். 100-க்கு 90 பேருக்குமேல் நம் நாட்டில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களில் 50 சதவிகித பேர்களாவது கிராமங்களில் ஏழை ஹரிஜனங்களாக இருக்கிறார்கள். அவர்களை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக செய்ய சர்க்கார் பெரிய அளவில் உதவ முடியாவிட்டாலும், புஸ்தகம் பலகை வாங்கிக் கொடுக்கலாம்; துணிமணி வாங்கிக் கொடுக்கலாம்; கூடுமானால் இலவச மத்தியான சாப்பாட்டு வசதியும் செய்து கொடுக்கலாம். அவ்வாறு செய்தால் கல்வியின் தரம் ஓரளவு உயரும். அதிலும், அதிகப்படிப்பு படிக்கக்கூட வசதி செய்ய வேண்டாம். ஐந்தாவது வரை படிக்க வசதிச் செய்தால் போதும். அவ்வாறு வசதி செய்தால், மற்ற நாடுகளில் உள்ளதுபோல் 100-க்கு 90 பேர்களுக்குமேல் நம் நாட்டிலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இருப்பார்கள். இதை அரசாங்கம் சிபார்சு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதைத்தான் அன்று நான் பொது விவாதத்திலும் கூறினேன். இப்போது ஏழாவது வரை படிப்பதற்கு உபகாரச் சம்பளத்திற்கு 50 லட்சம் ரூபாய் அரசாங்கத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் 10 லட்ச ரூபாயாவது எலிமெண்டரி கல்விக்காக ஒதுக்கப்படவேண்டும். அப்படி உதவினால் எலிமெண்டரி கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு, ஏழை ஹரிஜன மாணவர்கள் எல்லோருக்கும் ஓரளவு புஸ்தகம், துணிமணி கூடுமானால் மத்தியான இலவச சாப்பாட்டு வசதியளித்து உற்சாகப்படுத்துவதற்கு முடியும். ஆகையால் நான் சொன்ன வார்த்தைகளை மந்திரியார் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதற்கான தொகைகளை ஒதுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

*SRI A. IYANAR :—"கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் ஹரிஜன க்ஷேமாபிவிருத்தி நிதியை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய கனவான்களில் சிலர் ஸ்ரீ ரங்கசாமி ரெட்டியார், ஸ்ரீ கருத்திருமான், ஸ்ரீ சொக்கலிங்கம் செட்டியார் போன்ற தலைவர்கள் ஹரிஜனங்களுக்கிடையே ஒற்றுமை கிடையாது என்றும், அவர்களுக்குள் பல பாகுபாடுகள் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். வாஸ்தவம்தான். ஆனால் முன்பிருந்ததைப் போல் இப்போது இல்லை. வரவர அந்த எண்ணம் குறைந்துகொண்டே வருகிறது. மதுரை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், முக்கால் பங்கிற்கு மேல்

11th March 1955] [Sri A. Iyanar]

அந்த வித்தியாசம் கிடையாது. இப்போது தாழ்த்தப்பட்டவர்கள் லீக் என்று ஒன்று கனம் ஹரிஜன மந்திரி அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டு, அவர்களிடையே ஐக்கியத்தை வளர்க்க எல்லா சமூகத்தினரையும் ஒன்று திரட்டி, ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அவ்விதத்தில் எனக்கு முன்பு பேசிய தலைவர்கள் இதைக் காரணமாகக் கொண்டு, ஹரிஜனங்களை மேலும் பிளவுபடுத்தாமல், அவர்களுடைய ஒற்றுமைக்கு உற்சர்கமூட்ட வேண்டுமென்றும், அதற்கு மேலும் மேலும் பாடுபட முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மேலும் சர்க்காரிலே இப்போது பலவித நன்மைகள் செய்யப்பட்டு வருகிறது. அதிலே முதலாவதாக, வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலும் வீட்டடி நிலங்கள் கொடுக்க பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது. ஆனால் அதை காலாகாலத்தில் அவர்களுக்கு அனுகூலம் செய்து கொடுப்பது கிடையாது. காரணம் என்னவென்றால், அது கலெக்டரினுடைய நிர்வாகத்தின்கீழ் ஜாரி செய்யப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரத்தை ஒவ்வொரு ஜில்லா வெல்பேர் அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு ஹரிஜன டைரக்டர் அவர்களுக்கும் அந்த ஜில்லா வெல்பேர் (welfare) ஆபீசர்களுக்கும் அதிகாரம் கொடுத்தால்தான், கூடிய சீக்கிரத்திலே அந்த வீட்டடி கொடுக்கும் பிரச்னையைத் தீர்க்க முடியும்.

"மதுரை ஜில்லாவிலே தேனீ என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அதிலே சுமார் 80 கைவண்டி இழுக்கும் ஹரிஜன குடும்பங்களுக்கு மேல் இருக்கின்றன. அவர்கள் சுமார் ஆறு, ஏழு வருஷங்களாக தங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள்; அதுபற்றி மனுவும் கொடுத்திருக்கிறார்கள்.

"சென்னையிலிருந்து வந்த டைரெக்டர் அவர்கள் கூட இந்த வீட்டடி நிலத்தை பார்த்திருக்கிறார்கள். இதைப்பற்றி அங்கு கலெக்டர், தாசில்தார் வரும்போதெல்லாம் நேரில் காட்டியிருக்கிறார்கள். 6, 7 வருஷமாக பல மனுக்கள் கொடுத்தும் தாமதமாகிக்கொண்டு வருகிறது. அந்த இடத்தை பள்ளிக்கூடத்தின் விளையாட்டு மைதானத்திற்கும் பள்ளிக்கூட கட்டடத்திற்கும் வேண்டும் என்று அந்தப் பள்ளிக்கூட கமிட்டியார் அங்கே இருக்கும் சுமார் 23 ஏக்கர் நிலத்தைக் கேட்டு அங்கு கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூட கட்டடம் கட்டுவதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஹரிஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு உட்காருவதற்குக் கூட இடம் இல்லாமல் கஷ்டப்படுவதை தடுக்கவேண்டும். சுமார் 80 குடும்பங்கள் கஷ்டப்படுகிறார்கள். மற்ற பிற்பட்ட வகுப்பினரும் வீடு இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விளையாட்டு மைதானத்திற்கு என்று 23 ஏக்கர் நிலம் தேவையில்லை. வேறு இடம் கொடுக்கலாம். அங்குள்ள ஏழைகள் விஷயத்தில் சர்க்கார் அதிகாரிகள் மனம் வைக்கவில்லை. 5-45 p.m.

"அடுத்தபடியாக பாடசாலைகளில் ஹரிஜன மாணவர்களுக்குப் போதிய இடம் கிடைப்பது இல்லை. ஒவ்வொரு பாடசாலையிலும் விகிதாச்சாரப்படி இவ்வளவு பேருக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று ஒரு உத்தரவு அனுப்பினால் நலமாக இருக்கும். பள்ளிக்கூடத்தில் சேருவதாக இருந்தால் அட்மிஷன் பீஸ், ஸ்பெஷல் பீஸ் முதலியவைகள் கட்ட முடியாமல் பல மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர முடியாமல் நின்று விடுகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதுடன் காலாகாலத்தில் அவர்களுக்கு புஸ்தகங்களையும் துணிமணிகளையும் வாங்கிக்கொள்ள அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்களை அந்த பள்ளிக்கூட அரை ஆண்டுகளுக்குள்ளாகவே sanction செய்தால் ஹரிஜன மாணவர்களுக்கு சௌகரியமாக இருந்து அவர்கள் முன்னேற்றமடைய இடம் உண்டு.

"ஒவ்வொரு ஜில்லாவிலும் நூல் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நூல் நிலையங்களுக்கு ஒவ்வொரு ஜில்லா போர்டிலிருந்தும், ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலிருந்தும் ஒரு தாலுக்காவிலுள்ள பஞ்சாயத்து தலைவர்களில் ஒருவரையுமாக மெம்பர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். ஹரிஜன இனத்

[Sri A. Iyanar] [11th March 1955

தைச் சேர்ந்தவர்களில் ஒருவராவது இதுவரையில் அந்தக் கமிட்டியில் இல்லை. எந்த ஜில்லாவிலும் அப்படி ஹரிஜனங்கள் இருப்பதாகவே தெரிய வில்லை. அப்படிப்பட்ட நூல் நிலையங்களில் ஹரிஜனங்கள் வர முடியாமல் இருக்கிறார்கள். அதனால் இனி மேலாவது ஒவ்வொரு கமிட்டியிலும் குறைந்தது இரண்டு ஹரிஜன அங்கத்தினரையாவது நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு போதனா முறை பாடசாலையிலும் செலெக்ஷன் கமிட்டிக்கு ஹரிஜன மெம்பர்களை நியமனம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"ப்யூன் வேலைக்கும் போலீஸ் வேலைக்கும் கூட மூன்றுவது பாரம் வரையில் படித்திருக்கவேண்டும் என்று நமது சர்க்காரிலும் எம்ப்ளாய் மென்ட் எக்ஸ்சேஞ்சிலும் ஒரு விதி இருப்பதாகத் தெரிய வருகிறது. நம் முடைய நாட்டிலே தமிழ் அரசாங்கம் ஏற்படப் போகிறது. இதற்காகவே இப்பொழுது பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் சிறிய உத்தியோ கங்களுக்கு மூன்றுவது பாரம் பாஸ் செய்திருக்கவேண்டும் என்று சொல்லு வது சரியல்ல. இனிமேல் ஹரிஜனங்கள் விஷயத்தில் ஐந்தாவது பாஸ் செய்திருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஐந்தாவது வகுப்பு பாஸ் செய்திருந்தாலும் அவர்களுக்குப் ப்யூன் வேலையும் போலீஸ் வேலையும் கொடுக்கலாம் என்ற உத்தரவை போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

* SRI T. V. SANNASI :—"கனம் சபாநாயகர் அவர்களே, வருடந்தோ றும் வாடிக்கையாகப் பேசப்பட்டு வரும் இந்த ஹரிஜன மான்யத்தைப்பற்றி மகிழ்ச்சியற்ற வகையில் பேசித் திருப்தி அடையும் நிலைமையில் இருக்கி றேன். பிற்பட்ட வகுப்பு என்பது தாழ்த்தப்பட்ட வகுப்பை வகுக்கப்பட்ட ஆதி வர்ணாசிரம காலத்தில் இருந்தே வகுக்கப்பட்டதா? அல்லது அர சாங்கத்திடம் சலுகை பெறுவதற்காக அண்மையில் வகுத்துக்கொள்ளப் பட்டதா என்பது தெரியவில்லை. பெரும்பாலும் அரசாங்கத்தினுடைய சலு கையை ஆதாரமாகக் கொண்டுதான் இந்த பாகுபாடு ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. தாழ்த்தப்பட்டவர்கள் தீண்டாமைக் கொடுமையாலும் கொடிய வறுமையாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிற்பட்டவர்களோ இவர்களைச் சேர்ந்து வாழக்கூடிய புத்தியல் சக்தி இல்லாமல் இருக்கிறார்கள். என் றாலும் வறுமையால் பாதிக்கப்பட்ட வாழ்க்கையில் ஒன்றுபட்டு இருக்கிறார் கள். மிகவும் கேவலமாக மனிதத் தன்மைக்கு இடமில்லாமல் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்டவர்களும் ஒன்று சேர்ந்து உழைப் பார்களானால் இந்த நாட்டை ஆள்வதற்கு அறுகதை யுள்ளவர்களாக ஆவார்கள். உழைப்பிலும் எண்ணிக்கையிலும் உயர்ந்திருப்பதால் அவர் களைத் தவிர வேறு யாரும் இந்த நாட்டை ஆள முடியாது. இதனை டாக்டர் அம்பேத்காரும் சொல்லியுள்ளார். எதிர் கட்சி உபத் தலைவர் திரு. கல்யாணசுந்தரமும், திரு. கோவிந்தசாமியும் இதைப்பற்றி வாதித் தார்கள். கஞ்சு ஊற்ற ஆள் இல்லையாயினும் கச்சை கட்ட ஆள் உண்டு என்ற மாதிரிதான் இருந்தது. வெறும் சொற்போரில் பயனில்லை. இவர் கள் ஒன்று சேர்ந்து காரியத்தில் இறங்கும் காலத்தை அடுத்து இந்த நாட்டையே ஆளக்கூடிய காலம் அவசியம் வரும். அதுவன்றி அரசாங்க மான்யப் பிச்சை ஐந்து கோடி பெற்றாலும் அடைய வேண்டிய அளவு ஏற்றம் அடைந்து விடமுடியாது. ஆகவே அடிக்கடி இந்த மான்யப் பிச்சை கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. தாங்களாகவே முன்னேற்றமடைந்து தக்க வசதி பெறுவதற்கு தகுந்த ஆற்றலும் அறிவும் நிறைந்திருக்கிறது. (அப்ளாஸ்.) பிச்சை கேட்பது போல் பணம் ஒதுக்குங் கள் என்று கேட்பது பலம் பொருந்திய ஒரு சமூகத்திற்கு அவமானமாகத் தான் இருக்கிறது. பிற்பட்டவர்கள் பிராமணர்களுக்கு அடுத்தபடியாக தங் களை நினைத்துக்கொண்டிருப்பார்களானால் தாழ்த்தப்பட்டவர்கள் நிலை சிறி தும் மாறாது. இதனால் தங்கள் ஏற்றமும் பாதிக்கப்படும். பிராமணர் களும் அவர்களுக்குச் சமமாக தங்களை நினைத்துக்கொண்டிருக்கும் சில மேலினத்தவர்களும் பிற்பட்டவர்களை குறைவாக நினைத்து ஒதுக்கினால் அதனை மாற்றுவதற்கு பிற்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை இழிவுப் படுத்தி ஒதுக்குவது நியாயமல்ல. பரிகாரமும் இதுவல்ல. இது இரு சாராரு

11th March 1955] [Sri T. V. Sannasi]

புக்கும் இழுக்கேயாகும். நாட்டுக்கு முதுகெலும்பு போன்ற இந்த இரு பெரும் சமூகங்கள் பேதமின்றி ஒத்து வாழக்கூடிய ஒரு நிலை வரும் வரைக்கும் இந்த நாட்டிலுள்ள ஜாதி வேற்றுமைகளும், பொருளாதார பாகுபாடுகளும் மறையும் என்பதற்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. இதனை மறந்துவிட்டு ஐந்து கோடி, இரண்டு கோடி கொடு என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இப்படி வருஷா வருஷம் கேட்டுக்கொண்டிராமல் அரசாங்கம் நாட்டுக்காக வகுத்திருக்கும் ஐந்து வருஷத் திட்டத்தைப் போல் நாமும் சமூக முன்னேற்றத் திட்டம் அமைத்து தாழ்த்தப்பட்டவர்களும் பிற்பட்டவர்களும் ஒன்று சேர்த்து உழைத்து வந்தால் இந்த பாகுபாடெல்லாம் நீங்கி விடும். இதுதான் முறை. இதுவன்றி மார்க்கமும் கிடையாது. நமக்கோ எவ்வித வசதியும் இல்லை. நாம் கூறும் குறைகளைப் பிரசுரிப்பதற்கு ஒரு பத்திரிகைகூட நமது கையில் இல்லை. இந்நிலையை சிந்திக்கவேண்டும். குறைகளைப்பற்றி அழகாக பேசிக்கொண்டிருப்பதிலும் ஆத்திரமாக பேசி சண்டை போட்டுக்கொண்டிருப்பதிலும் எவ்வித பயனுமில்லை. பயன் தரும் வகையில் முயற்சி செய்வோமானால் நம்முடைய திறமையும் ஆற்றலும் உலகம் பூராவும் தெரிவதற்கு ஏதுவாகும். ஆகவே நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாகுபாடு இல்லாமல் வேலை செய்யவேண்டும். நாம் பிறரை ஒடுக்கி ஆள விரும்பவில்லை. நம்மை ஒடுக்கும் தன்மையை மாற்றவே விரும்புகிறோம். ஆகவே அதற்கான வேலைத்திட்டத்தில் ஒன்றித்து இறங்க வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"இரண்டாவதாக சர்வீஸ் கமிஷனில் பிரதிநிதித்துவமில்லாத குறையைப்பற்றி பிரிட்டிஷார் இருந்த காலத்திலும் நம் தேச சுதந்திரத்திற்காக, வாழ்க்கையை அர்ப்பணித்த தலைவர்களிடமும் சொல்லிச் சொல்லி அழுதாகிவிட்டது. முற்போக்கு கட்சியென்று சொல்லிக்கொண்டிருப்பவர்களிடமும் சொல்லி அழுதாயிற்று. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து ஒருவரைக்கூட சர்வீஸ் கமிஷன் மெம்பராக எடுக்கமாட்டேன் என்கிறார்கள். அப்படி மெம்பராகக்கூடிய யோக்யதை உள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இல்லையா? அல்லது தாழ்த்தப்பட்டோரை அந்த சர்வீஸ் கமிஷனுக்கு தேர்ந்தெடுக்க சர்க்காருக்குத்தான் சமத்துவ நோக்க அறுகதை இல்லையா? என்று கேட்கிறேன். ஒரு அங்கத்தினர் City-ல் உள்ளவர்களில் ஒருவரைத்தான் அண்மையில் டிபுடி கலெக்டராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறதென்று சொன்னார். கிராமத்திலிருந்து வருபவரை அதற்கு தேர்ந்தெடுக்கக்கூடாதா? காரணம் மர்மமாக இருக்கிறது. நிற்க, தாழ்த்தப்பட்டோர் என்பதற்காக கனம் சபாநாயகர் அவர்கள் அறிவிலும், ஆற்றலிலும், திறமையிலும் குறைந்திருக்கிறாரா? மடாதிபதி இலாக்காவும், மற்ற இலாக்காவும் வைத்திருக்கும் என் இனத்தைச் சேர்ந்த கனம் பரமேஸ்வரன் அவர்கள் மந்திரியாக இருக்கிறார்கள். ஒழுக்கத்திலும் ஆற்றலிலும், செயலாற்றும் தன்மையிலும் அவர் என்ன குறைந்திருக்கிறார்? இதை எல்லாம் பார்த்தால் மனதிற்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது. அவரை விதை நட்டு, கொடி வந்தவுடன் குச்சி நட்டு பந்தல் போட்டு வளர்ச்சிக்கான வெளி ஆடம்பரங்களைச் செய்துகொண்டே ஒருவருக்கும் தெரியாமல், வேரில் வென்னீர் ஊற்றிக்கொண்டிருப்பதுபோல்தான் ஹரிஜனங்களுடைய முன்னேற்ற வளர்ச்சி காரியங்கள் இருந்து வருகின்றன. இதை உணர்ந்து நடந்துகொண்டால்தான் நாமும் நாடும் முன்னேறமுடியும். இரண்டாவதாக, ஹரிஜன் welfare ஆபீசர்கள் ஜில்லாவாரியாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தபாலாபீசுகளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களாக எதுவும் செய்வதற்கு அதிகாரம் இல்லை. கலெக்டர் நல்லவராக இருந்தால் சில அரசாங்க உத்திரவுகள் நிறைவேற்றப்படுகிறதே தவிர, welfare ஆபீசர்களால் காரியங்கள் யாதும் செய்வதற்கில்லை. என் நண்பர்கள், சிலர் ஹாஸ்டல்களைப்பற்றி பேசினார்கள். சட்ட சபை மெம்பர்கள், M.L.C. க்கள், பார்லிமெண்ட் மெம்பர்கள், ஜில்லா ஹரிஜனக் கமிட்டி மெம்பர்கள், மாகாண ஹரிஜனக் கமிட்டி மெம்பர்கள் ஆகிய இவர்கள் பகல் உணவு காண்ட்ராக்ட் எடுப்பதாலும் ஹாஸ்டல் நடத்துவதாலும் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே இவர்கள் சம்பந்தப்படக்கூடாதென்று சட்டம் செய்தாலொழிய அரசாங்கத்தார் கொடுக்கும் பணம் ஏழைக் குழைந்தைகளின் வயிற்றுக்குப் ஒழுங்காகப் போகாது.

5-55 p.m.

[Sri T. V. Sannasi] [11th March 1955

கொடுக்கிற பணத்திற்கு ஒழுங்காக வேலை நடக்கிறதா என்று பார்க்கும் அக்கறை கவர்ன்மெண்டுக்கு இருந்தால், ஹரிஜனங்களுக்கு பேருபகாரமாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, we have been discussing a subject on which there was no difference of opinion. But agreement on an issue is not the solution of the problem. Indeed, the problem before us today is a very stupendous one. It has a social legacy not of centuries but of thousands of years. We very well remember the days when learned pundits indulged in discourses and debates whether untouchability had the sanction of the Vedas and Sastras. But fortunately for us, those days are gone. We are moving slowly but steadily. The movement is perhaps slow because it is a movent upwards. Sir, our Prime Minister characterised the caste system as class pertified and we know he is waging a regular crusade as it were against the caste system that prevails in the country. Whatever the benefits and advantages of the caste system in ancient times might have been, we all know that it has outlived its purpose and we are convinced that something substantial must be done for the uplift of our unfortunate brethren. Sir, in other words, the problem of Harijan uplift is not a problem of the head but of the heart. What I mean is that we are intellectually convinced that we are right, but we have our hearts which have not been able to adjust to the changing circumstances. That is why certain feelings were expressed and certain charges were levelled against Caste Hindus as well as against the Harijans. As a matter of fact, just as there are caste distinctions even among the Caste Hindus, there are caste distinctions and sub-divisions among the Harijans also. That is why I say that though every one of us feels that our cause is right and just, as we have been bred up in such a legacy of social system for years, our hearts go only very slowly in adjusting to the changed circumstances in spite of our strong conviction. As I said, we are moving in the right direction and even faster than many of us expected. Our Kerala was once characterised as a lunatic asylum by our great Vivekananda. If anybody were to visit that part of the State today, he will be surprised at the progress that has been made. We know that untouchability is fighting its last stage of the battle in temples and many people are trying to take advantage of the loopholes in the Temple Entry Act to deny admission of Harijans into the temples. However, as more than one hon. Member has expressed on the floor of the House, there are enough laws for the protection of Harijans. In other words, their status is equal in the eye of the law. But, due to certain social disabilities and economic inequalities and also a certain amount of lukewarmness in the enforcement of the laws, it is true the effects are not patent to-day. I should say that there must be a strict enforcement of the laws. I hope the Government will bestow more attention to this aspect of the question. Sir, of course in this material world, nothing can be achieved without money and that is why probably one and all of us pleaded for more allotment for this important purpose. But then, there are certain social problems, a solution for which cannot be

11th March 1955] [Sri M. Narayana Kurup]

completely found merely in terms of money. We require intense propaganda on this subject among Caste Hindus as well as among Harijans. Many of the hon. Members pleaded for inter-marriages. Even greater persons have pleaded for that. But, in order that it may be successful, a proper atmosphere must be created and it cannot be done by any inducement unless we prepare and educate the people for that purpose. When I say that greater propaganda is necessary among Harijans, I am not exaggerating the fact. The hon. Member who spoke just before me made an impassioned plea that the whole World would be theirs provided they stood united. I agree. But, how can that unity come? It will not come of itself unless we do great propaganda for it. There is one other matter to which I wish to make a reference. As regards the subsidies and other help given by the department, I wish to point out that there has been a historical growth. Some of the Harijan institutions in certain districts have been working better than those in the other districts. The other day, while answering a question on the floor of the House the Hon. the Minister for Harijan Welfare said that the strength of the hostels may not be increased beyond 20 per cent. I request the Hon. Minister to consider the claims of each district separately as otherwise some of the backward districts will be hit very hard. I have carefully analysed the amounts that are being spent under various heads in our district. Sir, I am not pleading for any equitable or per capita division. I am putting forth this plea only in the interests of the Harijans. The amounts spent in our district under various heads ranges between 1½ to 3 per cent, because there are not as many institutions there as there are in other districts. On an equitable basis, it will work to 8 or 9 per cent. This is what I wish to say on the general question. 6-05 p.m.

"With regard to the enforcement of the law in regard to a particular temple, I wish to say a few words. There was a suit in which the Court decreed that it was a public temple. We know that generally when a particular case is a fit one for filing appeal and especially when there is injury done to the other party, the appellate Court can grant a stay. In this case, the appellate court is the High Court. But, no such stay has been granted. Even under these circumstances, the Government did not provide protection for the Harijans in the exercise of their legitimate right. It is not my intention to magnify this incident. I am just mentioning this only to point out that the Government are not doing their very best to put courage into the Harijans and to enforce the laws properly and strictly wherever it is necessary. That is the symptom of the disease. This disease should not be allowed to spread. For this purpose, the laws should be strictly enforced. We know that the enforcement of the law has its limitations. Sir, we can prevent an artiste from making a performance, but we cannot force him to make a good performance. It is only in certain spheres that we can render help. The hon. Members of course want the Government to do their very best and when the Government for some reason or other are not able to do their very best, the hon. Members

[Sri M. Narayana Kurup] [11th March 1955

level the charge that the Government are not enforcing the laws strictly and properly. However, I am glad that the ground has been prepared and as years roll on, we will be able to make not arithmetical progress but geometrical progress."

THE HON. SRI B. PARAMESWARAN :—" Mr. Speaker, Sir, thirty-eight hon. Members took part in the discussion of this Demand. The allotment of six hours for this Demand shows the interest which the Government are evincing in the uplift of Harijans and Backward Classes and the large number of the members that took part in the discussion shows that they are equally interested in it. Many of the criticisms levelled against the Government would not have been levelled if only the Members had understood that this is a huge problem which bristles with several difficulties on account of its social, economic and political aspects. Where several social reformers tried and failed, Mahatma Gandhi succeeded to an appreciable extent in creating that atmosphere which is very necessary for the passing of special Acts at the Centre and in the States. In spite of the fact that a great person like Mahatma Gandhi made Harijan uplift his life's mission, the problem has not received that amount of impetus which it should have received, after his death. Non-official organizations which were very active and prominent during the days of Mahatma Gandhi failed to do their duty by these communities. The Government alone were not able to do much with the limited resources that were available, in spite of their determination and earnestness to uplift the members of these communities. Unaided by private enterprise, no Government will be able to implement the various Acts of the Legislature and create a favourable atmosphere for carrying on work on behalf of these communities. In spite of the difficult ways and means position of the Government, the amount allotted for the uplift of Harijans and backward classes is steadily increasing. Though the amount has not increased to any appreciable extent, yet it is sufficient to meet the necessary expenditure on the various items of work on behalf of these communities. The amount spent before the partition of this State was Rs. 10,25,00,000. But the amount spent now, that is after partition, is Rs. 1,09,00,000. The hon. Deputy Leader of the Opposition and one or two other Members pointed out that the Government wanted to show that the amount spent on Harijan uplift alone was one crore odd rupees. That is not at all the intention and it was never the intention of the Government in the past also. Till 1950, Harijan Uplift Demand was included in the Demand for Labour and Factories. I suggested that the two items should be separated and that the Minister in charge of Harijan Uplift should be allowed to move the Demand for Harijan Uplift. There is no jugglery in figures. We do not want to create the impression that we are spending more than what we are actually spending. The budget figures are there and one can easily go through them. Several Members said that only Rs. 19,00,000 were spent on Harijans. On the supply of mid-day meals alone we are spending not less than Rs. 18,00,000. Therefore nobody need imagine that we are spending only Rs. 19,00,000 on Harijans. An expenditure of Rs. 1,09,00,000 after the partition of the State is

11th March 1955] [Sri B. Parameswaran]

really appreciable. Members need not be worried with regard to the amount provided. For the sinkinng of wells, we have reserved nearly Rs. 40,00,000. After going through the figures of expenditure for last year, we have increased the allotment for grant of scholarships, boarding grants, etc. No Member need be worried that we are going to reduce the expenditure on these items. There is no use of simply reserving one crore of rupees as we did in 1946, drawing money out of it and then reimbursing it next year. On paper we can show that we have reserved not one crore of rupees but even five crores of rupees. But that will not serve our purpose. The Government are anxious to incur the expenditure that is reasonably needed for the uplift of these classes. Therefore the Government have provided Rs. 71,35,200 for providing scholarships, boarding grants, mid-day meals, etc., for the Harijans. On Criminal Tribes, Rs. 4,50,000 have been spent. We are incurring all the expenditure necessary for their uplift. The amounts set apart for the uplift of backward classes is as follows :—

Year.	Amount.
	RS.
1953–54	9,50,000
1954–55	10,50,300
1955–56	11,50,200

The figures show that there is a progressive increase in the provision made for the amelioration and improvement of the condition of backward classes. As Sri M. Narayana Kurup rightly pointed out, it is not money that matters so much. The Government are determined to see that these classes are uplifted. The Government are there to protect the interests of the backward, the weak and the oppressed. With this firm determination, the Government are chalking out certain plans or programmes.

" It may not be possible for me to reply to all the points raised by as many as 38 hon. Members of this House. I would divide the points into three or four broad categories and reply. The Deputy Leader of the Opposition said that we did not furnish figures with regard to the number of Harijan Graduates and the number of Harijans holding positions of trust and responsibility in the Government. It is not possible to gather the information. I have been in charge of the Harijan Welfare Department for nearly three or four years and I can say with confidence that, as far as the Harijan Community is concerned, there are not less than 3,000 Graduates, there are two District Medical Officers, about 16 or 17 listed post-holders, 3 or four of whom are working as Heads of Departments in this Government and the rest are occupying key positions in the Government of India. Besides these, there are several Deputy Collectors, Deputy Superintendents of Police and others. Merely because I happen to be a Minister or somebody else occupies a prominent position, the community as such cannot be said to have progressed. The community can be said to have progressed when they are educationally and economically advanced and are able to move freely and inter-mingle with the other sections of the population. Only when an atmosphere is created in which Harijans and

[Sri B. Parameswaran] [11th March 1955

non-Harijans eat together, sit together, work together and live together without any distinction whatsoever, the community can be said to have progressed.

6-20 p.m. "Sir, some of the hon. Members of this House pointed out that differences exist in the Harijan community. A growing community like the Harijan community will have some differences. As they progress—human nature being what it is—the sub-sections in that community will try to assert themselves. If they have done so, that should not be pointed out as an excuse on the part of the Caste Hindus to say that they are divided among themselves and therefore they must unite. After all, if they have done so, they only copy the system that is existing in the Caste Hindu system. I do not mean to say that that system should continue to exist in the Caste Hindu community and other communities. What we are anxious to establish is a society wherein there would be harmonious and homogenous relationship existing between various communities in this country. But it is necessary, in order that the work of the Government may proceed, that these differences must be thrown overboard as quickly as possible.

"With regard to house-sites, I may tell you that before 1949 there was a rule that half the cost of the house-site should be met by the Harijans. On 12th November 1949, a Government Order was issued by which house-sites were asked to be given to Harijans free of cost. Therefore to say that even after 30 years Harijans have not been provided with thousands and thousands of house-sites, I think, is not the proper way of reading the work that has been done by the Government. Of course, one can ask, the Britishers were ruling this country for 200 years and what did they do? Sir, from the year 1946 to 1949 the Government had been thinking over this question of providing house-sites for Harijans and after careful consideration they issued the order in 1949 that the house-sites should be given to Harijans free of cost. The process is a cumbersome and laborious one. Therefore, I agree that we could not proceed speedily in the matter of acquisition of house-sites. But in several cases we have issued instructions to Collectors to apply emergency provisions also wherever necessary. Why is the delay? Is it due so much to the attitude of the Government? I agree that in certain districts officers might not have been so enthusiastic about this work. At the very outset, they might not have been enthusiastic over the rural welfare work but now they are very earnest and sincere. Now that the Comunity Project and National Extension Service Schemes have come into force, they are trying to do their best in this work. It is also due to the apathy of the so-called Caste Hindus. That fact cannot be denied. We must assess the work of the department with that background. At every stage, we have to fight this caste system. Some time ago there was a demand that officers should be appointed only from the Harijan community. Therefore, the Government have upgraded the Deputy Tahsildar cadre to the Deputy Collector cadre. In the districts, they have appointed District Welfare Officers from the Harijan community. There were lot of complaints in respect of this matter. But some

11th March 1955] [Sri B. Parameswaran]

of the Harijans were not willing to occupy these posts and therefore we had to appoint persons from the backward community also. Now, I think, the only solution is to entrust this work to the Revenue Divisional Officers of the various districts who will assist District Welfare Officers so that the work connected with the acquisition of house-sites may proceed rapidly.

"With regard to Malabar, hon. Members have been very anxious that house-sites should be acquired and assigned. As I explained on the floor of the House on a previous occasion, a Special Officer has been appointed for that purpose. He will take charge of his office on 1st April this year. Also as I promised I am visiting Malabar shortly and I shall try to do my best to give a drive to the officers there. Also I will call a small conference of M.L.As. in the district and other workers interested in this work and all of us can sit together and get over the peculiar difficulties that are existing in Malabar. As the hon. Member, Sri Narayana Kurup, has pointed out that though the progress there has not been admirable when we consider the present state of affairs in Malabar, we can say modestly that there has been some progress and we cannot deny it.

"With regard to employment, I have been receiving complaints that here and there the cases of Harijans and backward classes have not been properly looked into. Therefore, we have now thought of opening a separate section in the Harijan Welfare Department to collect statistics regarding the number of educated unemployed persons. This section will work in close co-operation with the Employment Exchange. At least we will know how many graduates and qualified persons are there. The Director of Harijan Welfare can recommend certain deserving candidates to certain posts.

"Sir, the relationship between Caste Hindus and Harijans have not been so cordial in certain villages. Therefore, the Government propose to revive the Vigilance Committees which were in existence some time ago. These Vigilance Committees will consist of members belonging to both the Harijan and other backward communities so that they may watch the interests of their communities.

"Sir, there are four districts where Tahsildars are in charge of the Harijan Uplift work. We want to upgrade the cadre of these officers and post Deputy Collectors in the districts like Coimbatore, Salem, North Arcot and Madurai. These officers will be able to speed up the land acquisition work.

"Sir, a number of complaints have been received with regard to the mismanagement of hostels. Of course, there has been mismanagement in a few hostels. The Government want that the amount allotted to these hostels is spent properly and, therefore, we want to appoint a Special Officer to go into this matter. As soon as he is appointed and his report is submitted, we will see how far we can change the hostel rules. It is true that the amounts sanctioned towards boarding and scholarship reach the students a bit late, late by two or three months. The difficulty is due to rules and, therefore, we want to amend them in such a way as to help the students in getting their scholarships in time.

[Sri B. Parameswaran] [11th March 1955

6 30 p.m. "A number of hon. Members spoke about the need for the representation of Harijans on the Service Commission. The Government will sympathetically consider the suggestions made in this regard when the time for filling up a vacancy arises next.

"With regard to wells, I myself wrote letters to all the hon. Members in order to find out the number of wells that may be necessary in their respective constituencies. This may also help them to visit their constituencies, whether they are Congressmen or non-Congressmen, and for all of us to feel that we have done something for the poor villagers before we stand for the next elections and I consider that that something should be the provision of drinking water facilities in our villages. Therefore, I wanted that every hon. Member should give me a list of villages where drinking water wells are necessary. I have received some lists from some hon. Members. I have personally written letters to the Collectors forwarding these lists to them. I hope, Sir, the hon. Members will not misunderstand me if I request them to contact the Collectors now and then and see that the lists given by them are taken up for execution immediately. We expect that before 1957 every village would have a drinking water well.

"As I said, Sir, we are very anxious to see that members of the Backward Classes and the Harijan community are brought to the level of other advanced communities. As the hon. Member Sri M. Narayana Kurup pointed out and to a certain extent the Deputy Leader of the Opposition also, the co-operation of the hon. Members of this House and that of the general public are necessary because the programme is not so easy as some hon. Members think it to be. Sir, in 1936 even a permissive piece of legislation like the Temple Entry Bill sponsored by the late Sri M. C. Rajah could not be pushed through because there were a lot of people who opposed this Bill. But, to-day both in and outside the Legislature every hon. Member is vying with one another to champion the cause of this community. (Interruption.) But, as the hon. Member Sri M. Narayana Kurup says there may be somebody outside who may be opposing these forward measures but I do not really think so. There are only a very few villages where orthodoxy still persists in spite of propaganda and there are certain people who refuse to convert themselves socially but I may tell you, Sir, that very nearly the country has got itself converted socially but whether there has been that co-operation as regards the upliftment of these communities economically is a different question. As the hon. lady Member Dr. Soundaram Ramachandran pointed out not only social unliftment but economic upliftment is also necessary in order that these communities may march forward and play their proper part in shaping the destiny of this country.

"Again, Sir, apart from the propaganda that we may carry on for the removal of untouchability, it took nearly thirty years even for a great person like Mahatma Gandhi to create a proper atmosphere. It is therefore necessary that every hon. Member of this House should co-operate with the Government. I know that some hon. Members have criticized the Government and I take it that it

11th March 1955] [Sri B. Parameswaran]

is only their earnestness to see that this Harijan community is uplifted that has made them do so and also their desire to see that the Government are spurred on to further efforts. At the same time, on behalf of the Government, I request the hon. Members to extend that amount of co-operation which is very necessary and without which we cannot push on with our programme whether it is a question of wells, or house-sites or other improvements for the benefit of this community. I do not think it is necessary for me to continue my speech except to thank the hon. Members. Most of them have given very good suggestions and I will bear them all in my mind and by next year I hope the hon. Members will have the satisfaction of joining me in thanking the Government for what little they propose to do." (Hear, hear.)

(The hon. Member Sri K. C. Gopalan Unni stood up in his seat.)

MR. SPEAKER :—" I regret that I cannot convert this into a sort of question hour. I wish to know whether the hon. the Deputy Leader of the Opposition is withdrawing his Cut Motion or not."

SRI M. KALYANASUNDARAM :—" குடியிருப்பு மனையிலிருந்து அகற்றப்படுவதை தடுக்கவேண்டுமென்று குறிப்பாக சொல்லி வந்தேன். அரசாங்க உறுதியளிக்காததால நான் அதை வாபஸ் வாங்கவில்லை."

THE HON. SRI B. PARAMESWARAN :—" I am giving this assurance to the hon. the Deputy Leader of the Opposition that we have issued instructions not to evict persons unless alternative sites are given to them. This Government Order is still there and all that is necessary is to ask the authorities to see that this order is implemented. I shall also issue instructions to the authorities and call for reports as we are doing in regard to house-sites where we have called for periodical reports to be sent to the Board of Revenue and which the Government are reviewing. Simalarly, I shall also give instructions to all the Collectors to bring to the notice of the Government cases wherein they find it difficult to find alternative sites for those people who are evicted. With this assurance, I request the hon. the Deputy Leader of the Opposition to withdraw his Cut Motion."

SRI M. KALYANASUNDARAM :—" ஒரு சந்தேகம். மந்திரி அவர்கள் குறிப்பிடக்கூடிய G.O. ஆனது நகரங்களிலிருக்கும் சேரிகளைப்பற்றித் தான் குறிக்கிறது. இது கிராமங்களில் அமுல் நடத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, every case has to be looked and has to be examined on its merits and if the hon. the Deputy Leader of the Opposition brings to my notice cases wherein people have suffered on account of this eviction, I shall immediately take steps to see that proper remedy is afforded."

SRI M. KALYANASUNDARAM :—" Sir, both the Hon. the Minister for Revenue in whose hands also the matter partly lies and the Hon. the Minister for Finance are alongside the Hon. the Minister for Religious Endowments and Harijan Welfare and I hope that they will all carry out this assurance and in that hope I do not press my Cut Motion." (Loud applause.)

[11th March 1955

(The hon. Member Sri K. C. Gopalan Unni again stood up.)

MR. SPEAKER :—" It is already 6-35 p.m. Is it a point of order that the hon. Member is going to raise? "

* SRI K. C. GOPALAN UNNI :—" Yes, Sir. Many hon. Members have raised the question of the attitude of the police towards the Harijans. It is a very important matter and the Hon. the Minister has not mentioned anything about it."

MR. SPEAKER :—" It is not a point of order. Perhaps, the Hon. the Minister for Finance who is in charge of the Police Department will reply to this point when the Police Demand is taken up. I hope the House gives permission to the hon. the Deputy Leader of the Opposition to withdraw the Cut Motion."

The Cut Motion was, by leave of the House, withdrawn.

MR. SPEAKER :—" The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 1,09,36,600 under Demand XXII—Harijan Uplift.' "

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER :—" I adjourn the House to to-morrow till 8-30 a.m."

The House then adjourned.

LIBRARY 21 DEC 1955 STATE LEGISLATURE, MADRAS